66

# எவரெஸ்டு



66
1·35
U8·87E
N53
168053

# எவரெஸ்டு

FICE O ... RAR OF BOOKS

திருத்தம் செய்து பதிப்பிக்கப் பெற்றது

ஆசிரியர்

**வித்வான், வை. சுப்பிரமணியன்**

தலைமைத் தமிழாசிரியர்

நகராண்மை உயர்நிலைப் பள்ளி, சேலம்

**வேந்தன் பதிப்பகம்**

குகை, சேலம்

பதிப்புரிமை ] 1954 [ விலை ரூ. 0-14-0

முதற் பதிப்பு 1953
திருத்திய பதிப்பு 1954

ARCHIVES' LIBRARY
108053
MADRAS-600 008

எஜியென் பவர் பிரஸ், கடைவீதி சேலம்

# முகவுரை

மனிதன் எவரெஸ்டின் உச்சியில் ஏறி நின்று தன் முயற்சியின் வெற்றியை 1953-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி நிலை நாட்டினான். அதன் மீது முதலில் ஏறி நின்ற பனிப்புலி செர்ப்பா டென்சிங்கு நோர்க்கே முயற்சியின் வெற்றிக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

மலையேறுதலும், அதன் பொருட்டுப் பெரும் பொருள் செலவழிதலும், சிலர் வீண் என்று கருதுகின்றனர். அறிஞர்கள் கண்ட புதுப்புதுக் கண்டுபிடிப்புகள் முதலில் பயனற்றவை எனக் கருதப்பட்டதும், காலப்போக்கில் அவற்றின் சிறப்புகள் வெளிப் பட்டதும் உலகம் அறிந்ததே. பூமியின் மிக ஆழத்தில்-கடலடியுள்-புதையுண்டு கிடந்த இமயப்பகுதிப் பாறைகளில் என்னென்ன செல்வங்கள் உளவோ, யார் அறிவார்கள்? இமாலயப் பொக் கிஷத்திற்கு வழிகாட்டிகளாயிருந்த மலையேறிகளின் பெருமை அன்றுதான் வெளிப்படும்.

முயற்சிக்குத் தூண்டுகோலாக விளங்கும் இந்நூலை எழுது மாறு தூண்டிய வேந்தன் பதிப்பகத்தாருக்கும், இந்நூல் எழுதுங் கால் உடனிருந்து இன்றியமையாத உதவிகளைச் செய்து வந்த துரை-பழனிவேலன் அவர்கட்கும், எவரெஸ்டு சிகரத்தின் வர லாற்றை அளித்துதவிய **இந்திய யூனியன் கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆசாத் அவர்களுக்குப்**, இந் நூலை எழுதக் கருவிகளாக இருந்த நூல்களை எழுதிய ஆசிரியர்களுக்கும், இப் புத்தகத்தை அச்சிட்டு உதவிய எஜியன் அச்சகத்தாருக்கும் எனது நன்றி.

ஆசிரியர்களும், கல்வித் துறையினரும் எனது இச் சிறிய முயற்சியை மேலும் மேலும் ஊக்குவிக்க வேண்டுகிறேன்.

சேலம்
5—11—53

**வை. சுப்பிரமணியன்.**

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இணையற்ற இமயம் ... | 1 |
| 2. | எவரெஸ்டு ... | 9 |
| 3. | முதல் முயற்சி ... | 21 |
| 4. | அடுத்த முயற்சிகள் ... | 33 |
| 5. | இறுதி முயற்சி ... | 39 |
| 6. | பாராட்டும் பரிசளிப்பும் ... | 57 |
| 7. | இமயமும் தமிழரும் ... | 67 |
| 8. | இமாலய மக்கள் ... | 76 |
| 9. | டென்சிங்கு ... | 87 |

# மதிப்புரைகள்.

## THE HINDU

This is a well-written good book on a current topic of great importance to the world. India was a field of sporting ground for foreigners till now and Indians were only burden-bearers for them. But Sherpa Tensing Norkay revealed to the world that the Indian was in no way inferior to any other in the world in his capacity for adventure or for endurance. This story is attempted in this book with a fair amount of success. The indomitable Everest is described and the several expeditions which were sent to surmount it are described in brief. That the first person to discover the great mountain and to give a survey of it from a distance was one Radha Nath Sikhdar is told with great warmth. The northern and southern ways to the top are described. The perils on the way are aptly narrated. Col. Hunt's expedition is dealt with at greater length and Tensing's part in it is fairly given. The chapter on "Imayamum Tamizharum" is very interesting as it tries to prove that "Imayam of Tamil Literature is no other than Mount Everest and that our ancient Tamils under their kings, have climbed up the Mount. The chapter on 'Imalaya Makkal' gives a description of the people of the great range and of their modes of life while the chapter on Tensing gives an account of the achievements of the great hero. Thus the book is a compact account of the epic of the Himalayas and the manner of presentation of the subject and the language used are good. **It can well be placed in the hands of our youngsters.**

(30-5-54.)

## கலைக்கதிர்

உலகத்தின் உச்சியாக விளங்கும் எவரெஸ்டு முடியை எய்த மேனாட்டவர் பலமுறை முயன்றனர். இறுதியில் நம்நாட்டு வீரர் டென்சிங், ஹிலாரி என்பவரோடு உலகத்தின் உச்சியை அடைந்து அழியாப் புகழ் எய்தினர். இவ்வீரப் பெருமகனது வாழ்க்கை வரலாற்றினையும் அரிய பண்புகளையும் தெளிவாக இந்நூல் விளக்கு கிறது. மேலும் இதன்கண் மலைகளின் தோற்றமும், இமயமலையின் அமைப்பும் எழிலும், எவரெஸ்டு சிகரத்தை அடைய மேனாட்டவர் மேற்கொண்ட பல பெருமுயற்சிகளும் செர்ப்பாக்கள், திபெத்தியர் கள் முதலிய இமாலய மக்கள் வாழ்க்கை முறைகளும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. பழங்காலத்தில் நம் சேர, சோழ, பாண்டியப் பெருமன்னர்கள் எவரெஸ்டு முடியை அடைந்து வெற்றிக் கொடியை அங்கு நாட்டினர் என்ற உண்மையைத் தக்க சான்று களுடன் திறம்பட இந்நூலாசிரியர் நிறுவியுள்ளார்.

இந்நூல் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுவ தொன்று. இந்நூலைப் படிக்கும் இளஞ் செல்வர்கள் தாமும் டென்சிங்கைப் போல மலையேறவேண்டுமென்ற வீரஉணர்ச்சி பெறு வார்கள் என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற வீரஉணர்ச்சியை ஊட்டும் நூல்கள் நம் தமிழகத்திற்குப் பல தேவை.

இவ்வழகிய சிறுநூலை எழுதி நம் தமிழகத்திற்கு உதவிய புலவர் திரு. வை. சுப்பிரமணியன் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம். (1-7-54)

## வீரகேசரி

மண்ணுக்குள் பெரிய இமயமலையின் மிக உயர்ந்த 'எவரெஸ்டு' சிகரத்தை எதிர்த்து மனிதன் அடைந்த வெற்றி நீங்கள் அறிந்ததே. அதன்மீது முதலில்ஏறிநின்றவர் பனிப்புலி டென்சிங்கு எனச் சொல்லவேண்டியதில்லை. இச்செய்திகளைபிற்பகுதியிலும்,முதலில் இமயமலை வரலாறு, எவரெஸ்டு சிகரத்தை அடைய பலர் மேற் கொண்ட முயற்சிகள், இமயத்திற்கும் தமிழர்களுக்குமிருந்து வந்த தொடர்பு முதலிய விஷயங்களைமுற்பகுதியிலும் கொண்டுள்ளது இந் நூல். 'முயற்சி திருவினை ஆக்கும்' என்பதற்குச் சான்றாகவும்,

'துணிச்சலுடன் செயலாற்றும் சிறுவர்களுக்குத்தான் வெற்றி கிட்டும்' என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் விளங்கும் சம்பவத்தைக் கொண்டுள்ள இந்நூலை மாணவர், மாணவிகளும் அவசியம் படிக்கவேண்டும். பள்ளியில் உப பாடப்புத்தகமாக வைக்க இது பயன்படும். (3-1-54)

## சுதேசமித்திரன்

உலகிலுள்ள மலைகளுக்குத் தந்தையாக விளங்கும் இமயமலையின் உச்சியாகிய எவரெஸ்டை மனிதன் எட்டிப்பிடிக்க முயன்றான். தன்னை அளக்க மனிதனால் முடியாது என்ற பெருமிதத்துடன் மலை பின்னும் நிமிர்ந்து நின்றது. ஆனால் காணாதவற்றையும் கண்டு பிடிக்கும் ஆற்றல் படைத்த மனிதன் அம்மலையின் உச்சியை யடைந்து தன் வெற்றிக் கொடியை நாட்டிவிட்டான். மனிதனால் ஆகக்கூடாத காரியம் இல்லையென்பதையே இது காட்டுகிறது. எவரெஸ்டை எட்டிப்பிடிப்பதற்கு முயற்சித்த வரலாற்றையும் இறுதியில் அம்முயற்சி வெற்றியடைந்த வரலாற்றையும் இப்புத்தகம் நன்கு விளக்குகிறது. இவ்வெற்றிக்கு முக்கியகாரணமாக இருந்த டென்சிங்கின் வரலாறும் இந்நூலில் காணப்படுகிறது. இந்நூல் மாணவர்களுக்கு ஏற்ற துணைப்பாடமாக வைக்கும் தகுதியையுடையது. (16-1-54)

## ஈழகேசரி

'அளக்கலாகா அளவும் பொருளும் துளக்கலாகா நிலையும் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே' என்ற மலையிலக்கணத்திற்கு முற்றிலும் பொருத்தமானது உலகில் இமயமலை ஒன்றேயாகும். நூறு ஆண்டுகட்கு முன்னர் இதன் உயரம் 29002 அடி எனக் கணக்கிடப்பட்டது. இப்போது இதன் உயரம் 29141 அடி என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இமயத்தின் சிகரத்தை யடைவதற்கு முன்னர் பல கோஷ்டியினர் முயற்சித்தவிடத்தும் அதன் மீது ஏறி நின்ற பெருமை 'பனிப்புலி' ஷெர்ப்பா டென்சிங் அவர்களுக்கே கிடைத்துள்ளது. இவரும் கேணல் ஜோன் ஹன்ட் என்பவரும் சென்ற வருடம் மே மாதம் 29-ந் தேதி இமயச் சிகரத்தின் மீது தங்கள் வெற்றிக் கொடியை

நாட்டினர். டென்சிங் நேபாளத்தைச் சேர்ந்தவர். இளம் வயதிலேயே மலையேறுவதில் நாட்டங்கொண்டு அத்துறையிற் பயிற்சி பெற்று வந்தார். இவர் புத்த மதத்தினர். கூர்ந்த மதியும் திடமானதும் பொருத்தமானதுமான உடற்கட்டுமுடையவர். டென்சிங் என்றால் அறிவுடையவர் என்றும் புலி எனவும் பொருள் படும். இத்தகைய வீரர் இமயமால் வரையின் மணிமுடிமீது இந்தியக்கொடியைப் பறக்கவிட்டுப் பாரதத்துக்குப் பெரும்புகழ் ஈட்டிக் கொடுத்துள்ளார். இவரது வெற்றியைக் கூறும் இந்நூலில் இமயத்தைப்பற்றியும் தமிழரைப்பற்றியும் இமாலயமக்களைப் பற்றியும் மலையேற்றம் பற்றியும் சுவையாக எழுதப்பட்டுள்ளது. இது மாணவர்களுக்கு உபயோகமானதொன்று (10-1-54)

**தினமணி**

இமய மலைச் சிகரம் எவரெஸ்டின் உச்சியை எட்டிப்பிடிக்க வெகு காலமாக முயற்சி நடைபெற்று வந்திருக்கிறது. முதன் முதலாக 1931–ஆம் ஆண்டு மே மாதம், லண்டன் ராயல் பூகோளக் கழகத்தினர் சார்பிலும், ஆல்பைன் கழகத்தினர் சார்பிலும்அமைக்கப் பட்ட கமிட்டி இம்முயற்சியை மேற்கொண்டது. ஆனால் இக்கமிட்டியின் முயற்சி தோல்வியுற்றது. இவ்வாறு பல கோஷ்டியினர் முயன்று வெற்றிகாணாது கஷ்டப்பட்டிருக்கிறார்கள். சிலர் தங்களுடைய உயிரையும் இம் முயற்சியில் தியாகம் செய்யவேண்டியதாயிற்று. இறுதியாக 1953-ம் ஆண்டில் லண்டன் ராயல் பூகோளக் கழகத்தினர் இமாலயக் கமிட்டி ஆங்கிலக் குழுவொன்றை ஏற்பாடு செய்தனர். கர்னல் ஜான்ஹண்ட் இதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். இதில்தான் டென்சிங்கும் அழைப்பிற்கிணங்கி சேர்ந்து சென்றார். இவர்களுடைய கூட்டு முயற்சியால்தான் இறுதியாக வெற்றி ஏற்பட்டது. டென்சிங்கும் ஹிலேரியும் மலையின் உச்சியைஅடைந்து புகழைநிலைநாட்டினார்கள்.

இம் முயற்சிகளையும் மற்றும் விவரங்களையும் மிகவும் சுவாரஸ்யமாக விவரித்து இப் புத்தகம் எளிய இனிய நடையில் எழுதப் பட்டிருக்கிறது. சில படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புத்தகத்திற்கு நல்ல வரவேற்பு இருக்குமென்பதில் ஐயமில்லை.

(5-12-53.)



இணையற்ற எவரெஸ்டு

# எவரெஸ்டு

## 1. இணையற்ற இமயம்

**உலகம்**

நாம் வாழும் இவ்வுலகம் சூரியனிலிருந்து தோன்றியது. கதிரவனிடத்திலிருந்து வெளிப்பட்ட இவ்வுலகம் நெடுங்காலம் ஓர் தீப்பிழம்பாகவே வான வெளியில் சுற்றிக்கொண்டிருந்தது. நாளடைவில் அது வெப்பம் நீங்கிக் குளிர ஆரம்பித்தது. மேற்பகுதி ஓரளவு குளிர்ந்தபின் தாவரங்கள், புழு பூச்சியினங்கள், வெளவால்கள், பறவைகள், விலங்கினங்கள், குரங்குகள் முதலிய உயிரினங்கள் படிப்படியாகத்தோன்றி வளர்ந்தன. பின்னர்தான் மனிதன் தோன்றினன் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இன்று நம் கண்ணுக்குப் புலப்படும் உலகின் மேற்பகுதி குளிர்ந்துதான் இருக்கிறது; ஆனல் பூமியின் உள்ளே குடைந்து அதன் உட்பகுதியைப் பார்த்தால் அங்கு வெப்பநிலை அதிகரிப்பதை உணரலாம். பூமியைத் துளைத்துக்கொண்டு இரண்டுமைல் ஆழம் சென்றால், நீர் கொதிக்கும் அளவு நூறு டிகிரி வெப்பமும், ஏழுமைல் சென்றால் இரும்பைப் பழுக்கக் காய்ச்சும் அளவிற்கு நானூறு டிகிரி வெப்பமும் நிலவுகிறது. அதிக ஆழம் உள்ளே செல்லச் செல்ல வெப்பம் அதிகமாகிறது. பூமியின் மேல் பகுதியிலிருந்து இருபத்தெட்டு மைல் ஆழத்திலும் அதற்கு உள்ளும் ஆதியில்

கதிரவனிடமிருந்து உலகம் தோன்றிய காலத்தில் எந்த அளவு வெப்பம் இருந்ததோ, அதே அளவு வெப்பம் இருக்கிறதாம். 8000 மைல் குறுக்களவுள்ள இந்த பூமி 28 மைல் கனத்திற்குத்தான் குளிர்ந்திருக்கிறது. இன்னும் குளிர்ந்துகொண்டு வருகிறது. சூடு குறையக் குறைய பூமியானது அளவில் சுருங்குமல்லவா? இதனால் பூமியின் மேற்பகுதியில் சில மாறுதல்கள் உண்டாகின்றன.

## இமயத் தோற்றம்

இன்று இந்நிலவுலகம் எவ்வாறு நீர்ப்பரப்பையும் நிலப்பரப்பையும் கொண்டு அமைந்திருக்கிறதோ, இதே போல்ப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் அமைந்திருக்க வில்லை. அப்போது இந்திய ஆப்பிரிக்கப் பகுதிகளை இணைத்த ஓர் நிலப்பரப்பு தெற்கே நீண்டிருந்தது.

தற்கால இந்திய நிலப்படத்தில் காணும் விந்திய மலைக்கு வடக்கே உள்ள நிலப்பகுதிகள் முற்காலத்தில் கடலாகக் காட்சியளித்தன. அப்போது நீர்ப்பரப்பாய் இருந்த அவ்விடங்களில்தான் இப்போது வானோங்கி வளர்ந்துள்ள இமாலயத் தொடர்கள் நிற்கின்றன.

பூமி குளிர்ந்து சுருங்கியதால் வடக்கிலிருந்து தோன்றிய அமுக்க அலைகள், இப்போது இமாலயப்பகுதி யாயிருக்கும் கடலடியிலிருந்த வண்டற்பாறைகளைத் தெற்கில் நிலைத்துநின்ற நிலப்பகுதியின்மீது நெருக்கின. மேற்பரப்பில் இந்த மாறுதல் நிகழ்ந்துகொண்டிருக்கும் அதேசமயத்தில் பூமியின் உட்பகுதியும் குளிர்ச்சி காரணமாகக் குறுகிற்று. பூமி, வெப்பம் குறைந்து குளிரும்போது குறுகும் என்பதை முன்னர் அறிந்தோம். அங்ஙனம் குறுகும்போது பூமியின் அகன்ற வெளிப்புறப்

பகுதியைக் காட்டிலும் குறுகிய உட்புறப் பகுதி விரைவில் குறுகுகிறது. பூமியின் உட்புறப் பகுதி விரைவாகவும் மேற்புறப்பகுதி தாமதமாகவும் குறுகுவதால் மேற்புறப்பகுதிகளுக்கு அடியில் தாங்குதல் இல்லாமல் போய்விடுகிறது. அளவில் சுருங்கிய உட்புறப்பகுதியோடு அளவில் மிகுந்த மேற்புறப் பகுதி பொருந்திப் புது நிலையடையும் போது அப்பகுதியின் மேலிடங்களில் சுருக்கமும் நெளிவுகளும் தோன்றிப் பல மடிப்புகள் உண்டாகின்றன. அத்துடன் மேற்பரப்பின் அமுக்கமும் கூடுவதால் மடிப்புகள் உயர்ந்து மலைகளாக மாறுகின்றன.

சுமார் மூன்றுகோடி ஆண்டுகளுக்கு முன் இத்தகைய பல மடிப்புகள் மிக நீண்டு இணையிணையாகத் தோன்றித் தொடர்ந்து பல நூறு ஆயிரம் வருடங்கள் வளர்ந்து வந்தன. இதன் விளைவாகவே இமயத் தொடர்கள் தோன்றின. அலையலையாக மடிந்து உயர்ந்த நிலப் பகுதிகள் கடல் மட்டத்திற்கு மேல் தோன்றி வளர்ந்தன. அவற்றின் மீது வெப்பமும் குளிரும் மாறி மாறிப் படுவதால் வண்டற் பாறைகள் வெடிப்புண்டு உடைந்து பெருங் கற்களாகவும், சிறு கற்களாகவும், மண்ணாகவும்மாறிமழைநீரால்அரித்துச்செல்லப்பட்டன.

மலைகள் வளரும் வேகம் அழிவு படுவதைக் காட்டிலும் மிகுந்திருந்த காரணத்தால் விரைவில் அப்பகுதிகள் உயர்ந்து வளர்ந்துகொண்டு வந்தன. இவ்வாறு படிப்படியாக உயர்ந்துதான் இமாலயத் தொடர்கள் உருப்பெற்றன.

**ஸ்காட் எலியட்; டி. டபிள்யூ. ஹோல்டர்னஸ்** என்ற ஆராய்ச்சிஅறிஞர்கள் 'இமாலயத்தொடர்கள்கடலுக்குள்

இருந்துதான் தோன்றின. இப்போது சிந்து, கங்கைச் சமவெளிப் பகுதிகள் முன்பு கடலாக இருந்த பகுதியில்தான் இருக்கின்றன. இமயத்திலிருந்து ஓடும் ஆறுகள் வாரிக்கொண்டுவந்து பரப்பிய மண்ணினுல் தான் இன்றைய சமவெளிப்பகுதிகள் தோன்றின, என்று கூறுகின்றனர். இமாலயத் தொடர்கள் கடலுக்குள் இருந்த காலத்தில் வாழ்ந்து மடிந்த உயிரினங்கள் கல் லுருவங்களாகச் சமைந்து இன்றும் இமயப் பகுதிகளில் காணக் கிடக்கின்றன. கடல் மட்டத்திலிருந்து சுமார் பதினேழாயிரம் அடி உயரத்திலுள்ள இமயப் பகுதி யாகிய கர்ப்பியாங்குக்கு அருகிலுள்ள குட்டி என்னும் இடத்திற்குச்செல்லும் வழிகளில் அழிந்து கல்லுருவான கடற்சிப்பிகளும் மீன்களும் காணப்படுகின்றன. இவைகளைச் **சாளக் கிராமங்கள்** என்பர். இவை பூசைப் பொருள்களாகப் பயன்படுகின்றன. இத்தகைய சாளக் கிராமங்கள் இமாலயத் தொடர்களிலுள்ள தர்மாக் கணவாயிலும் உண்டாதுரக்கணவாயிலும் நேபாள இராச்சியத்திலுள்ள முக்திநகரத்திலும் அகப்படுகின்றன.

இமயமலையானது மிக உயர்ந்த ஒரே மலைத் தொடரல்ல. பல்வேறு உயர்ந்த பீடபூமிகளையும், பள்ளத் தாக்குகளையும் கொண்டு அலையலையாக உயர்ந்துள்ள பல மலைத் தொடர்களின் அமைப்பேயாகும். இத் தொடர்கள் வடமேற்கில் ஆப்கானிஸ்தானத்திலிருந்து தென்கிழக்காகப் பர்மா வரை சுமார் ஆயிரத்து ஐநூறு மைல்கள் நீண்டுள்ளன. இதன் அகலம் ஐநூறு மைல். இவற்றைச் சிறியஇமயம், பெரியஇமயம் எல்லை கடந்த இமயம் என்று மூன்று பிரிவாகப்பிரித்துள்ளனர். இவைகளில் கடல் மட்டத்திற்குமேல் இருபத்து

நாலாயிரம் அடியும் அதற்கு மேலும் உயர்ந்துள்ள எண்பத்தாறு மலைச்சிகரங்கள் கூட்டங் கூட்டமாக அமைந்துள்ளன. இவை யாவும் கருங் கல்லாலும், பளபளப்போடு கூடியதும் அடுக்கடுக்கா யமைந்ததுமான படிகப்பாறைகளால் ஆனவை. இவை இமாலயத் தொடர்கள் தோன்றிய காலத்து நிகழ்ந்த வேறு சில இயக்கங்களின் விளைவாக உயர்ந்தனவாகும்.

**சிகரங்கள்**

நில உருண்டை வேறு வேறு வகையான பாறைகள் அடங்கிய பல அடுக்குகள் கொண்டது. இவ்வடுக்குகளுக்கு நடுவில் மிகக் கனமான உலோகப்பொருள் கொடிய வெப்பநிலையில் இருக்கிறது. பூமியின் மேல்ஓடு இரண்டு இலட்சம் அடி கனம் கொண்டது. இந்த அடுக்கில் கருங்கற் பாறைகள் இருக்கின்றன. இந்த அடுக்கு மேகவர்ணக் கற்பாறைகள் கொண்ட உள்ளடுக்கிற்குமேல் அமைந்திருக்கிறது.

இமயத்தொடர்கள் தோன்றி உருவாகும் காலத்தில் கருங்கற்பாறைத் தொகுதிகள் மேலே படிந்திருந்த கடினமற்ற வண்டற் பாறைகளைத் துளைத்துக்கொண்டு வெளிவந்தனவாகக் கருதப்படுகிறது. இவ்வாறு உள்ளிருந்து மேலெழுந்த பாறைப்பகுதிகள், மேலோட்டு மண் பாறை இவைகளின் அமைப்பிலிருந்த மென்மை, திண்மை காரணமாக, வலுக்குறைந்த பகுதிகளில்; மற்றைய பகுதிகளின் அளவுக்குமேல் கூம்பு வடிவில் உயர்ந்து வளர்ந்து நின்றன. இக்கூம்புகள் இயற்கையின் அழிவிற்கு உள்ளாகி அரிக்கப்பட்டு உடைந்தும், சரிந்தும் பிரமிடுகளைப் போல அமைந்துள்ளன.

இவைகளின் நிற அமைப்பு காண்பவருக்கு மகிழ்ச்சியை ஊட்டும். சிவப்பு கலந்த மஞ்சள் நிறங் கொண்ட இப்பாறை அடுக்குகளின்மீது பனித்தூள் படிந்திருப்பது அவற்றிற்கு ஓர் தனியழகைக் கொடுக்கின்றது.

**இமயச் சூழ்நிலை**

இமயமலையின் இயற்கையமைப்பு கேட்போரை அச்சத்திலும் ஆச்சரியத்திலும் மூழ்கடிப்பதாக இருக்கிறது. அங்கு கொட்டு மண்ணைப் போன்ற திண்மையற்ற மண் மலைகளும், உலோகக் கட்டிகளைப் போன்ற கடினமான பாறைகளும், வெயில் நுழைபறியாத இருண்ட வானோங்கிய காடுகளும், சிறு புல் முளையும் இல்லாத மொட்டை மலைகளும் இருக்கின்றன.

இமயத்தின் இடையுயரப் பகுதிகளில் மழை பெய்வது அரிய காட்சியாகும். களங்கமின்றி இருக்கும் வானில் சில நிமிட நேரங்களில் கார் மேகங்கள் திரண்டு இரவைப்போல் இருட்டிவிடும். கொட்டைப் பாக்குப் போலவும், நெல்லிக்காய் போலவும் மழைத் துளிகள் விழும். மலையோடு மலை மோதுவது போன்ற இடிமுழக்கங்கள் காதுகளைச் செவிடுபடச் செய்யும். அங்கு தோன்றும் மின்னல்களால் சில சமயம் கிராமம் முழுவதும் தீப்பற்றி விடுமாம். கடலே மழையாகப் பொழிவது போன்று மிகப் பேரளவில் பொழியும் மழையால் பெரிய மலைகளில் சரிவுகள் ஏற்படுகின்றன. தொடங்கிய வேகத்தைப் போலவே மிக விரைவில் வானம் தெளிந்து மீண்டும் கதிரவன் ஒளி வீசுகின்றது. வெள்ளி மலைகள் உருகி வழிவதைப் போல எங்கும் ஒரே வெள்ளக் காட்சிகள் தோன்றும்.

அங்குள்ள ஆறுகள் பல்லாயிரக் கணக்கான அடி உயரமுள்ள மலைகளின் அடிப்பகுதியில் சில அடி அகலத்தில் செல்வதால், கற்களையும் பாறைகளையும் இழுத்துச்செல்லும் கடும் வேகம் வாய்ந்தனவாக இருக்கின்றன. சிற்சில சமயங்களில் அவ்வாறுகளில் நீருக்குப் பதிலாகத் தேங்காய், பரங்கிக்காய் அளவில் வெறும் கற்களும் பாறைகளும் நிறைந்து ஓடுமாம். பாறைகளை உருட்டிக்கொண்டும் மலைகளை அறுத்துக்கொண்டும் செல்லும் அவற்றின் கடுஞ் செலவு காண்போரை நடுங்கச்செய்யும்.

மலையின் மேலுயரப் பகுதிகளில் பனித்துகள்கள் செதில் செதிலாக மல்லிகை, நந்தியாவட்டை மலர்களை வாரி இறைப்பது போலப் பொழியும். இப் பனி மழை சில சமயங்களில் குன்றுகளையும் மூடி மறைத்துவிடுமாம். இமயத்தில் சில குன்றுகள் செந்நிறக் கற்களாகவும் பச்சைநிறக் கற்களாகவும் அமைந்திருக்கின்றன. சில குன்றுகள் பல நிறங்களும் கலந்த சிற்ப ஓவிய வண்ணக் களஞ்சியங்களாக விளங்குகின்றன. அடிப்பகுதியில் கடும் வெயிலும்,சிகரங்களில் பனியடைகளுமாக உலகின் எல்லாப் பகுதிகளிலும் காணும் தட்ப வெப்ப நிலைகளும் காற்றும், குளிரும் அங்கு காணப்படுகிறது, எல்லாவகையான மரங்களும், செடிகளும், கொடிகளும். பூக்களும், பூச்சிகளும், பறவையினங்களும், விலங்கினங்களும் அங்கு வாழ்கின்றன. உலகில் எங்கு மில்லாத பேருருவம் கொண்ட பனிமனிதன் கூட அங்கு இருப்பதாகக்கூறப்படுகிறது. எனவே இமயம்உலகின்முழுமுதல் தன்மையைப் பெற்றிருக்கிறதென்று கூறிவிடலாம்.

இலண்டன் இராயல் பூகோளக் கழகத் தலைவரும் இமயமலையில் சுற்றுப் பிரயாணம் செய்தவருமான **சர். பிரான்சிஸ் யங்ஹஸ்பண்டு** என்பார், 'இமயமலை உலகில் வேறெங்கும் கிடைக்காத புதிய அனுபவத்தை உண்டாக்குகிறது. ஒருவன் தனது வாழ்நாளில் அடைந்த கல்வி, அறிவு, அனுபவம், அனைத்தும் அங்கு கிடைக்கும் ஒரு காட்சிக்குச் சமமாகலாம். அது அவன் உடலுக்கும், உணர்ச்சிக்கும், அறிவுக்கும் நல்ல படிப்பினை யாகிறது. இயற்கையில் எப்போதும் கண்டிராத அக் காட்சிகள் அவன் மனதில் நுண்ணிய பல விசாரணைகளை உண்டாக்கும். இமயமலையின் அழகைப்போன்ற அழகு உலகில் வேறு எங்கும் கிடையாது என்று கூறுகின்றார். 'அளக்கலாகா அளவும் பொருளும் துளக்கலாகா நிலையும் தோற்றமும் வறப்பினும் வளந் தரும் வண்மையும் மலைக்கே' என்ற மலையிலக்கணத்திற்கு முற்றிலும் பொருத்தமானது உலகில் இமயமலை ஒன்றேயாகும். ஆதலின் இதை **மலையரசு** என்று கூறுவதில் சிறிதும் ஐயமில்லை.



# 2. எவரெஸ்டு

**சிகர ஆராய்ச்சி**

எவரெஸ்டு உலகில் உள்ள மலைச் சிகரங்கள் யாவற்றினும் உயர்ந்ததாகும். 100 ஆண்டுகளுக்கு முன் இதன் உயரம் 29002 அடி எனக் கணக்கிடப்பட்டது. நூறு வருட காலத்திற்குள் சிகரம் உயர்ந்து விட்ட தென்றும்; இப்போது இதன் உயரம் 29141அடி என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இச்சிகரம் இமயத்தின் நடுப்பகுதியாகிய பேரிமயப்பகுதியில் அமைந்திருக்கிறது. இதனைச் சென்ற நூற்றுண்டின் நடுவில்தான் கண்டு பிடித்தனர். அதற்கு முன் இமாலய மலைகளைப் பற்றிச் சரியான நில அமைப்புப் படங்கள் ஏதும் கிடையாது. 18ஆம் நூற்றுண்டின் துவக்கத்தில் பிரெஞ்சு ஏசுசபைப் பாதிரிகள் சீன அரசாங்கத்தினருக்காக இமாலயப் பகுதிகளைப் பௌத்த லாமாக்களின் துணைகொண்டு நில அளவை செய்து ஓர் நிலஅமைப்புப் படம் தயாரித்தனர். புகழ்பெற்ற பூகோள அறிஞராகிய **டான்வில்** என்பவர் 1735ஆம் ஆண்டில் அச்சிட்ட உலகப்படத்தில் இமயத்தைப்பற்றிய இப்படமும் சேர்த்து வெளியிடப்பட்டது.

இந்தியாவில் ஆங்கில ஆட்சிக் காலத்தில் இந்திய நில அளவைக் குழு ஒன்று இமாலயப் பகுதிகளை அளந்து ஆராய்ந்து சிகரங்களை எல்லாம் குறித்தது. அந்த நில அளவைக் 'குழுவில், **இராதா நாத் சிக்தார்** என்ற ஓர் அதிகாரியும் இருந்தார். இவர் இமயத்தின் அடிவாரப் பகுதிகளில், 1852ல் சுற்றுப் பிரயாணங்கள் செய்து ஆராய்ந்து, உலகில் மிக உயர்ந்த சிகரம் இமயப் பகுதியில் உள்ள பதினைந்தாம் எண்கொண்ட

சிகரம்தான், என்று கண்டார். அதுவரை அது **பதினைந்தாம் சிகரம்** என்றுதான் எல்லா குறிப்புகளிலும் குறிப்பிடப்பட்டு வந்தது. எனவே இதன்பின் அச் சிகரத்திற்கு மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் வழங்கும் பெயரை அறிய முயற்சி செய்தனர். பிரெஞ்சு ஏசுசபைப் பாதிரிகள் சீன லாமாக்களின் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு அதனைச் **'சூமூலங்மா'** என்றழைத்தனர். சில பத்திரங்கள் **தேவதுங்கா, கௌரி சங்கர்** என்ற பெயர்களைத் தெரிவித்தன. நன்கு ஆராய்ந்ததில் திபெத்தியர் வழங்கிய **'சூமூலங்மா'** என்னும் பெயர் பொதுவாக அந்த மலைத் தொடரையே குறிக்கும் என்றும்; அது சிகரத்தைக் குறிக்காதென்றும்; கௌரிசங்கர் என்பது, உயரத்திற் குறைந்த வேறோர் சிகரத்திற்கு வழங்கப்பட்ட பெயர் என்றும் தெளிவாகியது. தேவதுங்கா என்னும் பெயர், பதினைந்தாம் எண் கொண்ட சிகரத்திற்கு வழங்கிவந்தபெயர் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. எனவே அச் சமயம் நில அளவை இலாக்காவின் தலைமை அதிகாரியாயிருந்த, **சர் ஆண்ட்ரூ வாக்** என்பவர் இலண்டன் இராயல் பூகோளக் கழகத்தினரின் அனுமதியைப் பெற்று, சிகரத்திற்குத் தமக்கு முன் இலாக்காவில் தலைமை அதிகாரியாயிருந்த **சர் ஜார்ஜ் எவரெஸ்டின்** பெயரைச் சூட்டினர். அத்துடன் எல்லாப் பத்திரங்களிலும் **எவரெஸ்டு** என்ற பெயரை ஏற்றினர். அன்று முதல் சிகரம் எவரெஸ்டின் பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது.

### இராதாநாத் சிக்தார்

இமாலயத் தொடர்களுள் உலகின் மிக உயர்ந்த சிகரம் இருந்ததைக் கண்டறிந்தவர், இராதா நாத் சிக்தார்

என்று படித்தோம். இவர் கல்கத்தாவில் பிறந்து வளர்ந்தவர். இவர் திறமையுடன் கல்வி பயின்று உபகாரச் சம்பளம் பெற்று இந்து கலாசாலையில் சேர்ந்தார். 1832ஆம் ஆண்டு ஆங்கில மொழியில் முதன்மையாகத் தேறிப் பட்டம் பெற்ருர். கணித நூலிலும் சிறந்த அறிவு பெற்றிருந்தார். கணிதத்தில் ஊக்கம் கொண்டிருந்த சிக்தார் கணித நூல் பேராசிரியரான **டாக்டர் டைலர்** என்ற ஆங்கிலேயரிடம் கணிதத்தின் நுணுக்கமான பகுதிகளைக் கற்றறிந்தார். டைலர் அந்நாள் நில அளவை அதிகாரியாயிருந்த சர் ஜார்ஜ் எவரெஸ்டிடம் சிக்தாருக்கு ஓர் வேலை கொடுக்கும்படிச் சிபாரிசு செய்தார். சிக்தார் மாதம் முப்பது ரூபாய் சம்பளத்தில் அவர் இலாக்காவில் உத்தியோகம் பார்த்தார். சிக்தாரின் திறமையை நாளடைவில் கண்டுணர்ந்த எவரெஸ்டு அவர்மீது அன்பு கொண்டதோடு அவருக்குச் சம்பள உயர்வளிக்க உத்தர விட்டார். 1843ஆம் ஆண்டு எவரெஸ்டு வேலையினின்று விலகி உபகாரச் சம்பளம் பெற்று இங்கிலாந்து சென்ருர். அவருக்குப் பதிலாக 'வாக்' என்பவர் தலைவராக வந்தார். 'வாக்' துரைக்குத் தெளிவுபடாத கணக்குகளையெல்லாம், சிக்தார் நொடியில் போட்டு விளக்கினுர். இதனுல் 'வாக்' சிக்தாரை நன்கு மதித்தார். 'வாக்' கருப்பர் வெள்ளையர், என்ற வேறுபாடு கருதும் பண்புடையவர். 'வாக்' தலைவராக இருந்த காலத்தில்தான் சிக்தார் உலகின் உயர்ந்த சிகரத்தைக் கண்டுபிடித்தார். சிகரத்தைப் பற்றி அவர் **கல்கத்தா ரெவ்யூ** என்ற பத்திரிகையில் பல கட்டுரைகளை வெளியிட்டு வந்தார். பத்திரிகைகள் அவருக்குப் புகழ்மாலைகள் சூட்டின. அவரது திறமையான ஊழியம் நில அளவை அதிகாரிகளால்

ஆங்கிலப் பாராளு மன்றத்திற்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது,

அதன் பயனாக சிக்தார் மாதம் அறுநூறு ரூபாய் சம்பளத்தில், இலாகாவின் உதவி அதிகாரியாக நியமிக்கப் பட்டார். இத்தகைய பெருமையைப் பெற்ற முதல் இந்தியர் இவரே. இவருடைய பெயர், சர் பட்டத்திற்கு சிபார்சு செய்யப்பட்டது. என்ன காரணத்தாலோ இவருக்கு பட்டம் தரப்படவில்லை. அவரது கண்டு பிடிப்பையும், அதற்கான காரணங்களையும் பல பூகோள நூல் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்தனர். சிக்தாரின் திறமையை உணர்ந்தனர். அவரது அரிய இக்கண்டு பிடிப்பை ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழக பூகோள நூல் வல்லுனரான **மேஜர் கென்னத்** என்பவர் **இமயமலை இரகசியம்** என்ற பொருள்பற்றி 1868ஆம் ஆண்டு டிசம்பர்திங்கள் சிம்லாவில் சொற்பொழிவாற்றும்போது வெளிப்படுத்திப் புகழ்ந்தார். சிக்தார் சிகரத்தின் உயர்வை வெளிப் படுத்தியதற்குப் பின் அதற்குப் புதிதாகப் பெயர் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதைப் பற்றி முன்னர் படித்தோம். அது சமயம் சிக்தாரின் பெயரைச் சிகரத்திற்கு வழங்குவது பற்றி ஓர் கேள்வி எழுந்தது. தமக்குக் கீழ் வேலைபார்க்கும் அதிகாரியும் இந்தியருமான சிக்தாரின் பெயர் உலகின் உயர்ந்த சிகரத்திற்கு இடப்படுவதை 'வாக்' விரும்பவில்லை. வாக் இதுபற்றித் தம் அபிப்பிராயம் தெரிவிக்கும் போது சிக்தாரின் பெயரைச் சிகரத்திற்கு வைக்க எனக்கு விருப்பமில்லை, என்று குறிப்பு எழுதினார். உண்மையில் சிகரம் சிக்தாரின் பெயரைத் தான் பெற்றிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் யாவரும் ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

**இருட்டடிப்பு**

அந்நியர் ஆட்சி நடந்த காலமாகையால் சிக்தார் மௌனமாக இருந்துவிட்டார். இவர் 1862ல் வேலையி னின்றும் விலகி உபகாரச் சம்பளத்துடன் ஓய்வு பெற்றுக் கொண்டார். இ வ ர து ஊழியத்தைப் பத்திரிகைகள் பாராட்டின. இவர் எழுதி வைத்த நில அளவைக் குறிப்புகள் இன்றும் பூ கோ ள இலாக்காவினருக்குப் பயன்பட்டு வருகின்றன. சிக்தார் எழுதிய நூல்களும், கட்டுரைகளும் அறிஞர்களால் பெரிதும் மதித்துப் போற் றப்படும் நிலையில் இருந்தன. அவர் மிகவும் உழைத்து ஆராய்ந்து **நில அளவு வேலைகள்** என்றதொரு நூலை எழுதி வெளியிட்டிருந்தார். இவ்வளவு சிறந்த நூல் ஓர் இந்தியர் செய்ததாக இருத்தல் கூடாது; என்று எண்ணிய கர்னல் எல். எல். டைலர், எ ன் னு ம் நில அளவை இலாக்காத்தலைவர்; சிக்தார் பெயரை நீக்கிவிட்டு அவ்விடத்தில் தம்பெயரைப் புகுத்தித் தாமே அதை எழுதியதுபோல் செய்துவிட்டார். அவரது இச்செய் கையை அறிந்தோரும், பத்திரிகைகளும் வன்மையாகக் கண்டித்தன. அவரிடம் உதவி அதிகாரியாக இருந்த **கர்னல் மாக்டோனல்ட்** என்பவர் அதனைத் தடுத்தார். பொய் கூறுவதால், உலகில் நெடுங்காலம் பலரது வாழ்க் கை நலம் கெடுமென்ற பொறுப்புணர்ந்து, எங்கிலையிலும், எக்காலத்தும், எது பற்றியும் மெய்யானவற்றையே கூறும் பண்புடைய ஆங்கிலேயர் சி ல ரு ள் வைத்து எண்ணத்தக்கவர் மாக்டோனல்ட். திறமை கண்டவிடத் துப்போற்றும் பண்புடையவர். இன உணர்ச்சியை வெறுப்பவர். இவர் டைலர் செய்கையைக் கண்டித்து ஓர் அறிக்கை வெளியிட்டதுமன்றி இங்கிலாந்திற்கும்,

சித்தாருக்கு இழைக்கப்பட்ட அநீதியைப்பற்றித் தெரிவித்தார்.

மாக்டோனல்டின் செய்கைகளைக் கண்டித்து டைலர் அரசாங்கத்துக்குச் செய்துகொண்ட புகாரும் இங்கிலாந்துக்குச் சென்றது. அரசாங்கம் மாக்டோனல்டை முதலில் மூன்று மாதங்கட்குச் சஸ்பெண்டு செய்து, இறுதியில் வேலையினின்றும் விலக்கி விட்டது. உண்மையை வெளியிட்டு, அதற்காகத் தண்டனைபெற்ற கர்னல் மாக்டோனல்டின் நேர்மையையும், தைரியத்தையும் போற்றிப் பாராட்டிப் பத்திரிகைகள் விசேஷ அனுபந்தங்கள் வெளியிட்டன. இவ்வாறாகச் சித்தாரின் அறிவு ஒளி அந்நிய ஆட்சியால் மறைக்கப்பட்டுவிட்டது.

**தொல்லைகள்**

இமாலயப் பகுதிகளில் யாத்திரை செய்வது மிகவும் துன்பம் நிறைந்ததாகும். ஆனால் எவரெஸ்டின் மீது ஏறுவதென்பது அவற்றினும் கடினமானதாகும். அந்த ஏற்றப் பயணத்தில் ஏற்படும் இன்னல்களைப் பற்றி அறிவதன் மூலம் தான், அச் சிகரத்தினது உயர்வையும், அதன் மீது ஏற முயல்வோரின் முயற்சியையும், நெஞ்சுரத்தையும், ஏறி வெற்றிகண்டவரது வன்மையையும் நன்கு அறியமுடியும்.

இமாலய மலைகளும் அதன் சிகரங்களும் மக்கள் வாழ்விடத்திற்கு வெகு தொலைவில் ஒதுக்குப்புறமாக உள்ளன. அவற்றை அடைந்து சிகரங்களின்மீது ஏற வேண்டுமானால் நெடுந்தூரம் பிரயாணம் செய்ய வேண்டும். நெடுநாள் மலைப்பகுதிகளில் வாழவேண்டும். அந் நாட்களில் உணவுக்கும் உடைக்கும் தேவையான

பொருள்கள் யாவற்றையும் சமவெளிப் பகுதியிலிருந்தே கொண்டு செல்லவேண்டும். பொருள்களை மலை மீது எடுத்துவரக் கூலிகளின் உதவி தேவைப்படும். அவர்களுக்கு உயரப் பகுதிகளில் தேவையான உணவு, உடை, முதலிய வசதிகளைச் செய்து தருவது மலையேறுவோரின் பொறுப்பாகும். இவற்றிற்காகச் சுமார் நான்கு இலட்சம் ரூபாய்கள்வரை செலவு ஏற்படும். மற்றும் எவரெஸ்டின் மீது ஏறுவதென்பது திறமைமிக்க அனுபவசாலிகளான மலையேறிகளால்தான் முடியும். இருபத்தைந்திற்கு மேல் நாற்பது வயதுக்கு உட்பட்டவரும்; பொறுமை, ஊக்கம், வெற்றியில் விருப்பம், துன்பத்திற்கு அஞ்சாமை, முதலிய இயல்பும்; சற்று நெட்டையான, பருமன் குறைந்த உடற்கட்டும் ; மலையேற்றப் பயிற்சியும் உடையவரே, மலையேற்றத்திற்குத் தகுதியுடையவராவார். இங்ஙனம் ஆள், பொருள் முதலிய வசதிகளைத் தேடிக்கொண்டாலும், ஆண்டில், மே மாதம் 7-ம் தேதி முதல்; ஜூன் 15-ம் தேதி -அல்லது-செப்டம்பர் முதல் தேதியிலிருந்து அக்டோபர் முதல் தேதி ஆகியவற்றிற்கு இடைபட்ட காலங்களில் தான்; எவரெஸ்டில் ஏறமுடியும். மற்ற காலங்களில் எவரெஸ்டுப் பகுதியில் மிகக் கடுமையான பனிப்புயலும் பனிமழையும் இருப்பதால் மலையேற்றத்தைப் பற்றிச் சிந்திக்கவும் இயலாது.

மலையின் வெளிப் பகுதியிலிருந்து இருபது முப்பது மைல் தூரம், உள்ளே செல்வதற்குள் தட்பவெப்ப நிலை பெரிதும் மாறுபடுகிறது. உயரம் அதிகரிக்க அதிகரிக்கக் காற்று மிக்க வேகத்துடன் வீசும். குளிர் மிகக் கடுமையாயிருக்கும். கடல் மட்டத்தில் வாழ்ந்தவர் இவ்வுயரங்களை அடைந்ததும் நோய்வாய்ப் படுகின்றனர். உயரப்

பகுதிகளில் காற்றின் கனம் குறைந்து பிராணவாயு மிகக் குறைவாக இருப்பதால் போதிய அளவு பிராணவாயு கிடைக்காமல் உடலுறுப்புகள் தங்கள் இயக்கத்தில் குறைவுபடுகின்றன. எவரெஸ்டின் உச்சியை நெருங்கி மேலே ஏற ஏறத் தட்ப வெப்ப நிலை மிகவும் மோசமாய் காணப்படுகிறது. அங்கு அதி வெப்ப நிலையும், அதி குளிர் நிலையும் மாறி மாறி இயங்குவதால் திடீரென்று கடுமையான வேகத்தோடு பனித்துகளுடன் பனிப் புயலும் பனிமழையும் தோன்றுகின்றன.

உச்சியை நெருங்க நெருங்கப் பாதை ஆபத்து நிறைந்ததாகஉள்ளது. ஏறுவோரது முழுவன்மையையும் கவர்ந்துவிடும் வகையில் வழவழப்பான பனிப்பாறைகள் செங்குத்தாக உயர்ந்து நிற்கும். இடைவிடாது படியும் பனித்தூள் பாறைச் சரிவுகளில் படிந்து கிடக்கும். தாங்குதல் இன்றி இலேசாக உப்புக் கற்கள் போல் படிந்துள்ள இப்பனித்தூள் திடீர் திடீரென்று பெயர்ந்து சரியும். அப்பனிச்சரிவுகளில் சிக்கினால் ஆயிரக்கணக்கான அடி ஆழத்தில் விழுந்து புதைய வேண்டியதுதான். சில இடங்களில் பனித்தூள் நான்கைந்தடி கனம் படிந்து பிளவு, குழி என்ற வேறுபாடின்றி மேற்பகுதியை மூடி யிருக்கும். அவற்றில் மக்கள் கால்வைத்தால் இடுப்பு அல்லது மார்புவரை புதைந்துவிடுவர். பள்ளம் தெரியாது கால்வைத்தவரை உயிருடன் காணுவது அரிது.

கீழ் நோக்கினால் பனிப்பாறைகளை இழுத்துச் செல்லும் பனியாறு. அதனை யொட்டி எழுந்துள்ள செங்குத்தான சரிவு. அதன் முனையோ வாளின் முனையை ஒத்துக் குறுகலாகக் காணும். அதன்மீது தான் நடந்து

செல்லவேண்டும். சில இடங்களில் வளைந்து வளைந்து ஏறவேண்டும். சில இடங்களில் தொத்தியும் தவழ்ந்தும் ஏறவேண்டும். மிக உயரமான பகுதிகளில் இரவுத் தங்கலுக்குக் கூடாரம் அமைக்க வசதியான இடம் கிடைக்காது. சரிவுகளின் ஓரங்களில்தான் கூடாரம் அமைக்கவேண்டும். அவ்வுயரங்களில் காற்று, மணிக்கு 100 முதல் 150மைல் வேகம்வரை வீசும். இக்காற்றுக்கு முன்கூடாரங்கள்கிழிந்து சிதறிவிடாமல் காக்கவேண்டும். காற்று கூடாரத்தின் தரையினடியில் நுழைந்து விட்டாலோ கூடாரம் ஆட்களுடன் காற்றோடு காற்றாய் மிதந்து சென்று எங்காகிலும் பனியாற்றில் விழுந்து அழிந்துவிடும். ஆகவே காற்று கடுமையாக வீசும்பொழுது உள்ளிருப்பவர்கூடாரத்தின் அடிப்பகுதியைத்தரையோடு அழுத்திப் பிடித்துக்கொண்டு காலம் கழிக்க வேண்டும்.

காற்று குறைந்துள்ள சமயம் இளைப்பாறலாம் என்று படுத்தாலோ, கூடாரத்தின் கீழுள்ள பனிக்கற்கள் கூரிய ஈட்டிபோல் குத்தும். அதனையும் பொறுத்துக் கொண்டு தூங்கி எழுந்தால் காற்றில்லா அறையில் உறங்கி எழுந்ததுபோல்,சோர்வும்,மயக்கமும் தோன்றும். குளிரால் பூட்சுகள் விறைத்துப் போய்விடும். அவற்றை நெருப்பில் காட்டிப் பதப்படுத்தி மாட்டிக் கொள்வது; பூட்சுக் கயிறுகளை முடிவதுகூடப் பெரும் வேலையாகத் தோன்றும்; மிக்க களைப்பை உண்டாக்கும். தேநீர் தயாரிப்பதற்குப் பனித்தூளை நீராக்குவது ஓய்வு நேரத்தில் பெரும் பகுதியைக்கொள்ளை கொண்டுவிடும்.

உயரப்பகுதிகளில் காணப்படும் காற்றின் வேகம், குளிரின் கடுமை, களைப்பு எல்லாம் உடல் உறுப்புகளை


நிலைகுலையச் செய்கின்றன. கொடிய குளிருடன் பனித் தூள்புயல் வீசுவது உடலை வாள் கொண்டு வெட்டுவது போலிருக்கும். கால் மரத்துப் போய்விடும். குளிரால் கைவிரல்கள் பனிக்கோடரியை இறுகப்பிடித்த வண்ணமே இருக்கும். ஓர் கையை விரிக்கவேண்டுமானால் மற்றொருகையால் விரல்களைப் பிரித்துதான் நீக்கவேண்டும். மண்டையைப் பிளப்பது போன்ற தலைவலி தோன்றும். நடப்பது மிகுந்த களைப்பைத் தரும். அமைதியாய் நின்று கொண்டிருந்தாலோ விறைத்து இறந்துபோக வேண்டியதுதான். சில சமயங்களில் மிக்க குளிரால் உடல் உறுப்புகள் பயனற்றவையாகிவிடும். இதனைப் பனிக்கடி என்பர். குளிரால் முகமும் உதடுகளும் நீல நிறமடைகின்றன. களைப்பு, சோர்வு இவை காரணமாகக் கண்கள் குழிவடைகின்றன. உடலின் எடைகுறைகிறது. பனிப்பாறைகளின் மீதுபட்டு எதிரலைக்கும் ஒளிக்கதிர்கள் கண்களைக் கெடுத்துவிடும். எனவே கண்களைப் பாதுகாக்க வர்ணக் கண்ணாடிகள் அணிந்து செல்ல வேண்டும். கண்ணாடியைக் கழற்றினால் கண் குருடாகி விடலாம். கண்ணாடிமேல் பனி உறைந்துவிட்டால் கண் தெரியாது. பனியை நீக்கக் கண்ணாடியைக் கழற்றித்தான் ஆகவேண்டும். கடல் மட்டத்தில் எலும்பு நிலையில் உள்ள நம் பற்கள் அங்கே கண்ணாடிபோல்-உடையும் தன்மை யுள்ளவையாக-மாறி, விடுகின்றன. வர்ண வேறுபாடுகள் தெரிவதில்லை. சுவையறியும் வன்மை போய்விடுகிறது. பசி அதிகமாக எடுக்கும். தாகம் நிறையத் தோன்றும். ஓர் முறை ஒருவர் தொடர்ந்து பதினேழு கோப்பை டீ அருந்தினாராம்.

அதிக உயரத்தில் காற்று வரண்டு இருப்பதால் தொண்டை ஈரமின்றி உலர்ந்து புண்போலாகி விடும்;

இருமல் தோன்றும். சிறுநீர் உறுப்புகளின் இயக்கம் மிகவும் குறைவுபடுகிறது. சிறுநீர் கழிப்பது நின்று விடும். சிலசமயம் வயிற்றுப்போக்கு உண்டாகும். போதை தரும் குடிகள் ஏதும் அருந்தாமலிருக்கும்போதே குடித்தது போன்று மயக்கம் தோன்றும். சோர்வு காரணமாகக் கண்பார்வை மழுங்கி ஒருபொருள் இருபொருளாகத் தோன்றும். கால் தள்ளாடும்; நிற்கும் நிலையினின்று சற்று வழுக்கி விழுந்தால் ஆயிரக்கணக்கான அடி உருண்டு விழுந்து நொறுங்க வேண்டியதுதான். அந்த உயரப் பகுதிகளில் மனிதனின் உடலும் மனமும் பலவீன மடைகிறது. விரைவில் கோபம் தோன்றும். எத்துணை மகிழ்ச்சியுடன் இருக்க முயன்றாலும் குழந்தைபோலக் கதறி அழத்தோன்றும். ஓர் முறை ஓர் கூலி தான் இறந்துவிட்டதாகவே நினைத்துக் கொண்டானும். நினைவு மறந்துவிடும். தீர்மானம் குறையும். வெற்றி தோல்வியைப்பற்றிய எண்ணமே தோன்றாது. எவரெஸ்டு மீது ஏறியுள்ள ஷிப்டன், எவரெஸ்டின் மிக உயரப்பகுதிகளில் ஏறுவது ஓர் நோயாளி கனவில் மலையேறுவதை ஒத்து இருக்கிறது, என்று கூறியுள்ளார்.

உயரம் குறைந்த ஆல்ப்ஸ் போன்ற மலைச்சிகரங்களில் ஏறி முடித்து இறங்க ஆரம்பித்தவுடன் தொல்லை எல்லாம் குறைந்துவிடும்; மனமகிழ்ச்சி உண்டாகும். ஆனால் எவரெஸ்டோ, உச்சியிலிருந்து கீழே இறங்கும் வழியிலும் மனிதனது முழு உழைப்பையும் வாங்கி மிச்சமுள்ள சக்தியையும் உறிஞ்சி விடுகிறது. ஏறும்போது கால் தவறினால் நின்ற இடத்திலாவது நிற்போம்; அல்லது கீழே விழுந்து

கிடப்போம். இறங்கும்போது கால் தவறினால் பாதாளத்தில் விழவேண்டியதுதான். இந்த ஆபத்தான நிலையில் ஏறுவதற்குப் பாதுகாப்பாகக் கருவிகள், இயந்திர சாதனங்கள் முதலியன உடன் எடுத்துச் செல்லலாம் என்றால் அதுவும் முடியாது. பாரங்களைச் சுமக்கப் பிராணிகளோ வேறு இதர வசதிகளோ பயன்படா. கூலிகள்தான் கிடைப்பர். அவர்களாலும் மிக்க கனமுள்ள பொருள்களை உயரப் பகுதிகளுக்கு எடுத்துவர முடியாது. உயரம் செல்லச்செல்லக் கூலிகள் தூக்கும் சுமையின் எடை மிகக் குறைவு. அந்த உயரத்தில் ஒவ்வொரு சிறியபொருளும் அதிகமான பாரமாக இருக்கும். அவசியமான பனிக் கோடரிகளைத் தூக்கிச்செல்வதே, பெரும்பாரம். சுமந்து செல்வதுபோல் தோளில் வலியைக் கொடுக்குமாம். எனவே இயந்திரக் கருவிகளின் துணைமட்டும் கொண்டு எவரெஸ்டின் மீது ஏறி வெற்றி காண்பது மிக மிக அரிது.



# 3. முதல் முயற்சி

## மலையேற்றம்

மலையேற வேண்டும் என்ற எண்ணம் மனித இதயத்தின் ஓர் தாக உணர்ச்சி; அவனது ஆராயும் ஊக்கத்தின்விளைவு; தன்னை எதிர்த்துத் தன்வலிமையைச் சோதிக்கும் வண்ணம் அமைந்துள்ள சிகரங்களில் கால் வைத்துத் தன்முயற்சியின் வெற்றியை நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணம் தோன்றியதன் விளைவாகவே மலையேற்றத்தில் மக்கள் நாட்டங் கொள்கின்றனர். இத்தகைய எண்ணத்தால் உந்தப்பட்ட மனிதர்கள் எத்தகைய இடையூறுகள் தங்கள் வழியில் நிற்பினும் அவற்றைச் துச்சமாகக் கருதித் தங்கள் முயற்சியின் குறிக்கோளை அடைவதையே இலட்சியமாகக் கொள்கின்றனர். ஐரோப்பிய நாட்டினர் தங்கள் கண்டத்திலுள்ள பெருங்குன்றுகளின்மீது ஏறிக் களித்தபின், புதிய இடம் தேடி இமயச்சிகரங்களில் ஏறி வெற்றிபெறுவதில் கருத்தைச் செலுத்தினர். இக்கருத்துடன் இமாலயத் தொடர்களை அடைந்தோர் பலர். அவர்கள் எல்லோருடைய அனுபவங்களும், முடிபுகளும் இமயச் சிகரங்களின் பெருமைகளை மலையேறுவோர் நன்கறியுமாறு செய்தன.

## எவரெஸ்டு கமிட்டி

இமயச் சிகரங்களின் பெருமையும் கவர்ச்சியும் இலண்டன் இராயல் பூகோளக் கழகத்தினரையும், ஆல்பைன் கழகத்தினரையும் ஈர்த்தது. இக்கழகத்தினர் உலகின் மிகஉயர்ந்த மலை முகடாகிய எவரெஸ்டின் மீது

ஏறி வெற்றி காணவேண்டும் என்ற எண்ணங்கொண்டனர். எவரெஸ்டு சிகரத்தின்மீது ஏறுவதற்கான முயற்சிக்குப் பெரும் பொருளும், திறமையான ஆட்களும், எவரெஸ்டை அடைவதற்கு இடையே வழியில் உள்ள நாடுகளின் அனுமதியும் தேவையாகும். தனி மனிதரோ, அன்றி வேறு கழகங்களோ இந்த அனுமதியைப் பெறுவது கடினமாகும். செல்வாக்கு மிக்க இவ்விரு கழகத்தினரும் எவரெஸ்டு கமிட்டி என்ற ஓர் செயற்குழுவைத் தேர்ந்தெடுத்து எவரெஸ்டில் ஏறி வெற்றி பெறுவதற்கான ஏற்பாடுகள், பொறுப்புகள் முதலியவற்றை அதனிடம் ஒப்படைத்தனர். எவரெஸ்டை அடையவேண்டுமாயின் அதன் வடக்குப் பக்கம் இருக்கும் திபெத்நாட்டின் வழியாகவோ; அன்றித் தெற்குப் பக்கமிருக்கும் நேபாள நாட்டின் வழியாகவோ தான் செல்ல வேண்டும். இவ்விரு நாடுகளும் ஐரோப்பியரைத் தம் நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை. ஐரோப்பியர் அந்நாடுகளுக்குள் நுழைவதை அந்நாளைய இந்திய அரசாங்கமும் விரும்பவில்லை. திபெத்திய, நேபாள மக்கள் இமாலயச் சிகரங்களைக் கடவுளது இருப்பிடம் என்று கருதினர். சிகரங்களில் ஏறுவதால் கடவுளுக்குக் கோபமுண்டாகும் என்றும் எண்ணியிருந்தனர்.

**நோக்கம்**

எவரெஸ்டு கமிட்டியினர் மலையேற்றத்திற்குத் தேவையான அனுமதிகளைப் பெற்று வரும்படி கர்னல் ஹோவர்டு பரி என்பவரை இந்தியாவுக்கு அனுப்பினர் அவரது முயற்சியால் 1921-ம் ஆண்டில் எவரெஸ்டின் மீது ஏறுவதற்கு அனுமதி கிடைத்தது உடனே மற்ற

ஏற்பாடுகளைக் கமிட்டியினர் மும்முரமாகக் கவனித்தனர். குழுவின் செலவிற்கும் பிற பொருள்களுக்கும் உதவித் தொகையாகப் பொருள் தொகுக்கப்பெற்றது. திறமை மிக்க மலையேறிகளைக் கமிட்டி தேர்வுசெய்து சேர்த்துக் கொண்டது. அந்நாள் வரை எவரும் எவரெஸ்டின் சுற்றுப்புறப் பகுதியின் அருகே சென்று ஆராய்ந்தது கிடையாது, வெகுதொலைவில் இருந்துதான் எவரெஸ்டின் மலை அமைப்பு, வரைகள், சரிவுகள் முதலியவற்றைப் பார்த்து வந்தனர். தூரத்துப் பார்வைக்கு மலையின் சரிவுகளும் வரைகளும் ஏறுவதற்கு வசதியானவையாகத் தோன்றின. தூரப் பார்வைக்கு எளிமையாகத் தோன்றும் பகுதிகள் ஒருவேளை ஏறுவதற்குக் கடினமானவையாய் இருக்கலாம். அந்தத்தன்மை அதன் அருகில் இருந்து நோக்கும் போது தான் தெரியவரும். 16000 அடி உயரத்திலிருந்து 26000 அடி உயரம்வரை அதன் வரைகள் ஏறத்தகுந்தனவாக இருக்கின்றனவா? என்பதை அதற்குமுன் ஒருவரும் அறிந்தது கிடையாது. எனவே முதன் முதல் எவரெஸ்டு செல்லும்குழு அச் சிகரத்தின் சுற்றுப்புறங்களை ஆராய்ந்து ஏறுவதற்கான ஓர்வழியைக் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டது. வழி கண்டபின் சிகரத்தை அடையவும் தீர்மானித்தது.

## குழுவின் புறப்பாடு

இந்த எவரெஸ்டு ஏறும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் பொறுப்பு **கர்னல் ஹோவர்டு பரியிடம்** ஒப்புவிக்கப்பட்டது. இக்குழுவில் திறமைமிக்க மலையேறிகளான மல்லோரி, புல்லக் உட்பட நான்கு மலையேறிகளும்; இரு நில அளவை அதிகாரிகளும்; ஓர் மருத்துவரும்; ஓர் நிலநூல் வல்லுனரும் இருந்தனர்.

குழுவினர் 1921ஆம் ஆண்டு மே மாதம் டார்ஜிலிங்கிற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் ஜூலை ஆகஸ்டு மாதங்களில் எவரெஸ்டு சிகரத்தினை நெருங்குவதற்கான வழியை ஆராய்வதற்கும் செப்டம்பர் மாதம் பருவக்காற்றுக்குப் பின் சிகரத்தின் உச்சியை அடைவதற்கும் ஏற்ற ஓர் வழியினை ஆராய்வதற்குத் திட்டமிட்டிருந்தனர். டார்ஜிலிங்கில் குழுவினருடன் வேலை செற்வதற்காகச் சுமார் அறுபது கூலிகளைத் தேர்வுசெய்து அனைவருக்கும் தேவையான உணவு, உடைகளையும் சேகரித்தனர். டார்ஜிலிங்கிலிருந்து நேராக எவரெஸ்டுக்குச் செல்ல வேண்டுமானால் நேபாளத்திற்குள் நுழைந்துதான் போகவேண்டும். நேபாளத்திற்குள் நுழையக் கூட்டத்தினருக்கு அனுமதியில்லை. ஆகையால் அவர்கள் கிழக்குப்புறமாகச் சுற்றிச்சென்று திபெத் வழியாக எவரெஸ்டை அடையத் திட்டமிட்டனர், இவ்வாறு சுற்று வழியாய்ச் செல்லுவதால் அவர்களுக்கு வேறோர் நன்மையும் கிட்டுகிறது. கடல் மட்டத்திற்குப் பதினையாயிரம் அடி உயரத்திற்கு மேலுள்ள பகுதிகளில் நீண்டதூரம் போதுமானகாலம் பிரயாணம் செய்வதால் அவர்களது உடல் மிக உயர்ந்த பகுதிகளில்—பிராணவாயு குறைவான காற்றுள்ள இடங்களில்—வாழ்வதற்குப் பழகிக் கொள்கிறது. திபெத்தைஅடைவதற்குள் குழுவினருள் பெரும்பாலோர் மாறுபட்ட தட்ப வெப்ப நிலையாலும்; கடுங்குளிராலும்; மழையாலும்; வெயிலாலும் நோயுற்றுத் தேறினர்.

### வழி கண்டுபிடித்தல்

திபெத்தில் நுழைந்து சென்று ஜூன் மாதம் 19 ஆம் தேதி எவரெஸ்டிற்கு நாற்பத்தினான்கு மைல்

தூரத்தை அடைந்து தங்கினர். அங்கிருந்து எவரெஸ்டின் சுற்றுப்புறத்தை ஆராயத்திட்டமிட்டனர். வழி கண்டு பிடிக்கும் வேலையை மேற்கொண்ட மல்லோரி, புல்லக் ஆகிய இருவரும் பத்தொன்பது கூலிகளை உடனழைத்துக் கொண்டு சுற்றுப்புறத்தை ஆராயப் புறப்பட்டனர். மல்லோரியும், புல்லக்கும் எவரெஸ்டு உச்சியை அடையும் வழியிலுள்ள வரையினருகில் இருந்த இராங்பக் பனியாற்றை அடைந்து அந்த இடத்திலிருந்து சிகரப் பகுதிகளை ஆராய்ந்தனர். வெகு தொலைவிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக்கொண்டு எவரெஸ்டின் சரிவுகளில் இலேசான பனி மூடியிருக்குமென்றும், ஏறுவதற்கு சுலபமாக இருக்குமென்றும், கருதியது தவறு என்றறிந்தனர். பாறைகளாலான எவரெஸ்டு சிகரத்தின் மீது ஏறுவதென்பது திறமைமிக்க மலையேறிகளால்தான் முடியும் என்ற தீர்மானத்துக்கு வந்தனர். உச்சியை அடைவதற்கு வசதியான வழியைத்தேடி ஆராய்ந்து வரும்போது, எவரெஸ்டின் வடக்குப்பக்கத்தையும் அதன் வடக்கேயுள்ள வேறோர் சிகரத்தையும் இணைத்துநிற்கும் தொடரில், ஓர் பிளவான கணவாய் இருப்பதைக் கண்டறிந்தனர். சிகரத்திற்குச் செல்லும் வழியிலுள்ள வரையை அடையவேண்டுமானால் அக்கணவாய் வழியாகத்தான் செல்லவேண்டும். அக்கணவாயை அடைய இராங்பக் பனியாற்றிலிருந்து மேலே ஏற வேண்டும். அந்தச்சரிவு 1200அடிஉயரம்கொண்டதாகும். மேலும் அச்சரிவு பிளவுகளும் பள்ளங்களும் நிறைந்ததாய் இருந்தது. அதற்குமேல் உள்ளவரைகள் ஏறுவதற்குச் சுலபமாய்த் தடையின்றி இருப்பதாகக் காணப்பட்டன. எனவே அவர்கள் அக்கணவாயை அடையும் வழி ஏறத்தக்கதுதானு? என்று பரிட்சை

செய்து பார்க்க எண்ணினர். அதில் ஓர்முறை ஏறி இறங்கிய அவர்கள் அச் சரிவுதான் ஏற்றப்பாதையில் ஆபத்தான பகுதி என்றும், அதன்மீது ஏறுவதற்கு மலையேற்றத்தில் அனுபவமிக்கவர்கள் வழி காட்ட வேண்டுமென்றும் முடிவு செய்தனர். குழுவினர் வந்ததன் முக்கிய நோக்கம் நிறைவேறியது. அவர்கள் உச்சியை அடையத் திட்டமிட்டிருந்தும், சுற்றுப் புறத்தை ஆராய்வதிலேயே நன்கு களைத்துவிட்டனர். அதற்குள் பருவக்காற்றும் துவங்கிக் கடும் வேகத்தில் வீசியது. எனவே குழுவினர் மேலே செல்லும் எண்ணத் தைக் கைவிட்டுத் திரும்பிவிட்டனர். இக்குழு சென்றதன் பயனாக இமயத்தின் எவரெஸ்டுப் பகுதி நில அமைப்புப் படம் ஒன்று உருவாகி வெளிவந்தது.

## எவரெஸ்டு முயற்சி

இமயத்திற்குச் சென்று வழிகண்டு திரும்பிய குழுவினர் அடுத்த ஆண்டில் எவரெஸ்டின் உச்சியை அடைவதையே நோக்கமாகக் கொண்ட ஓர்குழு அமைத் தனர். மே மாதத்தில் எவரெஸ்டின்மீது ஏறுவது என்று திட்டமிட்டிருந்ததால் அவர்கள் ஜனவரி மாதத்திலேயே இங்கிலாந்தை விட்டுப் புறப்பட வேண்டியிருந்தது. எனவே தேவையானவற்றை மிகவிரைவில் சேகரித்தனர். உயரப்பகுதிகளில் உபயோகிப்பதற்காக 'பிரிமஸ் ஸ்டவ் அடுப்புகளைத் தயார் செய்துகொண்டனர். தேயிலைப் பானம், பால் முதலியவற்றைச் சூடாக வைத்துக் கொள்ள வெப்பங் காக்கும் குப்பிகள், குளிருக்கும், காற் றுக்கும் அடக்கமான கூடாரங்கள், படுக்கையாக உதவும் வெதுவெதுப்பான தூங்கும் பைகள், குளிரைத்தடுக்கும் உடைகள், பூட்சுகள், பனிப்பாறை வெளிச்சத்திற்குப்

பாதுகாப்பாக அணிந்துகொள்ள வர்ணக் கண்ணுடிகள் முதலியனவெல்லாம், எல்லோருக்கும் தேவையான அளவு சேகரித்துத் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொருவர் விருப்பத்திற்கும் சுவைக்கும் தக்க உணவுகள், டப்பியிலடைக்கப்பட்ட மாமிசங்கள், மீன்கள், பாலடைக் கட்டிகள், பிஸ்கட், சாக்கலெட், டீ, கோகோ முதலிய உணவுப் பொருள்களும் தயார் செய்தனர்.

உயரப்பகுதிகளில் பிராணவாயு குறைந்திருக்குமல்லவா? அதனை நிறைவு செய்துகொள்ளுதற்கு வேண்டிய பிராணவாயு அடைக்கப்பட்ட குப்பிகளையும் அதனை உபயோகிக்கும் கருவிகளையும் எடுத்துச் சென்றனர். இந்தக் கூட்டத்திற்கு **ஜெனரல் புரூஸ்** தலைமை தாங்கினர். மல்லோரி இக்கூட்டத்துடன் மீண்டும் சென்ருர். கூட்டத்தில் கர்னல் ஸ்டரட், ஜே. பி, நீல், டாக்டர் சாமர்வெல், மேஜர் நார்ட்டன் மேஜர் மோர்ஸ்ஹெட், ஜியாபரி புரூஸ்; முதலியோர் இருந்தனர். இவர்கள் டார்ஜிலிங்கில் தேவையான கூலிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதோடு அங்கு வாங்கவேண்டிய உணவுப் பொருள்களையும் வாங்கிச் சேகரம் செய்து கொண்டார்கள். குழுவினர், மார்ச்சு மாதம் எல்லாப் பொருள்களையும் பொதி சுமக்கும் மிருகங்களின்மீது ஏற்றிக்கொண்டு எவரெஸ்டை நோக்கிப் புறப்பட்டனர். அப்பகுதியில் இருந்த லாமாக்களும் பிறமதத் தலைவர்களும் கூட்டத்தினரை ஆசிர்வதித்து அவர்கள் நலத்துக்கும் வெற்றிக்குமாகப் பிரார்த்தனைகள் செய்தனர். தங்கள் மதத் தலைவர்கள் எவரெஸ்டுப் பிரயாணத்திற்கு ஆதரவளித்து வழங்கியது கூட்டத்துடன் சென்ற கூலிகளுக்கு நம்பிக்கையையும்,

உற்சாகத்தையும் ஊட்டின. கூட்டத்தார் திபெத்து வழியாகச் சுற்றிச்சென்று இராங்பக் பனியாற்றுப் பகுதிக்குச் சுமைகளைக்கொண்டு செல்ல விரும்பினர். பொதி மிருகங்களை நடத்திவந்த திபெத்தியர் பனி ஆற்றுப் பகுதியில் கொடிய பிசாசுகள் வாழ்வதாகக் கருதுபவர்கள், எனவே அப்பகுதிக்குள் நுழையஅவர்கள் மறுத்துவிட்டனர். அது காரணமாக குழுவினர் தாங்கள் குறித்த இடத்திற்கு முன்னதாகவே உள்ள வேறொரு இடத்தில் முகாமை அமைக்க வேண்டியதாயிற்று. அன்று மே மாதமும் ஆரம்பமாகியது.

விரைவில் முகாம்கள் அமைக்கத் திட்டமிட்டுத் தகுதியான இடம் தேடுவதில் முனைந்தனர். அவர்கள் இராங்பக் பனியாற்றின் நடுப்பகுதியில் முகாம் அமைக்கச் சரியான இடத்தை தேர்ந்தெடுத்து அவ்விடத்தில் முதல் முகாமை அமைத்தனர். அது அடிவார முகாமிலிருந்து மூன்று மணிப் பிரயாணத்தில் இருந்தது. உயரம் 17800 அடி. தொடர்ந்து இரண்டாவது, மூன்றாவது முகாம்களைப் பனியாற்றின்மீது அமைத்தனர். அடுத்த முகாம் வடகணவாய்மீது அமைக்கவேண்டும் என்று திட்டமிட்டு அச் சரிவில் வெகு முயற்சியுடன் மல்லோரியும், சாமர்வெல்லும் படிகள் வெட்டிக் கூலிகளுக்கு உதவியாய்க் கயிறுகள் அமைத்தனர். குழுவினர் பிராணவாயுக் கருவிகளைப் பயன் படுத்தியும், பயன் படுத்தாமலும் மலைஉச்சியை அடையத் திட்டமிட்டிருந்தனர். முதல் குழுவில் சென்ற மல்லோரியும், நார்ட்டனும், சாமர் வெல்லும் 26985 அடி ஏறினர். பிராணவாயுவை உபயோகித்து ஏறின பிஞ்சும், ஜியாபரி புருசும் 27235 அடிதான் ஏறினர். மூன்றாவதாக

ஓர்முறை ஏறத்திட்டமிட்டு மல்லோரி, சாமர்வெல், பிஞ்சு மூவரும் ஏறும் வழியில் ஓர் பனிச்சரிவில் சிக்கி ஏழு கூலிகளை இழந்து விட்டனர். மேலும் அவர்கள் தொடர்ந்து முயற்சி செய்யாது திரும்பிவிட்டனர். எவரெஸ்டின் மீது ஏறிவிடுவது என்று செய்த முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது.

## இரண்டாவது முயற்சி

ஜெனரல் புரூஸ் மீண்டும் ஓர் முறை 1924-ஆம் ஆண்டு ஓர் குழுவுடன் எவரெஸ்டின் உச்சியை அடையத் திட்டமிட்டுக் கிளம்பினார். அவருடன் முந்திய பயணத்தில் கலந்துகொண்ட நார்ட்டன், மல்லோரி,சாமர்வெல் ஜி. புரூஸ் ஆகியோருடன் திறமை மிக்க மலையேறிகளான ஓடல், இர்வின்,பீதாம், ஹாஸார்டு ஹிங்ஸ்டன், ஷெப்பேர், மாக்டோனல்ட் ஆகியோரும் சென்றனர். திபெத்தை அடைவதற்கு முன்னரே புரூஸ் நோய்வாய்ப் பட்டார். ஆகையால் அவர் திரும்பி விட்டார். நார்ட்டன் தலைமை வகித்துக் கூட்டத்தை நடத்தினார். கூட்டத்தினர் தங்களுடன் வந்த கூலிகளைக் கொண்டு மிக உயரத்தில் கடைசி முகாமை அமைக்கத் திட்டமிட்டிருந்தனர். ஆகவே அவர்களைக் களைக்கச் செய்யாது சுற்றுப்புறத்தில் இருந்த திபெத்திய மக்களின் உதவியால் முதல் இரண்டு முகாம்களை அமைத்தனர். அதுவரை அமைதியாக இருந்த சூழ்நிலையில் மாறுதல் தோன்ற ஆரம்பித்தது. மூன்றும் முகாம் அமைத்து முடிவதற்குள் காற்றும் பனியும் சேர்ந்துவீசஆரம்பித்தது. வடகணவாயை அடைய மேலே ஏறுவது முடியாததாயிற்று. மூன்றும் முகாம் தங்கியிருப்பதற்குப் போதுமான வசதியற்றுவிட்டது. பல கூலிகள்

நோயுற்றனர். எனவே எல்லோரும் அடிவார முகா முக்குத் திரும்பிவிட்டனர். கால நிலையில் தெளிவு கண்டதும் மீண்டும் ஏறி வடகணவாயின் மேல் முகாம் அமைத்தனர். தம் முகாமில் மற்ற பொருள்களைச் சேர்ப்பதற்குள் பனி மீண்டும் தொடங்கி விட்டது. எனவே மீண்டும் கீழே திரும்ப வேண்டியதாயிற்று. இச்சமயம் நான்கு கூலிகள் கணவாய் முகாமில் நோய்ப் பட்டுக் கிடந்தனர்; அவர்களைக் கீழே அழைத்து வருவது பெரும் வேலையாகி விட்டது. அதில் ஈடுபட்டதால் மல்லோரி, சாமர்வெல், நார்ட்டன் முதலியோர் மிகவும் களைத்துவிட்டனர். அவர்கள் அச்சமயத்தில் தொண்டைப் புண் காரணமாக இருமிக்கொண்டேயிருந்தனர். களைப்பு இருமல், தூக்கமின்மை முதலிய எல்லாம் சேர்ந்து அவர்களை நன்கு தளரச் செய்து விட்டன.

**மறைந்துவிட்டார்கள்**

மே மாதக் கடைசிப் பகுதியில் வானம் அமைதி கண்டது. உயரச் செல்லும் குழுவினர் இருவர் இருவ ராகப் புறப்பட்டு 26800 அடி உயரம் வரை ஏறினர். களைப்பினால் மேலும் ஏறமுடியாது திரும்பிவிட்டனர். பிராணவாயுவை உபயோகித்து மல்லோரியும் இர்வினும் முயற்சி செய்தனர். அவர்கள் சுமார் 28200 அடி உயரத்தில் ஏறிக்கொண்டிருக்கும் போது ஓடல் அவர் களைப் பார்த்தார். சிறு புள்ளிகளைப் போலத்தோன்றிய அவர்களை ஓர் மேகக்கூட்டம் மறைத்துவிட்டது. மேகப் படலம் கடந்த பின்னர் அவர்களைக் காணவில்லை. அதற்குப்பின் அவர்கள் என்ன ஆனார்கள்? உச்சியை அடைந்தார்களா? எவ்வாறு இறந்தார்கள்? ஏறும் சமயத்திலா? இறங்கும் சமயத்திலா? என்ற


கேள்விகளுக்கு இன்றுவரை யாருக்கும் விடைதெரியாது. இங்ஙனம் எவரெஸ்ட்டை ஏறுவதற்குச் செய்த இரண்டாம் முயற்சியும் தோல்வியில் முடிந்தது. இம் முயற்சியில் உயிரிழந்த மல்லோரி ஓர் சிறந்த மலையேறி. தம்முடைய திறமைமிக்க விரைவான சிந்தனை சக்தியால் அநேக ஆபத்துகளிலிருந்து தப்பியிருக்கிறார். பிறரையும் காப்பாற்றியிருக்கிறார்.

**மல்லோரி**

1922-ஆம் ஆண்டு முயற்சி செய்த மல்லோரி தம் கூட்டாளிகளுடன் திரும்பி இறங்கிக் கொண்டிருக்கும்போது பின்னிருப்பவரில் ஒருவர் நிலை தடுமாறி விட்டார். இவர் உடனே தம் பனிக்கோடரியைப் பனியில் ஆழப்புதைத்து இடுப்பில் கட்டியிருந்த கயிற்றை அதில் சுற்றிப் பிடித்துக்கொண்டார். அந்தத் தடுப்பால் அவர்கள் அனைவரும் மரணத்தினின்று தப்பினர். அதே ஆண்டில் அவர் கூலியாட்களுடன் பனிச்சரிவில் சிக்கிக் கொண்டபோது இவரது சமயோசித புத்தி இவர் உயிரைக்காத்தது. பனித்தூள் நடுவில் சிக்கிக்கொண்ட மல்லோரி,சரியும் தூள்களிடையே நீரில் நீந்துதல்போன்று கையை அசைத்து மேலெழுந்து புதையாமல் தப்பினார். அதே ஆண்டில் முதன் முதலில் வடகணவாய்மேல் நான்காம் முகாம் அமைக்க இடம் தேடிச்செல்கையில் அவர் எச்சரிக்கையாகப் பனியைக் கிளறிப் பார்த்த பின்னர் தான் கால் வைத்தார். திடீரென்று மூடியிருந்த பனி உடைந்து விட்டது. பனி மூடிய பிளவொன்றில் மல்லோரி விழுந்து விட்டார். அவர் வலக்கையில் கெட்டியாகப் பிடித்திருந்த பனிக்கோடரி ஓரங்களில் மாட்டிக்கொண்டு விட்டது. ஆகையால் சுமார் பத்தடி

ஆழத்திலேயே நின்றுவிட்டார். அவருக்குக் கீழே இருண்ட பள்ளம் தோன்றியது. தம்மை விடுவித்துக் கொள்ள நெளிந்தால் மேலுள்ள பனி எங்கே சரிந்து தம்மை மூடி விடுகிறதோ என்று அஞ்சினார் உதவிக்குப் பின் வந்த நண்பர்களைக் கூப்பிட்டார். அவர்கள் காதில் விழுந்தால்தானே? அவரே தட்டுத் தடுமாறி மெதுவாகப் பனித்தரையைச் சரித்து மேலேறி விட்டார்.

இத்துணைத் திறமையாகத் துன்பத்திலிருந்து தப்பிக் கொள்வது சிறந்த மலையேற்ற அனுபவம் பெற்றவர்களால்தான் முடியும். **இர்வினும்** அனுபவமிக்கவர். அவர் இருபத்திரண்டாண்டுகள் தான் நிரம்பியிருந்தார். இவருக்குமலையேற்ற அனுபவம் நிறைய இல்லாவிடினும் இவரது திறமை எல்லோரையும் கவர்ந்தது. எவரெஸ்டு ஏறும் முயற்சியில் உயிரிழந்த வீரர் பட்டியலில் இந்த இரண்டு பெயர்களும் சேர்ந்தன.



# 4. அடுத்த முயற்சிகள்

## இரட்லெட்ஜ் குழு

எவரெஸ்டை அடைவதற்கான முதலிரு முயற்சிகளும் வெற்றி பெறுமற் போயினும், மேலும் முயன்று வெற்றி பெறுவதென எவரெஸ்டு கமிட்டியினர் தீர்மானித்தனர். ஆனால் திபெத்து நாட்டு அரசாங்கம் மீண்டும் அவர்களுக்கு 1932ஆம் ஆண்டுதான் அனுமதியளித்தது. அடுத்த ஆண்டில் **ஹியூ இரட்லெட்ஜ்** தலைமையில் ஓர் குழு எவரெஸ்டை நோக்கிக் கிளம்பியது. இக் குழுவினர் பிராணவாயு சாதனத்தின் உதவியால்தான் மலையேறி வெற்றி காணமுடியும் என்ற கருத்துக்குமாறுபட்டனர். மிகஉயரப் பகுதிகளில்நிலவும் தட்ப வெப்பநிலைக்கு ஏற்ற வகையில் உடல் உறுப்புகள் தம் இயக்கங்களை மாற்றிக் கொள்ளுகின்றன என்ற கொள்கையில் இரட்லெட்ஜ் உறுதியுள்ளவராயிருந்தார்.

அதுவரையில் அறிவியல் அறிஞர்கள் 20000அடி உயரத்திற்கு மேல் நிலவும் காற்று நிலையில் மனிதர் எவரும் நீண்ட காலம் தங்கியிருக்க முடியாது என்றும் அங்கு தங்கும் ஒவ்வொரு நாளிலும் முதல் நாளைவிட உடலுக்குத் திங்கு அதிகரிக்கும் என்றும் கருதினர். ஆனால் ஒருமுறை மலையேறியவர் மறுமுறை உயரப் பகுதிகளில் ஏறும் போதும், உயரப் பகுதிகளில் தங்கும் போதும் உடல் முதன் முறையைப் போல நலிவதில்லை என்று தம் அனுபவத்தை வெளியிட்டனர். மிக உயரப் பகுதிகளில் பிராணவாயு குறைவு. இதனால் அப்பகுதிகளில் மக்கள் உயிர் வாழ்வது கடினம் திடீரென்று அப்பகுதிகளை அடைந்தவர் சுவாசிப்பதற்குப்

போதுமான பிராணவாயு இல்லாததால் இறந்துவிடுவர். ஆனால் படிப்படியாக உயரப் பகுதிகளை எட்டும் மலையேறிகளின் உடல் அந்தந்த உயரப் பகுதிச் சூழ்நிலைக்குத் தன்னைப் பழக்கிக் கொள்கிறது. மலையின் மேலுயரப் பகுதிகளில் ஏறும் மனிதர்களின் இரத்தத்தில் அதிகமான பிராணவாயு தங்குவதற்கு வசதியாக அவர்களது உடலில் மிகுதியான இரத்தச் சிவப்பு அணுக்கள் உற்பத்தியாகின்றன. இங்ஙனம் புதிதாக தோன்றிய இரத்தச் சிவப்பு அணுக்கள் வெளிக் காற்றில் உள்ள பிராணவாயுக் குறைவைச் சரிசெய்து கொள்கின்றன. இதனை **உடற்பழக்கம்** (acclimatization) என்பர்.

இம்முறையில் உடல் பழகவேண்டுமானால் மலையேறுவோர் அவசரப்படாது மெதுவாக ஏறவேண்டும். அதனால் அவர்கள் உடல் சிறந்த முறையில் மலையின் உயரப்பகுதிச் சூழ்நிலைக்குத் தக்கவாறு பழகிக் கொள்ளும். மேலிடங்களில் உடல் சூழ் நிலைக்குப் பழகிக்கொள்ளுமளவு மிகப் பொறுமையாக ஒருவன் மலையேறினால் அவன் மலையின் உச்சியை அடையும்வரை எவ்வித நோய்க்கும் உட்படாது நல்ல உடலுரத்தோடு இருப்பான் என்று இரட்லெட்ஜ் கருதினார். உடற் பழக்கத்தின் பொருட்டு அவர்கள் நீண்டகாலம் உயரப் பகுதிகளில் தங்கவேண்டும். அதனால் அவர்கள் உடலுறுப்புகள் குளிர், காற்று முதலியவைகளைத் தாங்குமளவு நன்கு பழகிக்கொள்கின்றன. ஆனால் இரட்லெட்ஜ் குழுவினருக்கு உயரப் பகுதிகளில் போதுமான காலம் தங்கித் தாமதமாக ஏறுவதற்கு வேண்டிய வசதி இல்லை.

மலையேறும் கூட்டம் 1933 ஆம் வருடம் மார்ச்சு மாதம் 8 ஆம் தேதி டார்ஜிலிங்கை விட்டுப் புறப்பட்டு மே மாதம் 2 ஆம் தேதியன்று பனியாற்றின் மீது வட கணவாயை அடையும் சரிவிற்கு ஒரு மைல் தூரத்தில் முகாம் அமைத்தனர். மெதுவாக வேலை செய்து, வட கணவாயை அடையும் சரிவில் படிகள் வெட்டிக் கயிறு கள் அமைத்தனர். இந்தப் பிரயாணக் குழுவினர் 27400 அடி உயரத்தில் கடைசி முகாம் அமைத்தது ஓர் பெரிய சாதனையாகும். முதன் முதலாக உச்சியை அடையச் சென்ற **வேஜர், ஹேரிஸ்** இருவரும் 28100 அடி உயரம் ஏறித்திரும்பிவிட்டனர். அவர்களைத் தொடர்ந்து சென்ற **ஸ்மித், ஷிப்டன்** இருவருள்ளும் ஸ்மித் மட்டும் அந்த உயரத்தை அடைந்தார். ஷிப்டன் வயிற்று வலியால் கடைசிப் பகுதி பிரயாணத்தில் அவருடன் செல்லவில்லை. அவர்கள் மற்றொரு முறையும் ஏறுவதற்கு வாய்ப்பளிக்காமல் பருவக் காற்று தொடங்கி வீசியது. எவரெஸ்டு முயற்சி மீண்டும் தோல்வியடைந்தது.

## ஷிப்டன் குழு

**ஈரிக் ஷிப்டன்** 1935ஆம் வருடம் ஓர் கூட்டத்தை நடத்திக் கொண்டு எவரெஸ்டு ஏறச்சென்றார். அம்முறையும் பருவக் காற்று காரணமாக வெற்றி காண முடியாது திரும்பி விட்டார். அவரது குழு அவ்வருடம் 23000 அடி தான் ஏறியது.

## இரட்லெட்ஜ்

தொடர்ந்து ஏற்பட்ட தோல்விகளைக் கண்டு மனஞ் சலியாது 1936 ஆம் ஆண்டு மறுமுறையும் **ஹியூ இரட்லெட்ஜ்** தலைமையில் ஓர் குழு எவரெஸ்டை

வெல்லப் புறப்பட்டது. அக் குழுவில் **ஸ்மித், ஷிப்டன், ஹேரிஸ்** முதலியவர்கள் இருந்தனர். இம்முறை இரட்லெட்ஜ் உயரப் பகுதிகளில் ஏறுவோருக்குப்பிராண வாயு உதவி யளிப்பதற்குப் பிராண வாயுக் குப்பிகளை உடன்கொண்டு சென்றார். குழுவினர் இம்முறை மிகஉயர முகாமை 27800 அடி உயரத்தில் அமைத்து வெற்றிகாண முயல்வது என்ற தீர்மானத்துடன் சென்றனர். குழு இமாலயப் பகுதிகளில் நுழைந்து வடகணவாயில் ஏறி நான்காம் முகாம் அமைக்கும் வரை காலநிலை சாதகமாய் இருந்தது. அதற்குள் காற்று தொடங்கி விட்டது. அவ் வருடம் பருவக்காற்று சற்று முன்னராகவே துவங்கி விட்டது. பனி மிகுதியாகப் பெய்தது. எனவே எல்லோரும் அடிவார முகாமுக்குத் திரும்பி விட்டனர். தொடர்ந்து பனிவீசும் சமயம் வடகணவாய்ச் சரிவில் ஏறுவது கடின மாகையால் புதுவழி கண்டு பிடித்து ஏறுவதென்று முடிவுசெய்து எவரெஸ்டின் வடக்குச் சரிவை நோக்கி முகாமிட்டுத் தங்கினர். இங்கிருந்து வட கணவாயை அடைய ஓர் புதுவழியொன்றை வேஜரும், ஹேரிசும் கண்டு பிடித்தனர். ஆனல் பனி மிகுதியாகப் பொழிந்ததால் அவ்வழியும் ஏறுவதற்குத் தகுதியற்ற தாகிவிட்டது. மேலும்தொடர்ந்து காற்று கடுமையாக வீசியதாலும், பனி மிகுந்து பொழிந்ததாலும் அவ்வருடமும் சிகரத்தில் ஏறும் முயற்சி கைவிடப்பட்டது. மூன்று முயற்சிகள் முக்கியமாகப் பருவக் காற்று, காலநிலை காரணமாகத் தோல்வியாக முடிந்தன.

1938ஆம் ஆண்டு ஓர் பிரிட்டிஷ் குழு **எச். டபிள்யூ டில்மன்** தலைமையில் எவரெஸ்டு ஏறமுயன்று 27300 அடிதான் ஏறியது.

### ஷிப்டன் வழி

1951ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் **ஈரிக் ஷிப்டன்** இமாலயப் பகுதிகளில் சுற்றி ஆராய்ந்து எவரெஸ்டு மீது ஏறுவதற்கான புதுவழி யொன்றைக் கண்டு பிடித்தார். அதுவரை எவரெஸ்டின் மீது ஏறியவர்கள் டார்ஜிலிங்கிலிருந்து திபெத்தில் நுழைந்து லக்பா கணவாய், வடகணவாய் இவைமார்க்கமாய் எவரெஸ்டை அடைந்தனர். இவ்வழியாக எவரெஸ்டை அடைய மலைப் பகுதிகளில் 400 மைல் பிரயாணம் செய்ய வேண்டும். இவர் கண்ட புதுவழி நேபாளத்திலுள்ள காட்மண்டுவிலிருந்து புறப்பட்டு மேல்கும்பு மலைவழி யாகச் சென்று எவரெஸ்டைத் தென்கணவாய் மார்க்க மாக அடைவதாகும். இவ்வழியில் பிரயாணம் 170 மைல் தூரம்தான்.

### சுவிஸ் குழு

முதன் முதலாக இவ்வழியில் 1952ஆம் ஆண்டு மே மாதத்தில் **டாக்டர் டூனெண்ட்** என்பவரது தலைமையில் ஓர் **சுவிஸ் மலையேறும் குழுவினர்** எவரெஸ்டில் ஏற முயற்சி செய்தனர். இக் குழுவைச் சேர்ந்த **ரேமண்ட் லாம்பர்ட்** என்பவரும் **செர்ப்பா டென்சிங்** என்ற சர்தாரும் அதுவரை எவரும் ஏருத அளவு ஏறி ஓர் புதிய ரிகார்டை ஏற்படுத்தினர். அவர்கள் இன்னும் 792 அடி உயரம் ஏறியிருப்பின் சிகரத்தை அடைந்திருப்பர். மிக்கக் களைப்புடன் ஏறிவந்த லாம்பெர்ட் அந்த உயரம் வந்ததும் தான் மிகவும் உற்சாகமாகவும் சக்தி மிக்கவராகவும் உள்ளவர்போல் எண்ணினர். அது வெறும் பிரமை. அதுதான் களைப்பின் எல்லையைக் குறிக்கும். தொடர்ந்து ஏறினல் மிகவும் களைத்து, ஏறுவோர் ஆபத்தில் சிக்கித்

தம் உயிரை இழக்க வேண்டியதுதான். எப்போது இறங்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவரே திறமையான மலையேறியாவார். இந்த உணர்ச்சியின் குறிப்பை அறிந்த லாம்பெர்ட் திரும்பிவிட்டார்.

அதே ஆண்டு மறுமுறை அக்டோபரில் ஓர் சுவிஸ் குழு **ஷெவெல்லே** தலைமையில் சென்றது. அம் முறை அவர்கள் 26575 அடி உயரம்தான் ஏறினர்.



# 5. இறுதி முயற்சி

## ஹன்ட்டு குழு

1953ஆம் ஆண்டு எவரெஸ்டின் உச்சியைக்காண **இலண்டன் இராயல் பூகோளக் கழகத்தின் இமாலயக் கமிட்டி** ஆங்கிலக் குழுவொன்றை ஏற்பாடு செய்தது. இக்குழுவிற்கு ரைன் நதிப்பகுதியில் பிரிட்டிஷ் துப்பாக்கிப் படையின் கமாண்டோ லீடராக இருந்த மாஜி இராணுவத் தலைவரான **கர்னல் ஜான் ஹன்ட்டு** தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் இதற்கு முன் மும்முறை எவரெஸ்டு மலையேற்ற முயற்சியில் பங்கெடுத்துக் கொண்டுள்ளார். இக்குழுவில் டாக்டர் ஆர். சி. ஈவான்சு, டாம் போர்டிலான், ஆல்பெர்ட் ஏ. கிரிகரி, மேஜர் வைலி, டபிள்யு. எம். நாய்சு, எம். எம். வெஸ்டு மகாட், ஜி. வி. பாண்ட் என்ற ஏழு ஆங்கிலேயர்களும், ஜி. பி. லோ, இ. பி. ஹிலாரி என்ற இரண்டு நியூசிலந்துக் காரர்களும் ஆக ஒன்பதின்மர் மலையேறிகளாக அமர்த்தப்பட்டனர். மற்றும் மருத்துவராக டாக்டர் வார்டு என்பவரும், படப் பிடிப்பாளராக டாம் ஸ்டோபர்ட்டு என்பவரும், டாக்டர் கிரிபித் பூ என்ற உடற்கூறு நிபுணர் ஒருவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இக்குழுவினர் அனைவருக்கும் இங்கிலாந்தின் வடக்கு வேல்சுப் பகுதிகளிலுள்ள மலைகளில் மலையேற்றப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. ஹன்ட்டு குழுவினர் மலையின் உயர்ந்த பகுதிகளில் உபயோகிப்பதற்கான பற்பல விஞ்ஞானக் கருவிகளைத் தயாரித்திருந்தனர். இக்கருவிகள் மிகச் சிறந்தனவாகவும் எல்லா

வகைக் காலநிலைகளையும் வெல்ல வல்ல அமைப்பும் திறனும் உடையனவாகவும் இருந்தன. இவ்வுயர்தரக் கருவிகள் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டு சுவிட்சர்லாந்து மலைப் பகுதிகளில் பரிட்சித்துப் பார்க்கப் பட்டன. இவைகள் விஞ்ஞான ஆராச்சியாளர்களின் துணை கொண்டு மிக மிகக் கனம் குறைந்தனவாகவும் உறுதி வாய்ந்தனவாகவும் அமைக்கப்பெற்றன. இதற்கு முன் எவரெஸ்டை வெல்ல முயற்சித்த வேறு எக்குழுவினரும் இத்தகைய அரிய தளவாடப் பொருள்களைத் தங்களுடன் கொண்டு சென்றது கிடையாது.

## விஞ்ஞானக் கருவிகள்

மலையேறிகள் பின் கூறப்படும் விஞ்ஞானக் கருவிகளைத் தங்களுக்கு உதவியாக உடன் எடுத்துச் சென்றனர்.

மலையின் மிக உயரப் பகுதிகளில் ஏறும்போது தமக்கு வேண்டிய பொருள்களை எடுத்துச் செல்ல முறுக்கி, கம்பியால் இழுக்கும் குறடமைந்த இயந்திரச் சருக்கு வண்டிகள் தயாரிக்கப் பட்டன. மலைமீது முகாம் அமைத்துள்ள காலங்களில் இமயத்தின் பனிப்புயல், மழை முதலியவைகளை அறிவதற்காக இந்தியச் சமவெளிப் பகுதிகளுடனும் முகாம்களுக் கிடையிலும் செய்திப் போக்கு வரவிற்காக ஒலிபரப்புக் கருவிகள் அமைக்கப் பட்டன. மலைமீது பனித்தூள்கள் அதிகமாக இருந்து பனிச்சரிவுகள் ஏற்படும் என்று எண்ணினால் பாதுகாப்பான தூரத்திலிருந்து கொண்டே பனிச்சரிவுகளைச் சரித்து ஒதுக்கவல்ல பனித்துப்பாக்கிகள் தயாரிக்கப்பட்டன. மலை யேறிகளுக்குக் கடுமையான ஆபத்தைத் தரும் இத்தொல்லை முற்றிலும் இதனால் தவிர்க்கப்பட்டதெனலாம்.

பனிப் பிளவுகளில் பாலம் அமைப்பதற்கு இணைப்புள்ள இலேசான ஏணிகள் கொண்டு செல்லப்பட்டன. இதற்கு முன் மலையேறியவர்கள் இத்தகைய பள்ளங்களில் கயிற்றைப் பாலமாகக் கட்டி அக்கயிறுகளில் கையைக் கோத்துப் பிடித்து ஊசலாடிக் கொண்டுதான் சென்றனர். மலையுச்சியின் மேற்பகுதி களில் சுவாசிப்பதற்கான பிராணவாயுக் குப்பிகள் நான்கு மணிக்குமேல் அதிகமான நேரம் காற்றைத் தரும் முறையிலும் வேறு குப்பிகளை அஞ்சலாக இணைத்துக் கொள்ளும் முறையிலும் அமைக்கப்பட்டன. இவை கனமற்றனவாகவும் இதற்கு முன் தயாரிக்கப் படாத வேறு பல சிறந்த முறைகளிலும் தயாரிக்கப் பெற்றன.

உயரமான மலைப் பகுதிகளில் தங்குவதற்குக் காற்றை எதிர்த்து நிற்பதும் பருத்தி, நைலான் இவைகளால் செய்ததுமான வலிமைமிக்க கூடாரங்களை எடுத்துச் சென்றனர். அவைகள் ஒவ்வொன்றும் 12 பவுண்டு எடை கொண்டவை. இக்கூடாரங்களை முனைக்கு முனை கூட்டினால் ஓர் நீண்ட சுரங்கம் போல ஆகிவிடுகின்றன. ஆகவே பலர் ஒன்றுகூடி ஒருவருக் கொருவர் உதவிக் கொள்ளவும், காற்றிலிருந்து பாது காத்துக் கொள்ளவும் முடியும். இவைகளின் அடிப்பகுதி இரப்பர் பூசப்பட்ட துணியாலானது. குளிருக்கும் காற்றுக்கும் அடக்கமாக உள்ள இக்கூடாரங்களில் போதுமான காற்று நுழைந்து செல்லவும் அமைப்பு களிருந்தன. கீழ்ப் பகுதிகளில் 12 பேர் தங்கியிருக்க வசதியுள்ள பெரிய அரைவட்ட வடிவம் கொண்ட கூடாரங்களும் மிக உயரப்பகுதிகளில் 6 பவுண்டு

எடைகொண்ட இருவர் தங்கும் சிறு கூடாரங்களும் மலை ஏறிகளுக்கு வழங்கப்பட்டன.

மிக மேலான உயரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்து டீ, காபி தயாரிக்கப் பல மணிநேரங்கள் பிடிக்கும். ஆனால் இக் குழுவினர் மிகவிரைவில் தண்ணீரைக் கொதிக்க வைக்க 'பூட்டேன்' என்னும் திரவத்தைப் பயன்படுத்தும் 'ஸ்டவ்' அடுப்புகளை எடுத்துச் சென்றனர். மலை யேறிகளுக்கு உணவு தட்டின்றி இருப்பதற்கு இராணுவப் பங்கீட்டு முறையின்படி சாக்லெட்டு முதலிய எல்லா வகையான உணவுகளுக்கும் அளவுகள் வரை யறுக்கப்பட்டன. மலை யேறிகளுக்கும் மற்றவர்களுக்கும் தனித் தனியே பிடித்தமான உணவு வகைகளும் பொதுவாகப் பனிமிகுந்த இடங்களில் கெடாதபடி அமைக்கப்பட்ட உலர்ந்த பழவற்றல், சமைத்து டப்பியில் அடைக்கப் பட்ட மாமிச வகைகள், ரொட்டி, தேன், பாலடைக் கட்டிகள், தேயிலை, காப்பி, வெண்ணெய், சாக்லெட்டுகள், சார மீன்கள் முதலியன எடுத்து செல்லப்பட்டன.

எவரெஸ்டின் உச்சியில் நிலவும் மைனஸ் 65 டிகிரி குளிரையும் மணிக்கு 150 வேகத்தில் வீசும் காற்றையும் எதிர்த்து நிற்கவல்ல ஆற்றல் வாய்ந்ததும். மிகவும் இலேசானதுமான உடைகளை மலையேறிகள் அணிந்திருக்கவேண்டும். ஏனெனில் மலையின் மிக உயரப் பகுதிகளில் ஒவ்வொரு அவுன்சு கனமும் மிக அதிகமான பாரமாகத் தோன்றும். இக்குழுவினர் மென்மையான மயிராலானதும் இரண்டு பகுதிகளாக

அமைந்ததுமான (கால் சட்டை, மேல் சட்டை) உட்புற ஆடைகளையும், நைலானால் இரண்டு அடுக்குப் போர்த்தப் பெற்ற காற்றுப்புகாத அங்கிகளையும் அணிந்திருந்தனர். இவ்வங்கிகளுக்குமேல் பனி, காற்று இவைகட்குப் பாதுகாப்பாக ஓர் தலைமுக்காடும் (Hood) முகப் பாது காப்பும் (Visor) பொருத்தப் பெற்றிருந்தன. இதற்குமேலும் குளிர் உறைத்தால் கனம் குறைந்த இலேசான ஒரு 'ஜெர்ஸி' சட்டையையும் அதற்குமேல் தடித்த ஓர் கம்பளிப் 'புல்ஓவர்' சட்டையையும் அணிந்திருந்தனர். பனிக்கடியிலிருந்து தப்ப தோலோடு தோலாய்ப் பொருத்தப் பெற்ற ஒரு பட்டுக் கையுறையை ஒரு போதும் கழற்றுது மாட்டியிருந்தனர். அதற்கு மேல் மெல்லிய பர் உரோமமும் (Fur Wool) கம்பளியும் கலந்த கையுறைகளையும் அணிந்திருந்தனர். இங்ஙனம் இவர்கள் அணியும் எல்லாவகையான உடைகளின் எடையும் மூன்றே முக்கால் பவுண்டுதான். இதுவன்றி வெகு தூரத்திலிருந்தே ஒவ்வொருவரையும் பிரித்தறிவதற்கு ஏற்றமுறையில் ஒவ்வொருவரது உடையும் வெவ்வேறு நிறங்கொண்டதாக அமைக்கப் பட்டிருந்தது.

மலை யேற்றத்தின் இறுதிக் கட்டத்தில் சிகரத்தை நோக்கி மலையேறிகளை இருவர் மூவராக அணியணியாக அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. பருவ காலங்களைத் தக்க முறையில் சமாளிக்க எந்தெந்த தேதிகளில் எங்கெங்கு குழுவினர் இருக்க வேண்டுமென்ற கால அட்டவணையை அமைத்துக் கொண்டனர். இதன்படி எவரெஸ்டு அமைந்துள்ள நேபாள இராச்சியத்தில் மார்ச்சு மாதத்தில் பண்டக சாலையை அமைக்கவும்,

எவரெஸ்டின் அடிப் பகுதிகளில் ஏப்ரல் மாதத்தில் முகாம் இடவும், மே மாத நடுவில் எவரெஸ்டு உச்சியை அடையவும் திட்டமிட்டனர்.

## எவரெஸ்டு வீரர் வருகை

இங்ஙனம் பெரிய அளவில் சிறந்த ஏற்பாடு களுடன் புறப்பட்ட ஹண்ட்டு குழு பிப்ரவரி மாதம் இலண்டனை விட்டுப் புறப்பட்டு இந்தியா வந்தடைந்தது. இக்குழுவுடன் மலையேற வரவேண்டுமென்றும், குழு பிப்ரவரி மாத இறுதியில் காட்மாண்டு வந்து சேருவதால் காட்மாண்டு வந்து கலந்துகொள்ள வேண்டுமென்றும் **எவரெஸ்டு வீரர் டென்சிங்கிற்கு** அழைப்பு வந்தது. 1952 ஆம் ஆண்டில் ஆறு மாதங்களுக்குள் இருமுறை எவரெஸ்டு சிகரம் ஏறி உடல் நலிந்திருந்த டென்சிங் மலையேறும் ஊக்கத்தால் இவ்வழைப்பைத் தட்டாமல் ஏற்றுக் கொண்டார். டென்சிங்கைத் தம்முடன் மலையேற வருமாறு ஹண்ட்டு குழு அழைத்திருக்கிற தென்ற செய்தியை அறிந்த அவரது நண்பர்கள் டார்ஜிலிங்கிலுள்ள **செர்ப்பா - பௌத்த சங்கத்தின்** சார்பாக ஒரு பிரிவு உபசாரம் நடத்தினர்.

அவ்வுபசாரத்தில் **இரவீந்தரநாத மித்தர்** என்பவர் டென்சிங்கிடம் இந்திய மூவர்ணக் கொடியைக் கொடுத்துத் **'தாங்கள் உலக உச்சியாகிய** எவரெஸ்டை அடையும் போது அங்கு இதைப் பறக்கவிட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். டென்சிங் மார்ச்சு மாதம் 4 ஆம் தேதியன்று காட்மாண்டு சென்று ஹண்ட்டுகுழுவில் சேர்ந்தார். குழுவில் சேருமுன் அவர் சில வாக்குறுதிகள் பெற்றார். மற்ற ஆங்கில மலையேறிகளைப் போலவே

தமக்கும் மலையுச்சியை அடைய உரிமை இருக்கவேண்டு மென்றும், மலையேறும்போது குறிப்பிட்ட ஒரு இடத்திலிருந்து டென்சிங்கு ஒருவர்தான் மலை ஏறுவதற்குத் தகுதியானவராயிருக்கின்றார் என்ற நிலை ஏற்பட்டால், அப்போதும் தனிமையாகச் சென்று சிகரத்தை அடைய அனுமதி தரவேண்டுமென்றும் வாக்குறுதிகள் பெற்றார். இங்கு கூலிகள் அனைவரையும் ஒன்றுபடுத்தி ஒழுங்காக நடத்த வேண்டிய பொறுப்பு டென்சிங்குக்கு அளிக்கப் பட்டது.

## குழு புறப்பட்டுவிட்டது

ஹண்ட்டு குழுவினர் கொண்டு வந்திருந்த தளவாடப் பொருள்களைச் சுமந்துவர 350 செர்ப்பாக் கூலிகளை அமர்த்தி, அவர்களை இருபகுதியாகப் பிரித்தனர். டென்சிங்கு அவற்றுள் முதல் படையை நடத்திக் கொண்டு, மார்ச்சு மாதம் இரண்டாம் வாரத்தல் புறப்பட்டுச் சென்றார். இரண்டாம் படையும் புறப் பட்டது. காட்மாண்டுவிலிருந்து 15 நாட்கள் நடந்து 170 மைல் தூரத்திலுள்ள நாம்சிபஜாருக் கருகிலுள்ள **ராங்ப்க்** மடத்தினை அடைந்து அங்கு முதல் பாசறையை அமைத்து ஒரு மாதகாலம் தங்கித் தங்களை மலையேற்றத் திற்குத் தகுதிசெய்து கொண்டனர். ஹண்ட்டு எவரெஸ்டில் ஒன்பது முகாம்கள் அமைக்கத் திட்ட மிட்டிருந்தார். காரணம் சிகரத்தின் உச்சிக்கு மிக அருகில் முகாம் அமைப்பதுதான் வெற்றிக்குத் துணை யாகும் என்பதை அவர் உறுதியாக நம்பினார்.

குழுவினர் மே மாதம் 18-ஆம் தேதி காலநிலை ஏற்றதாக இருப்பது கண்டு மீண்டும் மலை யேற்றம்

துவங்கினர். அவர்கள் அங்கிருந்து பல அரிய இடர்ப்பாடுகளைக் கடந்து எவரெஸ்டின் **மேற்குப்பக்கத்து** பாதுகாப்பான பள்ளத்தாக் கொன்றில் நான்காம் பாசறையை அமைப்பதற்கு ஒன்றரை மாத காலமாயிற்று. அதன் பின் அவர்கள் லோட்சே பனியாற்றின் வழியாகச் சென்று **நப்ட்சே** என்னுமிடத்திற் கருகில் ஐந்தாம் பாசறையையும் அதன்பின் **தென்கால்** பகுதியில் ஆறும் பாசறையையும் அமைத்தனர். லாட்சே சிகரத்திலிருந்து செங்குத்தாக இறங்கிக் குழிந்து தட்டும் போன்றுள்ள இங்கே கடுங்குளிரும் பெருங் காற்றும் நிலவுகிறது. இதனைக் கடப்பது மிகப் பெருந்தொல்லையாக இருக்கிறது என்று ஹன்ட்டு கூறியுள்ளார். நான்காவது முகாமிலிருந்து தெற்குச் சிகரச் சரிவுக்குச் செல்லும்வரை 1952-ல் மலையேறிய சுவிஸ் குழுவினர் மலையேற்றம் செய்து தோற்றுத் திருப்பிய காலத்தில் விட்டு விட்டுப் போன உணவுப் பொருள்களே ஹன்ட்டு குழுவினருக்குப் போதுமானதாக விருந்தது.

குழுவினர் மே மாத மூன்றுவது வாரத்தில் 27500 அடி உயரத்தில் ஏழாவது முகாம் அமைத்துத் தங்கினர். அதன்பின்,மேலும் மேற்பகுதியில் எட்டாம்பாசறையை அமைப்பதற்காக நாய்சும், அன்னல்லு என்ற செர்ப்பாவும் மேலே சென்றனர். அவர்கள் மேலுள்ள இடங்களை ஆராய்ந்து பலஇடங்களில் படிகள் வெட்டிக் கயிறுகளைக் கட்டித் தொங்கவிட்டுத் திரும்பினர். டென்சிங்கும் ஹிலேரியும் சில செர்ப்பாக்களுடன் மே மாதம் 22-ஆம் தேதி புறப்பட்டுச் சென்று தென்கால் சிகரத்தின் உச்சிப் பகுதியில்எட்டாம் பாசறை ஒன்றை அமைத்துத் திரும்பினர். குழுவினர் 27500 அடி உயரத்திலிருந்த ஏழாம்



ஹிலாரியும் — டென்சிங்கும்

பாசறையி லிருந்தே எவரெஸ்டின் உச்சிக்குச் செல்ல முயன்றனர். கர்னல் ஹன்ட்டு 27ஆம் தேதி 27500 அடி உயரத்திலுள்ள ஏழாவது முகாமிலிருந்து முதல் முறையாக **போர்டிலான் - ஈவான்சு** என்ற இருவரையும் எவரெஸ்டு சிகரத்தை நோக்கி அனுப்பினர். அவ்விருவரும் மிக முயன்று ஏறி 28470 அடி உயரமுள்ள தென்முனையை அடைந்தனர். அங்கிருந்து எவரெஸ்டுக்குச் செல்லும் வழியில் இருந்த பெரியதொரு சரிவைக் கண்டு அவர்கள் மலைத்து நின்றுவிட்டனர். அதற்குமேல் செல்வது உயிருக்குத் திங்காய் முடியும் என்று முடிவு செய்த அவர்கள் அப்பகுதியை ஆராய்ந்துகொண்டு ஏழாவது முகாமிற்குத் திரும்பிவிட்டனர். அவர்களது முயற்சி தோல்வியுற்றது.

பிரிட்டிஷ் குழுவின் இறுதி முயற்சியாக மே மாதம் 28 தேதி காலை 6-30 மணிக்கு **டென்சிங்கும், ஹிலாரியும்** அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக **கிரிகரி லோவ்** என்ற இரு மலையேறிகளும், ஆங்கினிமா என்ற செர்ப்பாவும் சென்றனர். 27500 அடி உயரத்திலிருந்து புறப்பட்ட அவர்கள் பனிப்பாறைகளும் பனிச்சேறும் நிறைந்த செங்குத்தான சிகரத்தை நோக்கி எஃகு மனத்துடன் அவ்விமயக்குளிரில் வெற்றிப் பாதையை நோக்கி முன்னேறினர், அன்று முழுவதும் அவர்களால் சுமார் 28000 அடி உயரம்தான் ஏறமுடிந்தது. மீண்டும் திரும்பிவருவதைவிட அன்றிரவு அங்கேயே தங்கியிருந்து மறுநாள் மலையேறலாம் என்று முடிவு செய்தனர். டென்சிங்கு சுவிட்சர்லாந்து மலையேறியாகிய **லாம்பெர்ட்டுடன்** தாம் முன் மலையேற்றம் செய்தபோது முகாம்அமைத்த இடத்தைத்தேடி ஒன்பதாவது முகாமை

அமைத்தார். அன்றிரவு இருவரும் அங்கேயே தங்கி ஞர்கள். உதவிக்கு வந்தவர்கள் ஏழாவது முகாம் நோக்கித் திரும்பினர். அங்கு 27 டிகிரிக்குக் கீழும் வெப்பநிலை வந்துவிடுகிறதாம்.

எவரெஸ்டு வீரர்கள் 29 தேதி காலை 4-மணிக்கு எழுந்து அடுப்பின் சூட்டால் தமது உடலை வெதுப்பிக் கொண்டு, சிறிது உணவும் உட்கொண்டனர். பிராண வாயுக்குப்பி முதலியவற்றையும் ஆயத்தம் செய்து கொண்டு 29 தேதி காலை 6-30 மணிக்கு எவரெஸ்டை நோக்கிப் புறப்பட்டனர். வெள்ளைவெளேலென்ற பனி மலைக்குமுன் சிவப்பு, நீல உடைகளுடன் அவர்கள் சென்ற காட்சியைக் **கர்னல் ஹன்ட்டு** முதலியோர் தொலை நோக்கியின் மூலம் தெளிவாகக் கவனித்து வந்தனர். வீரர்கள் சிறிது தூரம் சென்றவுடன் கடத்தற் கரியதும் மிகக் குறுகியதுமான பெரியதொரு பனிச்சரிவு எதிர்ப்பட்டது. அதனைக் கடக்க வீரர்கள் பட்டபாடு மிகவும் அதிகம். அதே போன்று பற்பல சரிவுகளையும் பனிப்பாறைகளையும், கூரிய வரைகளையும், பெரிய மேடு களையும் கடந்து, இரண்டரை மணி நேரத்திற்குப்பின் எவரெஸ்டு சிகரத்தின் தென்சரிவை யடைந்தனர்.

அங்கு அவர்கள் ஒரு பாறையின்மீது அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டனர். அவ்விடத்திலிருந்து எவரெஸ்டு சிகரம் நானூறடி தூரத்தில்தான் இருந்தது. இந்த நானூறடியும் சர்க்கரைப் பொட்டலத்தைக் கவிழ்த்துவைத்தது போன்று கூருருவை வடிவமாக இருந் ததால், அது அவர்களுக்குப் பெரிய சோதனையாக இருந்தது. இத்தகைய நிலையில் அவர்களது பிராணவாயுக்

கருவிகள் பழுதடைந்தன. அவற்றைப் பழுது பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும் சேர்ந்தது.

இப்பகுதியில் பனித்தூள்கள் மிகுதியாகப் படிந்திருந்தன. அவைகளை அவர்கள் காலால் கிளறிப்பார்த்தனர். ஆபத்து நேராதென்பதை உணர்ந்தவுடன் பெருமுயற்சியுடன் சருக்கல் நிறைந்த பனிப் பாறைகளைக் கோடரியால் வெட்டிக் கால்வைப்பதற்கு இடங்களை அமைத்துக்கொண்டு ஏறிச் சென்றனர். மிகவும் செங்குத்தாக இருக்கும் இடங்களில் ஒருவரை யொருவர் கயிற்றால் பிணைத்துக்கொண்டதோடு ஒருவர் படிவெட்டி அமைக்கும்போது விழுந்துவிடாமல் பாதுகாப்பாக இருக்க, மற்றவர் கயிற்றைப் பிடித்துக்கொண்டு எச்சரிக்கையாக முன்னும் பின்னும் மாறிமாறி ஏறினர்.

இங்ஙனம் ஒரு மணி நேரத்திற்கு மேலாக ஏறிச் சென்ற அவர்களுக்கு முன் புகைபோக்கி போன்ற மிகச் செங்குத்தான பாறை யொன்று எதிர்ப்பட்டது; அதைக் கண்டு அவர்கள் மிகவும் மலைத்துப் போய்விட்டனர். முயற்சியைக் கைவிடாத எவரெஸ்டு வீரர்கள் அதில் ஏறுவதற்கு வழியுளதோவென ஆராய்ந்தனர். முயற்சி திருவினை ஆக்கும் என்ற பழமொழியை மெய்ப்பிப்பதே போன்று அப்பாறையின் இடையில் நெடும்பிளவொன்று தெரிந்தது. வீரர்கள் அப்பிளவின் வழியாகத் தொத்தித் தொத்தி மேலேறத் தொடங்கினர்.


### எவரெஸ்டு வெற்றி

எவரெஸ்டின் உச்சியை அடைவதற்குள் டென்சிங்கு, ஹிலாரி ஆகிய இருவரும் மிகவும் களைத்துவிட்டனர்.

மிகவும் திணறி ஒவ்வொரு அங்குலமாகத் தவழ்ந்து தவழ்ந்து மேலேறினர். அதுசமயம் ஹிலாரி ஒரு செங்குத்தான பாறையின் மீது ஏறிக்கொண்டிருந்தார். அதிலிருந்து அவர் தவறிக் கீழேவிழ இருந்தார். சரியான சமயத்தில் மிகத் திறமையாக, டென்சிங்கு அவரைக் காப்பாற்றினர். மிக அரும்பாடுபட்டு டென்சிங் முதன் முதலில் எவரெஸ்டு சிகர உச்சியின்மீது காலை 11-30 மணிக்கு ஏறிநின்றார். முதலில் உச்சியை அடைந்தஉடன் அதை அவரால் நம்பமுடியவில்லை. நம்புவதற்குச் சில நிமிடங்கள் பிடித்தன. அது சமயம் ஹிலாரி ஏழு எட்டு அடிகளுக்குக்கீழே வந்துகொண்டிருந்தார். சிகரஉச்சியின் மிக அருகில் திணறித் திண்டாடிக் கொண்டிருந்த ஹிலாரியை டென்சிங்கு கைகொடுத்து இழுத்துச் சிகரத்தின் உச்சியில் சேர்த்தார். எவரும் ஏறமுடியாத சிகரமாகிய எவரெஸ்டு உச்சியில் தாம் ஏறவேண்டுமென்று டென்சிங்கு இளமையிலிருந்து எண்ணி வந்த நினைவு அன்று நிறைவேறியது. அவர் அளவிலா மகிழ்ச்சி கொண்டார். உடனே தமது தோழரான ஹிலாரியை மார்போடு தழுவிக்கொண்டார்.

**உலகத்தின் உச்சியில்**

அதன்பின் டென்சிங்கு பனிக்கோடரி ஒன்றின்மீது இந்தியா, பிரிட்டன், நேபாளம், ஐ. நா ஆகிய நான்கு கொடிகளையும் கட்டிப் பறக்கவிட்டார். 1952 ஆம் ஆண்டு சுவிஸ் கோஷ்டியுடன் சென்றபோது, பி. டி. ஐ. நிருபரிடம் உலக உச்சியில் நம் கொடியை நான் நட்டாக வேண்டும் என்று கூறிய டென்சிங்கின் சொல் அன்று பலித்துவிட்டது. டென்சிங்கு மிகவும் களைத்திருந்ததால் எவரெஸ்டு சிகரத்தின்மீது அமர்ந்து கொஞ்சம் கேக்


108053

எவரெஸ்டு வெற்றி

சாப்பிட்டார். இவ்விரு காட்சிகளையும் ஹிலாரி படம் பிடித்தார். தாங்கள் சிகரத்தை அடைந்ததற்கு அத்தாட்சியாகக் காட்டுதற்குச் சிகரத்தின் உச்சியிலிருந்து அதன் மூன்று பக்கங்களையும், தாம் தென் சிகரத்திலிருந்து வெட்டி அமைத்துக்கொண்டுவந்த பனிப் படிக்கட்டுகளையும், மிகத் தெளிவாக அமையுமாறு படம் பிடித்தார். உச்சியிலிருந்து எடுத்தாலொழிய எவரெஸ்டின் வடபகுதியைப் படம் பிடிக்கமுடியாது. அத்தகைய பல படங்களை ஹிலாரி பதிவு செய்தார்.

இமயச் சிகரத்தின் உச்சியில் உலகமாதா இருக்கிறாள் என்ற கொள்கையுடைய டென்சிங்கு படைப்புப் பொருளாகத் தாம் கொண்டுவந்திருந்த ரொட்டி முதலிய இனிப்புப் பண்டங்களைச் சிகரத்தின் உச்சியில் பனியை வெட்டி எடுத்துப் புதைத்தார். அவர்கள் சிகரத்தில் இருந்தபோது காற்றின வேகம் குறைவாக இருந்ததோடு கதிரவன் நன்கு தெளிவாகப்பிரகாசித்தது. மேகக்கூட்டங்களும் இல்லை. அவர்கள் தமது கண்ணுக் கெட்டியமட்டிலுமுள்ள பனி மலைகளையும், தமது இருமருங்கிலுமுள்ள நேபாள நாட்டுப் பகுதிகளையும், பல ஆயிரம் அடி பள்ளத்திலுள்ள ராங்பக் பௌத்த மடத்தையும், கம்பீரமான கஞ்சின்ஜங்கா சிகரத்தையும் பழையபாதைகளையும், முகாம்களையும் கண்டுகளித்தனர். எவரெஸ்டின் உச்சியில், வடக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், தென்மேற்கிலிருந்தும் மூன்று சரிவுகள் ஒன்று கூடுகின்றன. வட பக்கமுள்ள சரிவு மிகவும் செங்குத்தானது. தென்பக்கத்திய சரிவு ஏறிச் செல்வதற்கு வாய்ப்புடையதாக இருக்கிறது. எவரெஸ்டின் உச்சி கூருருளை வடிவம் கொண்ட மஞ்சள் நிறமான

மாக்கற்களால் ஆனது. எவரெஸ்டு உச்சியில் பனியை வெட்டி விலக்கினல் இருவர் மூவர் நிற்குமளவுக்குத் தான் இடமுடையதாக இருக்கிறது. அதிலிருந்து இருபது அடி இறங்கினல் மூவர் படுத்துறங்குமளவுக்கு இடம் இருக்கிறது.

**வீரர்கள் திரும்பினர்கள்**

வீரர்கள் சிகரத்தின் உச்சியில் 20 நிமிஷங்கள் தங்கினர்கள். பிராணவாயு வரவரக் குறைந்தது. 'தாங்கள் திரும்பவும் இறங்கிச் சென்று தோழர்களைக் காண்போமா? வழி சரியாக இருக்குமா? பிராணவாயு போதுமா? என்ற அச்சம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. ஒருவரை ஒருவர் தைரியப்படுத்திக் கொண்டு அவர்கள் 11-50 க்குக் கீழே இறங்க ஆரம்பித்துவிட்டார்கள். எவரெஸ்டின் உச்சிக்கு அவர்கள் சென்றபோது உயரமாணி கொண்டுபோகாததால் அதன் உயரத்தை அவர்களால் வரையறுத்துக் கூற இயலாமல் போயிற்று. எவரெஸ்டின்மீது ஏறுவதைக்காட்டிலும் இறங்குவது ஆபத்து. ஆகையால் மிக எச்சரிக்கையுடன் 5 மணி நேரம் இறங்கிச் சிகரத்தின் அடிப்பகுதியிலுள்ள ஏழாம் பாசறைக்கு மாலை 6-30 மணிக்கு வந்து சேர்ந்தனர். அன்றிரவு அங்கேயே அவ்விருவரும் நன்கு உறங்கினர். மறுநாள் 30 தேதி 21000 அடி உயரத்தில் மேலைப் பள்ளத்தாக்கில் அமைத்திருந்த நான்காம் பாசறை சென்று தம் தலைவருக்கு வெற்றிச் செய்தியை அறிவித்தனர். எவரெஸ்டை வென்ற செய்தி கேட்டுத் தலைவர் முதல் குழுவினர் அனைவரும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டனர்.

## இராணிக்கு எவரெஸ்டு வெற்றி

எவரெஸ்டை வென்ற செய்தி மே மாதம் 29ஆம் தேதி நிகழ்ந்தது. இங்கிலாந்தில் **எலிசபெத்** அரசியாருக்கு முடி சூட்டப்படவிருக்கும் ஜூன் மீ 2ம் தேதியன்று நற்செய்தியாக இவ்வெற்றியைக் கூறவேண்டுமென விரும்பிய குழுவினர், வெற்றிச்செய்தியை வெளியிடாமல் மறைத்து வைத்திருந்தனர். ஜான் ஹண்ட்டு காட்மாண்டுவிலுள்ள பிரிட்டிஷ் தூதர் காரியாலயத்தில் ஏற்கனவே செய்துகொண்ட ஏற்பாட்டின்படி 'பனி மோசமாக இருக்கிறது. முயற்சி கைவிடப்பட்டது; முகாம் 29; பருவநிலை மாறக் காத்திருக்கிறோம். எல்லோரும் நலம்.' என்று இரகசிய முறையில் இவ்வெற்றிச்செய்தியை ரேடியோ மூலம் தெரிவித்தார். இச்செய்தியைக் கேட்டவுடன் பிரிட்டிஷ் காரியாலயத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. மேற்படி இரகசிய வார்த்தைகளின் பொருள் டென்சிங்கும், ஹலாரியும் 29 ஆம் தேதி எவரெஸ்டின் உச்சியை அடைந்து வெற்றி பெற்று விட்டனர் என்பதுதான். இச்செய்தி ஜூன் மாதம் 1 ஆம் தேதி இரவு எட்டு மணிக்கு இலண்டனுக்குத் தெரிவிக்கப்பட்டு, முடிசூட்டுத் தினமாகிய 2 ஆம் தேதி காலை 7 மணிக்கு இராணியாருக்கு டெலிபோன் மூலம் அறிவிக்கப் பட்டது. இதற்குப் பின்னர் தான் உலகின் பல வேறிடங்களுக்கும் எவரெஸ்டு வெற்றி அறிவிக்கப்பட்டது.

## அங்கலாமு

வங்காளக் கவர்னராகிய சியாமபிரசாத் முக்கர்ஜி டென்சிங்கின் மனைவியாகிய **அங்கலாமு**,

அம்மையாருக்கு ஒரு தூதர் மூலம் இந்த நற்செய்தியை அனுப்பினர். தம் கணவராகிய டென்சிங்கு முதன் முதலாக எவரெஸ்டில் ஏறி நின்று வெற்றி பெற்றார் என்ற செய்தியைக் கேட்டு அவர் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தார். 'எனக்கு ஏற்பட்டிருக்கும் எல்லை கடந்த மகிழ்ச்சியில் என்ன சொல்வதென்றே தெரிய வில்லை. இதற்குமுன் 'எனக்கு இவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டதே கிடையாது. மகிழ்ச்சியால் இதயம் வெடித்து விடும் போலிருக்கிறதே' என்று கூறினார். திருமதி டென்சிங்கு தாம் தம் குடும்பத்துடன் காட்மாண்டு சென்று தமது கணவனை எதிர்கொண்டு வரவேற்க விரும்புவதாகவும் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும்படியும் நேபாள சர்க்காரைக் கேட்டுக்கொண்டார். அவரது தோழிகள் அவரை விருந்துக்கழைத்த போது தம் கணவர் திரும்பும்வரை தாம் எந்த விருந்திலும் கலந்துகொள்ள முடியாதென மறுத்துவிட்டார்.

## குழு திரும்புகிறது

இக்குழுவில் ஒருவருக்கும் உயிர்ச்சேதம் முதலிய துன்பங்கள் நேரவில்லை. 'ஆங்கிளிமா' என்றதொரு செர்ப்பா மட்டும் திரும்பும்போது விழுந்து காலை ஒடித்துக்கொண்டார். எவரெஸ்டு வீரர்கள் ஜூன் மீ 5 ஆம் தேதி நாம்சி பஜார் என்ற செர்ப்பா கிராமத்தை அடைந்தனர். அங்கிருந்து டென்சிங்கு அருகேயுள்ள தாமிஎன்ற தம் கிராமத்திலுள்ள 78 வயதான தனது தாயாரைக் கண்டு வணங்கினர். அதுபோது அத்தாய் 'அப்பா! நீ மலை ஏறியபோது எவ்வளவு மகிழ்ச்சி அடைந் தாயோ, அவ்வளவு மகிழ்ச்சி எனக்கு இப்போதுதான்'

என்று கூறி வாழ்த்தினர். மேலும் அவர் 'நீ உலகில் உயர்ந்த மலையில் ஏறி விட்டாயாகையால் இனி மலை யேறக்கூடாது' என்றும் கேட்டுக்கொண்டார்.

டென்சிங்கு ஜூன் மாதம் 19 ஆம் தேதி துலாக் கட்டம் என்னுமிடத்தில் செர்ப்பா வகுப்புச் சிறுவர்கள் தமக்களித்த வரவேற்பின்போது இக்குழுவில் செர்ப்பா வகுப்பினர் சரிவர நடத்தப்படவில்லை. இதனால் அவர்கள் அதிருப்தி அடைந்தனர். அவர்களைச் சமாதானப் படுத்தியபிறகு தான் அடங்கினர். என்னை விட்டு விட்டுத் திரும்பிப்போக அவர்களுக்கு மனமில்லை என்று நினைக்கிறேன்; அதனால் தான் மீண்டும் மேலே ஏறிவர ஒப்புக்கொண்டனர். ஆனால் அவர்கள் பிறகு மிகப் பிரமாதமான சேவைகளைச் செய்தனர். ஆனால் அவர்களுக்கு மோசமான உணவும் மோசமான கூடாரங்களுமே ஒதுக்கப்பட்டன. ஹண்ட்டும், ஹிலாரியும் செர்ப்பா வகுப்பினரைக் கீழ்ச் சாதியின ராகவே மதித்தனர். இக்குழுவில் நானும் ஒரு முக்கிய மெம்பர் என்று என்னைப்பற்றி ஹண்ட்டு தற்போது குறிப்பிட்டிருக்கிறார். இது மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது. ஒருவேளை நான் மலைச் சிகரத்தில் ஏறிவிட்டதால் என்னையும் தங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொண்டு பெருமைப்படலாம் என்று எண்ணி யிருக்கிறார் போலிருக்கிறது. அதிலும் என்னைக் குறைவாகத்தான் மதிப்பிட்டிருக்கிறார். நான் இரண் டாவதாக வந்திருப்பதாகக் கூறுகிறார். ஆனால் உண்மையில் நானே முதலில் சிகரத்தை எட்டிப் பிடித்தேன். ஹிலாரி என்னை விடச் சில அடிகள் தூரமே பின்னாலிருந்தார். நான் இதைப் பெரிதாகக்

கருதவில்லை. ஏழு எட்டுஅடி ஒரு பெரிய வேறுபாடாகக் கருதத் தக்கதுதான்' என்று ஏற்பட்டால் நான்தான் முதலில் மலையுச்சியில் ஏறி நின்றேன், என்று கூறினர்.

எவரெஸ்டின் வெற்றியைக் குறித்து கர்னல் ஹன்ட்டு தமது அறிக்கையில் எவரெஸ்டு வெற்றிக்கு விஞ்ஞானக் கருவிகள் பெரிதும் உதவின. கால நிலை மிகவும் சாதகமாக அமைந்தது. நான் மலை யேறிகளை ஜோடி சேர்த்து விடும்பொழுது கீழ் நாடு மேல் நாடு என்ற பாகுபாடின்றி ஜோடி சேர்த்துவிட்டேன். அவைகளில் ஒன்றுதான் இக்குழுவிற்கு வெற்றியையும் எவரெஸ்டுக்குத் தோல்வியையும் அளித்த டென்சிங் ஜோடி என்று கூறினர்.



# 6. பாராட்டும் பரிசளிப்பும்

**காட்மாண்டு**

உலகின் மிகப்பெரிய சிகரமாகிய எவரெஸ்டை வென்று வெற்றிக்கொடி நாட்டிய **பனிப்புலி செர்ப்பா டென்சிங் நோர்க்கேயும்**, அவருடன் எவரெஸ்டு சிகரத்தை அடைந்த **எட்மண்டு ஹிலாரியும்**, எவரெஸ்டு மலையேற்றக் குழுத்தலைவர் **கர்னல் ஜான் ஹன்ட்டும்**, அவரது குழுவைச் சேர்ந்த பிற உறுப்பினர்களும் 170 மைல் தூரத்தைக் கடந்து ஜூன் மாதம் 21ம் தேதி பிற்பகல் வெற்றி முழக்கத்துடன் காட்மாண்டு நகருக்குள் நுழைந்தனர். குழுவைச் சேர்ந்த நூறு கூலிகளும் மற்றும் பலரும் தொடர்ந்தனர்.

வீரர்களை வரவேற்க ஐந்து மைல் தூரம் வழி நெடுகிலும் தோரணங்களும், விமானப் பந்தல்களும், மலர் முகப்புகளும் கட்டி அழகு படுத்தியிருந்தனர். வீரர்களை வரவேற்றுத் திரள் திரளாக ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடி ஆரவாரம் செய்தனர். நேபாள அரசரான **திரிபுவன மன்னர்** எவரெஸ்டு வீரர்களுக்கு அரசாங்க வரவேற்பளித்து அரச விருதுகளோடு அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அன்று தர்பார் மண்டபத்தில் நடைபெற்ற இவ் வரவேற்பில் பற்பல உயர்தர அதிகாரிகளும் அயல்நாட்டுத் தூதர்களும் மந்திரிகளும் கலந்து கொண்டனர். அவ்வமயம் பல கழகங்களின் சார்பில் முப்பது வரவேற்புப்பத்திரங்களும் புத்தருடைய வெண்கலச் சிலை ஒன்றும் வேலைப்பாடமைந்த தந்த மரப் பேழைகளும் டென்சிங்கிற்கு வழங்கப் பட்டன. அவ்வமயம் திரிபுவன மன்னர்

டென்சிங்கிற்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசளித்ததோடு **'நேபாள தாரா,** என்ற சிறந்ததொரு பட்டத்தையும் வழங்கினர். மேலும் அவர் டென்சிங்கின் தோழரான ஹிலாரிக்கும், குழுத்தலைவர் ஹன்ட்டுக்கும் **'கூர்க்க தட்சிணபாகு'** என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்ததோடு பளபளப்பான உறைகளில் இட்ட பிச்சுவாக்களையும் அளித்தார். எவரெஸ்டு குழுவின் மற்ற உறுப்பினர்களுக்கு முத்துக்களும், ஆபரணங்களும் அமைந்த வெண்கலப் பேழைகளைப் பரிசாக வழங்கினர். டென்சிங்கின் தோழர்களான செர்ப்பாக்களில் பலர் டென்சிங்கிற்குத் தமது தலைக் குட்டைகளைப் பரிசளித்துத் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். எவரெஸ்டைப் பணிய வைத்துத் தன் தாய்நாட்டுக்குப் பெருமை தேடிக் கொடுத்த எவரெஸ்டு வீரன் டென்சிங்கிற்கு ஆயுள் பென்ஷன் அளிக்க நேபாள சர்க்கார் ஏற்பாடு செய்தது. அன்று நடந்த அக்கூட்டத்தில் நேபாள பிரதம மந்திரி **எம். பி. கொய்ராளா, 'இந்த வெற்றி சர்வதேச சகோதரத்துவத்தின் சின்னமாகும்'** என்று கூறிச் சிறப்பித்தார். இந்த வரவேற்பில் டென்சிங்கு குடும்பத்தினரும் ஜான் ஹன்டின் மனைவி முதலியோரும் கலந்து கொண்டனர்.

**கல்கத்தா**

நேபாள மன்னர் திரிபுவனர் செய்திருந்த சிறப்பான ஏற்பாட்டின்படி டென்சிங்கும், அவரது மனைவி மக்களும் விமானத்தில் புறப்பட்டுக் கல்கத்தா வந்து சேர்ந்தனர். அங்கு இலட்சக் கணக்கான மக்கள் கூடி அவருக்கு வரவேற்பளித்தனர். கல்கத்தா நகர சபைத் தலைவர் அவரை மாலைசூட்டி வரவேற்றார். இமாலய

பௌத்தசங்கம் இன்னிசை முழக்கிற்று. எவரெஸ்டு வீரர் டென்சிங்கிற்கு ஆயிரக்கணக்கான மாலைகள் சூட்டப்பட்டன. மாலைகள் மலையாகக் குவிந்தன. 'சபாஷ் டென்சிங் சபாஷ்' 'பேஷ்' 'பேஷ்' என்ற வாழ்த் தொலிகள் வானைப் பிளந்தன. டென்சிங்கு விமான நிலையத்தில் இறங்கியபோது அங்கு கூடிய பெருந் திரளான மக்களை ஒழுங்குப்படுத்தப் போலீசார் மிகவும் தொல்லைப்பட்டனர்.

டென்சிங்கும் அவரது குடும்பத்தினரும் இராஜ பவனில் கவர்னரின் விருந்ினராகத் தங்கினார்கள். மேற்கு வங்காள சர்க்கார் டென்சிங்கிற்கு டார்ஜிலிங்கில் பத்தாயிரம் ரூபாய் செலவில் வீடு கட்டிக்கொடுக்க முன் வந்தனர். அவ் வீட்டைக் கட்ட வேண்டிய மாதிரி அமைப்புகளையும்; வீட்டை அலங்கரிக்கும் பொருள்களையும்; தோட்டத்திற்கான பூச்செடிகளையும் அனுப்பிவைக்க டெல்லியிலுள்ள சில கம்பெனிகள் முன்வந்தன. கல்கத்தாவிலுள்ள **'ஸ்டேட்ஸ் மென்'** என்ற ஆங்கிலப் பத்திரிகையின் வாசகர்கள் 12 ஆயிரம் ரூபாய் 'செக்' ஒன்றை டென்சிங்கிற்குப் பரிசளித்தனர். கல்கத்தா நகரசபையினர் வரவேற்பளித்து உபசரித்த தோடு 2001 ரூபாய்களைக் கொண்ட பணமுடிப்பும் வழங்கினர். எவரெஸ்டுத் தோழர்களான ஹிலாரிக்கும் ஹன்ட்டுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. அது சமயம் ஹிலாரி **'டென்சிங் எனது சொந்த சகோதரர். இவரைப்போல தைரியமும், தன்னலமற்ற தன்மையும் படைத்த ஒருவரை நான் இதுவரை கண்டதேயில்லை.'** என்று கூறினர்.

## டில்லி

எவரெஸ்டு வீரர்களைப் பெருமைப்படுத்த டில்லியில் இந்தியப் பிரதமர் **பண்டித ஜவகர்லால் நேரு** ஒரு விருந்து நடத்த ஏற்பாடு செய்திருந்தார். அவ்விருந்தில் கலந்து கொள்ளும் பொருட்டு டென்சிங்கு குடும்பத்தினரும், ஹிலாரி, ஹன்ட்டு முதலியோரும் டில்லி விமான நிலையத்தில் இறங்கினர். அதுபோது அங்கு கூடிய ஜனத்திரள் பெருத்த ஆரவாரம் செய்தது. டென்சிங்கின் அபிமானிகள் அவரை அலக்காகத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடினர். அப்போது அவரது கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருகியது. அன்பர்கள் அவரை அருகே இருந்த நேபாளத் தூதுவரின் காரில் தூக்கிக்கொண்டு போய் அமரச் செய்தனர். ஹிலாரி, ஹன்ட்டு முதலியோர் பிரிட்டிஷ் தூதரின் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். இந்தியப் பிரதமர் ஜவகர்லால் அளித்த உபசரிப்பில் டென்சிங் குடும்பத்தினரும் பிறரும் கலந்துகொண்டனர். டெல்லி நகர சபையார் வரவேற்பளித்துச் சிறப்பித்ததோடு டென்சிங்கிற்கு 1000 ரூபாய் பணமுடிப்பும் வெள்ளியால் செய்யப்பட்ட எவரெஸ்டு சிகரம், அசோகத்தூபி முதலிய மரியாதைப் பொருள்களையும் வழங்கினர்.

## இராஷ்டிரபதி

ஜூன் மாதம் 29ம் தேதி இந்திய சர்க்காரின் சார்பாக **இராஷ்டிரபதி இராஜேந்திர பிரசாத்** ஒரு வரவேற்பளித்தார். அவ்விழாவில் **ஜவகர்லால் நேரு, அபுல்கலாம் ஆசாத்** அயல்நாட்டுத் தூதுவர்கள்,

மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள் முதலிய ஆயிரக் கணக்கான பெருமக்கள் கூடியிருந்தனர். அதுபோது பனிப்புலி டென்சிங்கிற்கும், அவரது தோழர் ஹிலாரிக்கும்; ஹன்ட்டுக்கும் ஆறு தோலா எடையுள்ள தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.




அப் பதக்கங்களின் ஒருபுறம் இந்திய அரசாங்க அடையாளமாகிய அசோகத் தூபியும், மறுபுறம் விரமே வெற்றி, என்ற சொற்றொடரும் பொறிக்கப்பட்டிருந்தது. குழுவின் மற்ற உறுப்பினர்களுக்கு எவரெஸ்டைப் பற்றிச் சித்தரிக்கப் பட்ட வெள்ளிக் கேடயங்கள் வழங்கப்பட்டன. அதுபோது இராஜேந்திரபிரசாத் **'எவரெஸ்டு சிகரத்தை எட்டுவதற்கு உதவியாயிருந்த இக்குழுவினரது ஒற்றுமை உணர்ச்சியின் மூலம் உலக சமாதானத்தை அடையமுடியுமென்று நாம் நம்புவோம்'** என்று கூறினார். அதுபோது மௌலானா அபுல்கலாம் ஆசாத் எவரெஸ்டு குழுவினரின் கூட்டுமுயற்சியைப் பாராட்டிய தோடு **எவரெஸ்டு சிகரத்தின் இருநூறு வருடக் கதையை விளக்கமாக எடுத்துரைத்தார்.**

**இங்கிலாந்து**

இங்கிலாந்து அரசியாராகிய **எலிசபெத் இராணியார்** இந்தியவீரர் டென்சிங்கையும் தமதுநாட்டு வீரர்களாகிய ஹிலாரி, ஹன்ட்டு ஆகியோரையும் தம் அரண்மனை விருந்திற்கு அழைத்திருந்தார். டென்சிங்கு குடும்பத்தினர் இலண்டன் சென்று திரும்புவதற்கான கட்டணத்தை இரு பிரிட்டிஷ் பத்திரிகைகள் ஏற்றுக்கொண்டன. டென்சிங்கையும் மற்றையோர்களையும் வரவேற்க இலண்டன் **'ஆல்பைன் கழகம்'** சிறப்பான ஏற்பாடுகளை செய்தது. ஜூலை மாதம் 5ம் தேதி டென்சிங்கும் அவரது குடும்பத்தினரும் ஹிலாரி, ஹன்ட்டு முதலியோரும் இலண்டன் விமான நிலையத்தில் இறங்கினர். அதுபோது அங்கு ஏராளமான மக்கள் கூடி வரவேற்பளித்தனர். அக்கூட்டத்தில் குழுத்தலைவர் ஹன்ட்டு டென்சிங்கின் தோள்மீது கையைப்போட்டு அழைத்து கொண்டு வந்து **'டென்சிங்கு எனது உடன் பிறந்தவனைப் போல; ஒரு அருமையான தோழன்'** என்று கூறி கூட்டத்திற்கு அறிமுகப் படுத்தினர். அச் சமயம் டென்சிங்கு 'நானும் எனது மனைவி மக்களும் இலண்டன் வந்தது குறித்து மகிழ்கிறோம்' என்று ஆங்கிலத்தில் கூறினர். பத்திரிகை நிருபர்களும் கைஎழுத்து வேட்டைக்காரர்களும் ஏராளமாக டென்சிங்கைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களது தொல்லையைப் பொறுக்க முடியாத டென்சிங்கு வேடிக்கையாக **எவரெஸ்டிலாவது ஏற வழியிருக்கிறது இங்கு அது கூட இல்லையே** என்று கூறினர்.

பத்திரிகை நிருபர் கூட்டத்தில் ஹிலாரி பேசுகையில் **'நான் எவரெஸ்டு சிகரம் நோக்கி ஏறிக்**

**கொண்டிருக்கையில் ஒரு செங்குத்தான பாறையிலிருந்து விழ இருந்தேன். அதுசமயம் மிகத் திறமையாகத் தோழர் டென்சிங்கு என்னைக் காப்பாற்றினார்'** என்றுகூறினார். அதன்பின் டென்சிங்கைக் காரில்வைத்து இலண்டன் முக்கிய வீதிகளில் அழைத்துச் சென்றனர். பற்பல சதுக்கங்களில் கூடியிருந்த திரளான மக்கள் குழுவில், டென்சிங்கு நின்று அவர்களுக்குக் காட்சியளித்து மரியாதை பெற்றார். இலண்டன் கெடிகாரக் கம்பெனிகள் அவரது கைகளில் தமது கெடிகாரங்கள் பலவற்றைக் கட்டிப் பெருமைப் படுத்தின. இங்கிலாந்து அரசியாராகிய எலிசபெத்து இராணியார் எவரெஸ்டு வீரர்களுக்கு விருந்தளித்துச் சிறப்பித்ததோடு தம் நாட்டு வீரர்களாகிய ஹிலாரி, ஹன்ட்டு இருவருக்கும் **'சர்'** பட்டமும் இந்திய வீரராகிய டென்சிங்குக்கு **'ஜார்ஜ் மெடல்'** என்ற உயர்ந்த மெடலையும் வழங்கிப் பெருமைப் படுத்தினர். இலண்டனில் **சிற்பி ஜோன்சாயர்** என்ற அம்மையார் தனது உருவச்சிலையைத் தயாரிப்பதை டென்சிங்கு நேரில் கண்டு களித்தார்.

**மற்றும்பல**

**சுவிட்சர்லாந்து, ருமேனியா, இலங்கை, பாகிஸ்தான்** முதலிய பல்வேறு நாடுகளிலுமிருந்து டென்சிங்கிற்கு வரவேற்பும், வாழ்த்துச் செய்திகளும் வந்த வண்ணமிருக்கின்றன. இந்திய நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளிலுமிருந்து சிறுவர்களும் பெரியவர்களும், பாராட்டும் பணமுடிப்பும் அனுப்புகின்றனர். பம்பாய் பள்ளி இளைஞர்கள் டென்சிங்கிற்குப் பணமுடிப்பு அளிக்க நகரின் முக்கிய பாங்கு ஒன்றில் **'டென்சிங் நிதி'** என்ற பெயரால் பணம் தொகுத்து வருகின்றனர்.

இந்தியப் படப்பிடிப்பாளர் ஒருவர் டென்சிங்கைத் தமது படத்தில் நடிப்பதற்கு வருமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார். நேபாளத்திலுள்ள கல்வி நிலைய மொன்றில் உள்ள ஆசிரியர்களும் மாணவர்களும், தென்னிந்தியாவிலுள்ள மதுரை இளைஞர் கழகமும், எவரெஸ்டின் பெயரை மாற்றிச், சிகரத்தின்மீது முதலில் ஏறிநின்ற டென்சிங்கின் பெயரைச் சூட்ட வேண்டு மென்று அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறார்கள். 1922ம் ஆண்டு எவரெஸ்டுக் குழுவில் ஒருவராக இருந்த பௌதீக ஆராய்ச்சியாளர் **கேப்டன் ஜி. இன்கல் பின்சு எம். பி. இ.** என்பார் 'ஆல்ப்ஸ் மலைச்சிகரங்கள் பிடி பட்டபின் சுவிட்சர்லாந்து, ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் ஆயிற்று. கவனமாகத் திட்டமிட்டு முயற்சி செய்தால், **இந்தியா உலகம் முழுவதற்கும் விளையாட்டு மைதான மாகலாம்** என்று கூறியுள்ளார்.

**மலையேற்றக் கழகம்.**

டென்சிங்கு குழுவினர் எவரெஸ்டை வென்றதன் நினைவாக **'மலை யேறும் பயிற்சி நிலையம்'** ஒன்றை டார்ஜிலிங்கில் நிறுவ மேற்கு வங்காள சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளது. இக்கழகத்தில் மலையேறுவதற்கான பாடங்களும் பயிற்சிகளும் வகுக்கப்படும். இது பிரிட்டனிலும் சுவிட்சர்லாந்திலுமுள்ள மலைக் கழகங் களின் முறைகளை அறிந்து பொருத்தமானவைகளை மேற்கொள்ளும். இளைஞர்களுக்கு இக்கழகத்தில் மலை யேறும் பயிற்சியளிக்கப் படுவதோடு, அத்துடன் ஒரு பொருட்காட்சிச் சாலையும் இணைக்கப்படும். அதில் மலையேறுவதற்கான கருவிகள் படங்கள் விளக்கங்கள் வெளியீடுகள் முதலியன இடம்பெறும். செர்ப்பாக்களில்

சிலர் இங்கு பயிற்சி பெற்றுக் கழகத்திலேயே இருந்து வருவார்கள். மலையேறும் பயிற்சியாளர்களுக்கெல்லாம் அவர்கள் வழிகாட்டிகளாயிருப்பார்கள். இக்கழகத்தை யொட்டி அருகிலிருக்கும் ஆறு, குன்றுகளில் பயிற்சிச் சாலைகள் அமைக்கப்படும். இவற்றிற்கெல்லாம் பனிப்புலி டென்சிங்கு டைரக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**பத்திரிக்கைகள்**

இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாட்டுப் பத்திரிக்கைகளெல்லாம் டென்சிங்கு, ஹிலாரி ஆகிய இருவரது படங்களையும் வெளியிட்டு விசேஷ மலர்கள் வெளியிட்டன. அமெரிக்கப் பத்திரிக்கையான **'நியூ யார்க் டைம்ஸ்'** பனிமலைப்புலி டென்சிங்கும், எட்மண்டு ஹிலாரியும் **சர் வால்டர் ராலே, சர் பிரான்சிஸ் டிரேக்** போன்று சரித்திரப் புகழடைந்த வீரர்கள் என்று எழுதி இருக்கிறது. இங்கிலாந்தின் தலை சிறந்த பத்திரிக்கைகளில் ஒன்றான இலண்டன் **'நியூஸ் கிராணிகிள்' 'எவரெஸ்டு வீரன் டென்சிங்கு கதை'** என்ற புதியதொரு தலைப்பில் டென்சிங்கின் வரலாற்றை எழுதி விசேஷ மலர்கள் வெளியிட்டது. உலகில் உள்ள எல்லாப் பத்திரிக்கைகளிலும் எவரெஸ்டு வெற்றி பற்றிய பாராட்டுதல்கள் வந்த வண்ணமாக இருந்தன. வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களில் **இந்தியப் பிரதமர் நேரு, அபுல் கலாம் ஆசாத், இராசேந்திரப் பிரசாத், டாக்டர் சியாமப் பிரசாத் முகர்ஜி, எலிசபெத் அரசி, எடின்பர்க் கோமகன், வின்ஸ்டன் சர்ச்சில்** முதலியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார்கள். எவரெஸ்டு வெல்லப்பட்டதன் நினைவாக இந்திய அரசாங்கம் **தபால் தலைகள்** வெளியிட்டது. டென்சிங்கு எவரெஸ்டை வென்ற

வெற்றியைப் பாராட்டுவதற்காக ஆஸ்திரேலியர் தாங்கள் அண்மையில் கண்டுபிடித்த ஒருவகைக் கோதுமைக்கு **'செர்ப்பாக் கோதுமை'** என்று பெயரிட்டிருக்கிறார்கள். **'தோன்றிற் புகழொடு தோன்றுக'** என்ற வள்ளுவரின் பொன்மொழிக்கு இணங்க செர்ப்பா டென்சிங்கு தமக்கேயன்றி தாம் தோன்றிய குடிக்கும், குலத்திற்கும், நாட்டிற்கும் உலகில் நிரந்தரமான புகழை நிலை நிறுத்திவிட்டார்.



# 7. இமயமும் தமிழரும்

## 'பாரதி வாக்கு

'மன்னும் இமயமலை எங்கள் மலையே'
'வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்'

என்று தமிழ்க்கவி பாரதியார் முழங்கினர்.

இவ்வரிகள் தமிழ் மன்னர்கள் இமயம் வரைத் தங்கள் ஆட்சியைப் பரப்பியிருந்தனர் என்பதையும், அம்மலையின் உயர்வரையின் உச்சிமீது தமதுகுல இலச்சினைகளாகிய வில், புலி, கயற் கொடிகளைப் பொறித்தனர் என்பதையும் நினைவுபடுத்துவதாக அமைந்திருக்கின்றன.

இன்றைய நிலையில் இமயம்வரைத் தமிழர்கள் ஆட்சி செய்தனர் என்பதையும், அதன் மணிமுடியில் தமது குல இலச்சினைகளைப் பொறித்தனர் என்பதையும் சிலர் நம்ப மறுக்கலாம். ஆனுல் பழங்கால நூல்களில் காணும்பற்பல ஆதாரங்களைக்கொண்டு இவ்வுண்மையை ஆராய்வோம்.

## இலக்கியங்கள்

புராண காலத்தில் விளங்கிய தென்னுட்டு மன்னர்களான இராவணன், பத்மாசூரன், மாந்தாதாமுதலியோர் இமயப் பகுதிகளுக்குச் சென்று தவம் செய்தனரென்று அறிகிறோம். இமாலயப் பகுதிகளில் சிலவற்றை அவர்கள் தவம் செய்த இடங்களாக இன்றும் இமாலயக் குடிமக்கள் காட்டி வருகின்றனர். சைவ அடியாராகிய அப்பர்சுவாமிகள் கைலை சென்ருர் என்று அறியப்படுவதோடு, கைலைத் திருத்தாண்டகம் என்ற முப்பது

செய்யுட்கள் அவரது தேவாரங்களில் காணப்படுகின்றன. மற்றும் சைவ அடியாராகிய சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு கயிலை சென்று அங்கு தாம் பாடிய திருக்கைலை ஞான உலா என்ற நூலை அரங்கேற்றம் செய்தாரென்று நூல்கள் கூறுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டனவாகிய சங்க நூல்களில் இறுவரை இமயம், இமயத்து மாமழை, விளங்கொளி இமயம், எல்லுறு மாலை இமயம், பனிவேய் நெடுங்குன்றம், இமயத்து மரகதப்பாறை, கழைவளர் இமயம், இமயத்துப் பிறந்த வயிரச்சாதி, இமயத்து யானை, இமயத்து நீலப்பைஞ்சுனை, இமயச் செவ்வரைச் சிமயச் சென்னித் தெய்வம், பனிவேய் நெடுங்குன்றம், இமயத்துப் பல்லானிரை, இமயக்கோடு, இமயக்கல் என்பனபோன்ற இலக்கியத் தொடர்கள் காணப்படுகின்றன.

இத்தொடர்கள் இமயமலையின் வரைகள் தாமே சரிந்து சாய்தல், இமயத்தில் பெய்யும் பெருமழை, இமயப் பனிவரைகள் இயற்கையாகவே ஒளிதந்து விளங்குதல், இமயச் சிகரங்களில் என்றென்றும் நீங்காது பனிமூடிக் கிடத்தல், இமயக் கற்கள் பச்சை, மஞ்சள், சிவப்பு முதலிய நிறங்களுடையனவாக இருத்தல் முதலிய இயற்கைத் தன்மைகளையும் அங்கு காணப்படும் மர வகைகள், விளைபொருள்கள், விலங்குகள், சுனைகள், தெய்வம் முதலியவைகளையும் மிகத் தெளிவாகக் கூறுகின்றன. எனவே அக்காலத்திலேயே தமிழர்கள் இமயத்தினையும் அதன் தன்மைகளையும நன்கறிந்திருந் தனர் என்பது விளங்கும்.

**சேரன்**

சேரமன்னர்களுள் ஒருவன், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் என்றும், குமரியொடு வடவிமயத்து ஒரு மொழிவைத்து உலகாண்ட சேரலாதன் என்றும் புகழப் படுகிறான். இதன் பொருள் தென்னுடாகிய தன்னுட் டுடன் வடக்கே இமயம்வரைத் தன் ஆணை செல்லச் செங்கோலோச்சியவன் என்பதாம். இம்மன்னனது மூத்த மகனாகிய சேரன் செங்குட்டுவன் பத்தினித்தெய்வ மாகிய கண்ணகிக்கு உருவச்சிலை அமைப்பதற்குச் சிறந்த கல்லை எடுத்துவர இமயம் சென்றான் என்றும், அது போது இமயத்து உச்சியில் தன் விற்கொடியைப் பொறித்தான் என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன.

**சோழன்**

சோழ மன்னர்களில் தலைசிறந்தவனாகிய கரிகாற் பெருவளத்தான் என்ற **திருமாவளவன்** தனதுஅண்டை நாட்டு மன்னர்களனைவரையும் வென்ற பின்னும் மன அமைதியுறாமல் வடநாட்டை நோக்கிப் படையெடுத்து அங்கிருந்த எல்லா நாடுகளையும் வெற்றிகொண்டு இமயம் வரைச் சென்றான். மேலும் வெற்றி தேடி வடக்கே செல்லக்கருதிய அம்மன்னனது வழியில் இமயம் குறுக்கிட்டது. தன் கருத்தையும் முன்னேற்றத்தையும் தடுத்த அம்மலையைத் தண்டிக்கக் கருதிய அவ்வேந்தன் அம்மலையின் உயர்வரையின் உச்சிமீது தனது குல இலச்சினையாகிய புலிப் பொறியைப் பொறித்து மீண்டான். அவ்வாறு இமயம்வரைச்சென்ற அம்மன்னன் திரும்பும்போது வச்சிரநாட்டு (சோணைநதி சூழ்ந்த தற் காலத்து பீகாரின் வடபகுதி) மன்னன் வளவனுக்கு ஒரு **கொற்றப்பந்தரை** வெகுமதியாகக் கொடுத்தான். அதனை

யடுத்த தென்பகுதியாகிய மகதத்தை ஆண்ட மன்ன னுடன் போரிட்டு **பட்டிமண்டபத்தைக்** கைப்பற்றினான். அவந்தி நாட்டு (மத்திய இந்தியா) மன்னன் மகிழ்ச்சி யோடு **தோரணவாயிலைக்** கொடுத்தான். சோழன்கிடைத் தற்கரிய அப்பொருள்களைத் தனது தலைநகராகிய காவிரிப் பூம்பட்டினத்தில் பலரும் காணக் காட்சிப் பொருள்களாக வைத்திருந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

**பாண்டியன்**

பாண்டிய மன்னர்களில் ஒருவனான உக்கிரகுமார பாண்டியன் தனது மீனக் கொடியை இமயத்தில் பொறித்தான் என்றசெய்தியை வைணவ அடியார்களுள் ஒருவராகிய பெரியாழ்வார் **'பருப்பதத்துக்கயல் பொறித்த பாண்டியர்தம் குலபதி'** என்று கூறுகிறார். இதே செய்தியைச் சிறந்த புலவரும் அரசருமாகிய அதிவீரராம பாண்டியன் **'வலனுயர்ந்த அண்ணலஞ்சேல் வான்தொடு பொற் கோட்டிமய வரையில் தீட்டி'** என்ற சொற்றொடரால் குறிப்பிடுகிறார்.

இங்ஙனம் முடியுடை வேந்தராகிய தமிழ் வேந்தர் கள் மூவரும் இமயமலையின் உயர்ந்த முடியில் தமது இலச்சினைகளைப் பொறித்தனர் என்பதைத் **'தென் தமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்தவழும் இமய நெற்றியில் விளங்கு வில் கயல் புலி பொறித்த நாள்'** என்று ஒருசேரக் கூறியும் சிலப்பதி காரம் சிறப்பிக்கின்றது.

மேற்கூறிய பற்பல இலக்கியஆதாரங்களைக்கொண்டு நோக்கும்போது தமிழ் வேந்தர்கள் இமயமலையின் உயர்ந்த முடியில் தமது குல இலச்சினைகளாகிய வில்,

புலி, கயல்களைப் பொறித்தனர் என்பது உறுதியாகிறது இனி, தமிழ் வேந்தர்கள் தம் இலச்சினைகளைப் பொறிக்க எவ்வழியாகச் சென்றனர் என்பதையும் நோக்குவோம்.

## தமிழர் வழி

சோழன் கரிகாலன் இமயம் சென்று திரும்பிய பொழுது வச்சிரநாட்டு மன்னனிடம் கொற்றப்பந்தர் பெற்றான் என்று அறியப்படுதலால், கரிகாலன் சென்ற இமயப் பகுதி வங்காளத்தின் வடபகுதியாகிய வச்சிர நாட்டுக்கு அருகேயுள்ள சிக்கிம், பூட்டான் இராச்சியங்களுக்கு இடையேயுள்ள மலைப்பகுதியே ஆதல்வேண்டும். டார்ஜிலிங்குக்கு வடகிழக்கே சுமார் முப்பது மைல் தூரத்திலுள்ள சும்பிப்பள்ளத்தாக்குக்குச் செல்லும் வழியில் பெரியதொரு கணவாய், சோழர் கணவாய் (Chola Pass) எனவும், சோழ மலைத்தொடர் (Chola Range) என்றதொரு மலைத்தொடரும் இன்றும் உள்ளது. இப்பெயர்கள் பத்திரங்களிலும், நிலப்படங்களிலும் நெடுங்காலமாக வழங்கிவருகின்றன. இந்தக் கணவாய் திபெத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே ஒரு பெருவழியாய் அமைந்துள்ளது. 1921ல் இருந்து 1951 வரை நடந்த எவரெஸ்டு மலையேற்ற முயற்சிகளனைத்தும் இவ்வழியாக அமைந்த சும்பிப் பள்ளத்தாக்கில் நுழைந்து லக்பா கணவாயின் வழியாகத்தான் எவரெஸ்டு சென்றன எவரெஸ்டுக்கு வெகுஅருகில் தென்மேற்கே சுமார் ஏழு மைல் தூரத்தில் சோழகோலா (Chola Khola) இம்ஜ கோலா (Imja Khola) என்ற இரு கணவாய்கள் இருக்கின்றன. '**லா**' என்பது திபெத்திய மொழியில் கணவாயைக்குறிக்கும். அவற்றுள் '**சோழ கோலா**' என்பது

சோழர்-கோ, சோழ மன்னர் கணவாய் என்று பொருள் படும். **'இம்ஜ கோலா'** என்பதும் தம்ஜ கோலா, தமிழர்-கோ-கணவாய், தமிழ் மன்னர் கணவாய் என்றதன் மரூஉவாக இருக்கலாம். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் குலோத்துங்கசோழனது முதன்மந்திரியாகிய **சேக்கிழார்**, வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதிய பெரிய புராணத்தில், பல இடங்களில் சோழ மன்னர்கள் இமயத்தின் உயர்ந்த சிகரத்தில் புலி இலச்சினையைப் பொறித்தனர் என்று கூறுகின்றார். அவற்றுள் ஓர் செய்யுள் 'சோழன் இமயமலையின் உச்சிமீது தனது புலி இலச்சினையைப், பொறிப்பதற்காக முயன்ற காலத்து, வீரர்கள் செல்லப் பழைய வழிகள் ஏற்றதாக இராமை கண்டு, மலைகளை வெட்டிப் புதிய வழியமைத்தான்; அவ்வழி துன்பமற்றதாகவும் செம்மையாகவும் இருப்பது கண்டு. வேறு வழிகளில் நடந்த அம்மலை வாழ் மக்களில் பலரும், தாம் நடந்த வழிகளைக் கைவிட்டுச் சோழன் அமைத்தவழியிலே நடந்ததால் இமயத்தின் வேறுவழிகள் நடப்பாரற்றுஅடைபட்டுப்போயின'* என்றுகூறுகிறது.

மேலே கூறியவற்றால் சோழமன்னர்கள் இமயத்தில் தமது புலிப்பொறியைப் பொறிக்க மலையேற்றம் செய்துள்ளனர் என்பதையும், எவ்வழியாகச் சென்றனர் என்பதையும் அறிந்தோம். இனி, இமயச் சிகரங்களுள் எச்சிகரத்தில் தமது இலச்சினைகளைப் பொறித்தனர் என்பதை ஆராய்வோம்.

---

* 'பொன்மலை புலிநின்றோங்கப் புதுமலை யிடித்துப் போற்றும்
அந்நெறி நெறியேயாக அயல்வழி அடைந்த சோழன்
மன்னிய அநபாயன் சீர் மரபின்மா நகரமாகும்
தொன்னெடுங் கருவூரென்னும் சுடர்மணி வீதி மூதூர்.'

—எறிபத்த நாயனார் புராணம்.

சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில், சோழன் இமயத்தின் தென் பகுதியில் மிக உயர்ந்துள்ள ஓர் சிகரத்தில், தனது இலச்சினையைப் பொறித்தான் என்று கூறியுள்ளது. உலகின் மிக உயர்ந்த சிகரமாகிய எவரெஸ்டு, இமயத்தின் தென்பகுதியில் சிக்கிம் பூட்டான் இராச்சியங்களுக் கருகில் தான் இருக்கிறது. இமய நெற்றி, இமயப் பிடர்த்தலை, வான்தொடு பொற்கோடு, குலகிரியின் கொடுமுடி என்று சிறப்பிக்கும் இவ் விலக்கியத் தொடர்கள் இமயத்தின் மிக உயர்ந்த சிகரமாகிய எவரெஸ்டைக் குறிக்குமேயன்றி வேறொன்றனை யும் குறிக்காதென்பது வெளிப்படை. அக்கால நிலையில் இமயத்தின் உயர்முடியை இங்ஙனம்தான் கூறமுடியு மென்பதை அறிஞர்கள் அறிவார்கள். எவரெஸ்டு உச்சிக்குத் தென்மேற்கே ஏழாவது மைலில்உள்ள சோழ கோலா, இம்ஜா கோலா என்ற இரு கணவாய்களின் வழியாகத்தான் 1953-ல் ஏறி வெற்றிகண்ட எவரெஸ்டு குழுவினர் சென்று திரும்பினர், என்ற உண்மையும் இக் கருத்துக்குத் துணை செய்வதாய் இருக்கின்றது. எனவே இமயச் சிகரங்களில் மிக உயர்ந்ததும் தென்பகுதியில் உள்ளதுமாகிய எவரெஸ்டு சிகரத்தில்தான் தமிழரசர்கள் தம் வில், புலி, கயல் இலச்சினைகளைப் பொறித்தனர் என்பதை ஐயமறத் தெளியலாம்.


இனி தற்காலத்தில் உள்ள புதுமுறை அறிவியல் கருவிகளின்றி எவரெஸ்டில் ஏறி வெற்றிபெறமுடியாதே? இங்ஙனமிருக்க அக்காலத்துத் தமிழ் வேந்தர்கள் எவரெஸ்டு சிகரத்தை எவ்வாறடைந்தனரென்ற ஐயம் எழலாம். ‘எவரெஸ்டை வெல்லுவதற்கு உடற் பழக்கம் மிக மிக முக்கியமானது. உடல் ஒத்துதவி செய்யா

விட்டால் எவ்வித சாதனங்கள் இருந்தும் பயனில்லை. உடற்பழக்கம் அமைவதைப் பொறுத்துதான் வெற்றியும் தோல்வியும் இருக்கிறது; என்று எவரெஸ்டு வீரர் டென்சிங்கு கூறினர். மிக உயரப் பகுதிகளில் வாழ உடல் பழகிக்கொண்டால் பிராணவாயு சாதனம் இன்றியும் உச்சியை அடையமுடியும்; என்று இரட்லெட்ஜ் கருதினர். அவர் தமது எவரெஸ்டு முயற்சியில் பிராணவாயுக் குப்பிகளைப் பயன்படுத்தாமலும் முயற்சி செய்தார். 1952-ல் டென்சிங்கு, லாம்பெர்ட்டு என்பவருடன் பிராணவாயு முதலிய வேறு உதவியின்றிச் சுமார் 28100 அடி உயரம் வரை ஏறியிருக்கின்றனர். இவற்றால் பழங்கால மக்களின் உடலுரமும் பழக்கமும் அவர்கள் ஏறுவதற்கு உதவியாக இருந்து வெற்றியளித்திருக்குமென்பதைத் திண்ணமாக நம்பலாம்.

சேரநாட்டு இளவரசராக இருந்த ஆசிரியர் இளங்கோவடிகள் 'கயலெழுதிய இமய நெற்றியில் அயலெழுதிய வில்லும், புலியும்' என்று தெளிவுபடக் கூறுதலால் இமயத்துச்சியில் தமது குல இலச்சினைகளைப் பொறித்த தமிழ் வேந்தர்கள் மூவரிலும், பாண்டியர்தான் முதன் முதலாக இமயமால் வரையின் மணி முடியை வென்றனர் என்பதும், மற்றைச் சேர சோழர்கள், பாண்டியரைப் பின் பற்றி அவர்கள் சென்ற வழியே தாமும் சென்று கயற் பொறிக்கு அருகே தமது வில், புலிப் பொறிகளை இமயக் கல்லில் செதுக்கி வைத்தனர் என்பதும், தெளிவாகிறது. தற்காலத்தில் நடந்த மலை யேற்றத்தில் கொடிகளை நாட்டி வந்ததையும், முற்கால மன்னர்கள் இமயக் கல்லில் தம் இலச்சினைகளை வெட்டி வைத்த

தையும் எண்ணிப் பார்க்கும் போது, நாம் அவற்றின் அருமை பெருமைகளைப் பாராட்டாமலிருக்க முடியாது.

மேற் காட்டிய பற்பல ஆதாரங்களால் உலகில் முதன் முதலில் இமயத்தின் இயற்கைத் தன்மைகளை உணர்ந்தவரும், இமயத்து உயர்வரையின் உச்சி மீது ஏறி நின்று இமயத்தை வென்றவர்களும் தமிழர்களே என்பது குன்றிலிட்ட விளக்குப் போல் விளங்குகிறது.



# 8. இமாலய மக்கள்

## மலை மக்கள்

எவரெஸ்டு மலையேற்றத்தில் இமாலய மக்களுக்கு முக்கிய பங்குண்டென்பதை யாரும் மறுக்க முடியாது. போக்கு வரவிற்குப் பெரிதும் உதவும் இம் மலைவாசிகள் மலையேற்றத்திற்கு முதுகெலும்பாக அமைந்திருக்கிறார்கள். இம் மலைவாசிகள் உடலுரமும் ஊக்கமும் அன்பும் மகிழ்ச்சியும் தைரியமும் உடையவர்களாவார்கள். மிகுதியான உணவு, உடை கொடுத்து நல்ல முறையில் நடத்தினால் உண்மையாகப் பாடு படுவார்கள். தங்கள் தலைவனை விரும்பினால் மிக்க அன்போடு பணிந்து வேலை செய்கின்றனர். வெறுத்தால் தங்கள் வேலைகளை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று நினைத்தாலுங்கூடச் சரிவரச் செய்வதில்லை. இவர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்யும் கடின உழைப்பாளிகள். கள்ளமில்லாப் பிள்ளையுள்ளம் படைத்தவர்கள். இவர்களில் ஆண்களேயன்றிப் பெண்களும் சிறந்த உழைப்பாளிகளாக விருக்கின்றனர். ஒரு சமயம் ஒரு பெண் 40 பவுண்டு நிறையுள்ள சுமையையும் தனது குழந்தையையும் தூக்கிக்கொண்டு 17000 அடியிலிருந்து 19000 அடிவரை ஏறி இறங்கிய பின்னும், களைப்பின்றி இன்னும் அவசியமானால் பாரம் தூக்கிச் செல்லுகிறேன் என்று கூறினாளாம். இவர்கள் எவ்வித உதவியும் வேண்டாது 27000 அடிவரை சுமைகளைத் தூக்கிக்கொண்டு மலை ஏறுகின்றனர். எவரெஸ்டு மலை ஏற்றத்தில் பெரும்பாலும் நேபாள வாசிகளாகிய செர்ப்பாக்களும், சிறுபான்மை திபெத்தியர்களுமே வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

**செர்ப்பாக்கள்**

செர்ப்பாக்கள் பெரும்பாலும் திபெத்தியர்களை ஒத்தே இருக்கின்றனர். செர்ப்பாக்கள் ஒருவகை மங்கோலிய இனத்தினர். அவர்கள் ஓரளவு தெற்கு திபெத்திலும் கிழக்கு நேபாளத்திலும் டார்ஜிலிங்கிற்கு அண்மையிலும் வாழ்ந்து வருகின்றனர். செர்ப்பாக்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருந்தாலும் கவுரவத்தோடும் உரிமையோடும் வாழ்கிறார்கள்.

இவர்கள் வாழுமிடங்கள் சேரிகளைப் போன்று காட்சியளித்தாலும் மிகவும் தூய்மையாக இருக்கின்றன. செர்ப்பாக்களில் பெரும்பாலார் தமது வீடுகளைக் கற்களாலும் மண்ணாலும் கட்டிக்கொள்ளுகின்றனர். அவர்களது வீடுகளிலெல்லாம் அநேகமாக மாடிப்பகுதிகள் அமைந்திருக்கும். மாடிப்பகுதிகளில் செர்ப்பாக் குடும்பத்தினர் வசிக்கின்றனர். கீழே உள்ள இடங்களில் அவர்கள் வளர்க்கும் மாடு, குதிரை, கன்று, கோழி முதலியவைகள் இருக்கின்றன. வீடுகளில் அறைகள் அமைந்து மேல் தளம் சற்று உயரமாகவே இருக்கும். சன்னல்களும் நிலத்தின் கீழ்ப்பரப்பும் மரத்தினால் அமைக்கப்பட்டிருக்கின்றன. வீடுகளில் எப்போதும் கணப்புச் சட்டிகள் எரிந்து கொண்டிருக்கும். அவர்களது இல்லங்களில் மூங்கிற்பாய்கள் பரப்பப் பட்டிருக்கும். ஒவ்வொரு செர்ப்பாவினுடைய வீட்டிலும் அமர்வதற்கும் படுப்பதற்குமாகக் கட்டில்களிருக்கின்றன. அறையின் ஒரு பக்கத்தில் தானியங்கள், உழவுக்கான கலப்பை முதலான உழவுக் கருவிகள் வைக்கப்பட்டிருக்கும். தங்களுடைய இல்லங்களைச் சூழ, சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் மற்றும் கேட்டறியாத பல வண்ணப் பூக்களை

வைத்து வளர்க்கிறார்கள், இவர்களுக்கு மலர் மிகவும் பிடித்தமான பொருள். இவர்களில் பெரும்பாலோர் வறுமை வாழ்வு நடத்துவோர்களாக இருந்தாலும் தொழிற்சாலைகளில் கூலிகளாகவோ, பிச்சை எடுப்பது போன்ற இழி தொழில்களையோ, செய்வது கிடையாது. இவர்கள் தங்களை மலைமக்கள் என்று கூறிக்கொள்ளு கின்றனர். செர்ப்பாக்களுக்குத் தனியே மொழி இருக் கின்றது. அவர்களனைவரும் தங்களது தாய்மொழியைப் பேசுகின்றனரெனினும், திபெத்திய மொழியை நன்கு தெரிந்திருக்கின்றனர். இவர்கள் திபெத்தியர்களைப் போன்றே ஆடையணிதல், வேறு பழக்க வழக்கங்கள், கடவுள் வணக்கம் முதலியவைகளைக் கைக்கொண் டுள்ளனர்.

இவர்கள் மிகுந்த தெய்வப் பற்றும், மதத் தலைவர் களிடத்து அளவு கடந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர்கள். கடமையுணர்ச்சி யுடையவர்கள். தங் கள் குழுவின் நண்பர்களுக்காக உயிரையும் வழங்கு மளவு நட்புணர்ச்சி பூண்டவர்கள். செர்ப்பாக்கள் உண்மை யான மக்கள். கள்ளங் கபடு அறியாதவர்கள். உழைத்து வாழும் விருப்பமுடையவர்கள். தாங்கள் நினைத்ததை நினைத்த வண்ணமே கூறுவது, செய்வதென்ற மேலான பண்புடையவர்கள். இவர்களுக்குள் எப்பொழுதாவது மனவருத்தம் ஏற்பட்டால் உடனே அடித்துக் கொண்டு போரிடுவார்கள். 'நீர் கிழிய எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்' என்ற முதுரைக்கேற்ப அடுத்த ஐந்து நிமிடத்திற்குள் ஒருவர் முதுகில் ஒருவர் தட்டிக் கொடுத்துக்கொண்டு மகிழ்வாகத் தங்கள் வேலை களைச் செய்வார்கள். எழுத்தறிவற்றவர்களாக இருக்கும்

இவர்களது குழந்தைகளில் சிலர் தற்காலத்தில் பள்ளிக் குச் செல்கிறார்கள். சிலர் குழந்தைகளை வீடுகளிலேயே படிக்கவைக்கிறார்கள். சில குழந்தைகள் மூட்டை தூக்கும் கூலிகளாக வேலை செய்கின்றனர். டார்ஜி லிங்கில் சுமார் நானூறு செர்ப்பாக்கள் குடியிருக் கின்றனர். செர்ப்பாக்களில் பெரும்பாலோர் மலை ஏறும் குழுக்களுக்குத் துணைபுரியும் மலையேறிகளாகவும், மூட்டைகளைச் சுமந்து செல்லும் கூலிகளாகவும், வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் தெளிவாகவும், சுறுசுறுப்பாகவும், சிரித்த வண்ணமாகவும் இருக் கின்றனர். டார்ஜிலிங் முதலிய இமயப் பகுதிகளுக்கு உல்லாசப் பிரயாணம் செல்லும் செல்வர்களுக்குத் தங்கள் குதிரைகளையும் கோவேறு கழுதைகளையும் உதவி, அதற்கு வாடகை பெறுகிறார்கள். ஆண்கள் மலையேறும் குழுக்களுக்கு உதவி செய்யப் போயிருக்கும் காலங்களில் செர்ப்பாப் பெண்கள் கால்நடைகளைக் கவனித்துக் காப்பாற்றுகின்றனர்.

மலைப்பகுதிகளைச் சுற்றிப்பார்க்க வருகின்றவர் களைத் தங்கள் சிறு குதிரைகளின்மீது வைத்து செர்ப்பாப் பெண்கள் நடத்திச் செல்வது சாதாரணமான காட்சி யாகும். செர்ப்பாக்களில் சிறந்தவரான **தாவா தொண்டப்** என்பவர் பொறுமைக்காகவும் தைரியத்திற்காகவும் 1934-ல் ஜெர்மன் ரெட்கிராசைப் பெற்றார். 1939-ல் புலி பொறித்த சின்னத்தைப் பெற்றார், 1950ஆம் ஆண்டு அன்னபூர்ணா சிகரத்தில் ஏறிய **மாரிஸ் ஹெர்ஜாக்குக்கு** உதவிய **ஆங்தார்க்கே** என்ற செர்ப்பாவின் திறமை மிகவும் பாராட்டப்பட்டது. அவர்தான் செர்ப்பாக் களுள் முதன் முதலாக அயல்நாடுகள் சென்று வந்தவ

ராவார். செர்ப்பாக்களோடு பழகிய **ஆந்திரே ராச்** என்ற அறிஞர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

'செர்ப்பாக்கள் எப்போதும் ஒரே மாதிரியாய்த் தான் இருக்கிறார்கள். முகாம்களில் இருந்தால் கூடாரம் அடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள். காற்று மெத்தைகளுக்குக் காற்றடிக்கிறார்கள். சமையல் செய்கிறார்கள். அவர்கள் செய்யாத காரியமே கிடையாது. புயல் அடிக்க ஆரம்பித்தால் சூடான பானம் கொண்டு வருகிறார்கள். பனி அல்லது மழை பெய்தால் தம்முடைய அங்கிகளை நமக்குக் கொடுத்து விட்டு அவர்கள் நனைகிறார்கள். கம்பளிச் சட்டை போட்டுக் கொண்டிருக்கும் நமக்கு நடுங்கும். ஆனால் அவர்கள் வெறுஞ் சட்டைகளை அணிந்து கொண்டு தங்கள் வேலையைச் செய்கிறார்கள்' என்று கூறுகிறார். உலக வரலாற்றில் நிரந்தரமான இடத்தைப் பெற்ற எவரெஸ்டு வீரர் பனிப்புலி டென்சிங்கு நோர்க்கே இத்தகைய நற்பண்புகள் வாய்ந்த செர்ப்பாக் குடியில் பிறந்தவரேயாவார்.

**பூட்டியர்கள்**

திபெத்து நாட்டு மக்களில் ஒரு வகையினரான பூட்டியர்கள் வணிகத் தொழிலை மேற்கொண்டிருக்கி றனர். பெரும்பாலும் திபெத் நாட்டின் எல்லாவகை வணிகங்களும் இவர்கள் வசத்தில்தான் இருக்கின்றன வென்று திட்டமாகக் கூறிவிடலாம். திபெத்தின் மேற்குப் பகுதிகளில் பூட்டியர்களின் மண்டிகள் இருக் கின்றன. அங்கு அவர்கள், தாங்கள் இந்தியாவிலிருந்தும், நேபாளத்திலிருந்தும் கொண்டு போகும் வெல்லம்

புகையிலை, வறுத்த கோதுமை மாவு, வால் கோதுமை, சர்க்கரை, திராட்சை, மண்ணெண்ணெய், கூடாரம், துப்பாக்கி, அரிசி, ஆடை முதலிய பல பொருள்களைத் திபெத்தியப் பொருள்களாகிய கம்பளம், வெங்காரம், சவரிமயிர், ஆட்டுமுடி முதலியவைகளுக்குப் பண்ட மாற்று செய்து கொள்ளுகின்றனர். அவர்கள் நமது நாட்டு ரூபாய்களைப் போன்று வெள்ளியால் ஆகிய 'டாங்கா' என்ற ஒருவகை நாணயத்தை வழங்குகின்றனர். திபெத்தில் நாணயப் புழக்கம் குறைவு. டாங்காவுக்குச் சில்லரை வேண்டும் காலங்களில் இவர்கள் 'டாங்கா' என்ற நாணயத்தை முறித்துத் துண்டு செய்து கொடுக்கின்றனர். அவ்வாறு முறித்து வழங்கும்போது அங்குள்ள மக்கள் அத்துண்டுகளின் சிறுமை பெருமைகளைப் பொருட்படுத்துவதில்லை.

### திபெத்தியர்கள்

உலகிலுள்ள எல்லா பீடபூமிகளிலும் உயர்ந்தது திபெத் நாடேயாகும். இது கடல் மட்டத்திற்கு மேல் பதினைந்தாயிரம் அடி உயரத்தில், கண்ணுக்கு எட்டு மளவு எல்லையற்ற பெருவெளியாகக் கடல் போலப் பரந்து தோன்றுகிறது. மரம், செடி, கொடிகளற்ற வெறும் மொட்டை மலைகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. உயரமான மலைகளில் என்றும் உருகாத பனியடைகள் மூடிக்கிடக்கின்றன. இங்கு விளை நிலங்களரிது. மழைக்கு மாறாகத் திபெத்தில் பனிக் கட்டிகளே பொழிகின்றன. திபெத்து வரட்சியும் குளிர்ச்சியும் மிக்கநாடு. திபெத்தின் குளிர், உடலுக்குள் ஊடுருவிச் சென்று எலும்பையும் ஒடுக்கி உள்ளத்தையும் நடுக்கும் தன்மை வாய்ந்தது. குளிர்காற்றுப் படும் உறுப்புக்கள் தீயினாற்

சுட்டது போன்று தீய்ந்து கருகிவிடும். ஆகையால் திபெத்தியர் தங்கள் கால்களிலும் உடலிலும் சமரி வெண்ணெயைப் பூசிக்கொள்ளுகின்றனர். திபெத்தியர்கள் மிகவும் சுத்தமில்லாதவர்கள். இவர்கள் மண்ணால் அமைந்த சுவர்களின்மீதும், மலைச்சரிவில் குடையப்பட்ட குகைகளிலும் வீடுகளை அமைத்துக் கொள்கின்றனர். இத்தகைய ஒன்றிரண்டு வீடுகள் உள்ள இடங்களே திபெத்திய கிராமங்களாகும். இவ்வீடுகள் ஒரே துர்நாற்றமுடையனவாக - அழுக்கிற்கு இருப்பிடமாக விளங்கும். திபெத்தியர் பச்சை மாமிசத்தையுண்ணும் இயல்புடையவர்களாகையால் அவர்களது குடில்களைச் சூழ்ந்து ஏராளமான எலும்புகள் கிடக்கும்.

திபெத்தியர் செம்மறியாடு, வெள்ளாடு, யாக் என்ற சடை எருமை, ஜப்பு என்ற ஒருவகை மாடு, கோவேறு கழுதை, முதலியவைகளை வளர்க்கின்றனர். சடை எருமையின் பாலைத் திபெத்தியர் குடிக்கின்றனர். அது மிக்க தடிப்புடையது. அதன் மணமும் சுவையும் நம்மவர்க்குப் பிடிக்காது. திபெத்தியர் அப்பாலைக் கடைந்தெடுத்த வெண்ணெயைத் தோற்பைகளில் வைத்து விற்பனை செய்வர். அதன் முடை நாற்றம் சொல்லி முடியாது. திபெத்தியர் நால்வர் ஐவராகக் கூடிக்கொண்டு உப்பிட்ட தேநீரில் அவ்வெண்ணெயைக் கலந்து சிறிது சிறிதாகப் பருகி மகிழ்வர். திபெத்தியர் தங்கள் கால்நடைகளைப் பொதி சுமக்கப் பயன் படுத்துகின்றனர். திபெத்தில் தக்களக் கோட்டை ஒன்றே பெரிய ஊராகும். திபெத்தில் எங்கும் அகன்ற பாதைகளோ ஊர்களோ கிடையாது. தங்கள் குடிசைகளைச் சடை எருமையின் மயிரால் வேய்ந்துகொள்ளுகின்றனர்.

வெண்மையாக இருப்பனவற்றை வெண்சமரி என்று கூறுவர். அவைகளைச் சாமரங்களாகக்கட்டி அரண்மனை, கோயில் முதலிய இடங்களில் விசிறியாகப் பயன்படுத்து வர். கருநிறச் சமரிகளைப் பெண்கள் தங்கள் கூந்தலோடு சேர்த்து முடித்துக் கொள்ளப் பயன்படுத்துகின்றனர்.

திபெத்தியரில் பெரும்பாலோர் ஆடுமாடு மேய்க்கும் இடையர்களாகவும், சிறுபான்மையோர் வணிகர்களாக வும் வாழ்கின்றனர். வணிகராக வாழ்பவர்கள் கம்பளம், உப்பு, வெங்காரம் போன்ற பொருள்களை இந்தியப் பகுதிகளுக்குக் கொணர்ந்து விற்பனை செய்துவிட்டுத் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், உடை முதலியவைகளையும் பெற்றுச் செல்வர். திபெத்தியர்கள் பல் துலக்குவதும், நீராடுவதும், ஆடை துவைப்பதும் அரிது. அவர்கள் உடலினின்றும் ஒருவகை துர்நாற்றம் வெளிப்படும். உடையில் சடை மாட்டின் வெண்ணெய் ஊ றி க் கி ட க் கு ம். திபெத்தியர்கள் உடல்வன்மை வாய்ந்தவர்கள். குளிர்காற்றினல் அவர்களின் முகமும் கையும் கரிந்து வெறுக்கத்தக்க விகாரத் தோற்றமுடைய வர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் குளிர்காலங் களில் தங்கள் உடல் முழுமையும் சடை எருமையின் வெண்ணெயைப் பூசிக்கொள்வதோடு, தங்கள் பாதங்கள் மறையுமளவு கம்பள உடைகளையும், காலுறைகளையும் அணிந்துகொள்வர். பலர் ஆ ட் டு த் தோலினலான உடைகளையும் அணிந்துகொள்ளுகின்றனர். திபெத்தில் ஆடவர் முகத்திலும் மயிர் வளர்வதில்லை. ஆண்களும் பெண்களும் ஒரேமாதிரி உடை உடுக்கின்றனர். தலை மயிரையும் பின்னிக் கொள்ளுகின்றனர். எனவே இங்கு

ஆண் பெண் என்ற இருபாலார்க்கும் தோற்றத்தில் வேற்றுமை காண்பதரிது.

திபெத்திய ஆடவர்கள் இடக்காதில் பெரிய வளையங்களை அணிகின்றனர். மகளிர் தமது சடைகளில் சோழிகளையும், மணிகளையும் கோத்து மாலைகளாகத் தொங்கவிட்டுக் கொள்ளுகின்றனர். அவர்கள் அணியும் ஆபரணங்கள் பெரும்பாலும் வெள்ளியும், பவளமும், கஸ்தூரி மான்களின் கொம்புகளுமேயாம். திபெத்தில் ஒரே பெண்ணைச் சகோதரர்கள் பலர்கூடி மணந்து கொள்கின்றனர். இங்கு பெண்மக்கள் மிகவும் குறைவு. திபெத்தியச் செல்வர்களில் சிலர் முத்தும், பவளமும் கோக்கப்பெற்ற தலைப்பாகைகளை அணிவதுண்டு. திபெத்தியர்கள் மிக்க மதநம்பிக்கை யுடையவர்களாகையால் தம்மைப் பேய்பிசாசுகள் தீங்கு செய்யாதிருத்தற் பொருட்டு மந்திரம்பொறித்த கவசங்களையும், செபமாலைகளையும் கழுத்தில் அணிந்து கொள்ளுகின்றனர். அந்நாட்டுப் பெண்கள் தங்களது முகத்திலுண்டாகும் பனிப் புண்களை மறைக்கப் பனைவெல்லத்தைப் பூசிக்கொள்ளும் காட்சி பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பாயிருக்கும். ஆடவரும் பெண்டிரும் தக்கிளியால் நூல் நூற்பர். எலும்பினுல் செய்த ஊசிகளைக் கொண்டு கையுறைகளையும் பின்னுவர். திபெத்தில் விறகு கிடைக்காது. ஆதலால் திபெத்திய மகளிர் தமது முதுகில் கூடை ஒன்றைக் கட்டிக் கொண்டு ஆடு, குதிரை, கழுதை, சடை எருமை முதலியவற்றின் சாணங்களைப் பொறுக்கி உலர்த்தி அடுப்பெரிக்கப் பயன் படுத்துவர். திபெத்தியர் தங்களது ஆடு மாடுகளுக்கு எங்கு புல் அகப்படுமோ அங்கு சென்று கூடாரம் அமைத்துக் கொள்வர். அவர்களால்

வளர்க்கப்படும் ஆடுமாடுகள் கல் வளைகளில் அரிதாகக் கிடைக்கும் அற்பப் புற்களையும் விடாது மேய்ந்து உயிர் வாழ்கின்றன.

திபெத்தியர்களால் பேசப்படும் மொழி பர்மியத் தொகுதியைச் சேர்ந்ததென்றும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தொம்மிசம் போதனால் தோற்றுவிக்கப் பட்டதென்றும் கூறுகின்றனர். இம்மொழியைப்பௌத்தலாமாக்கள் வளர்த்து வருகின்றனர். திபெத்தியரில் கற்றவர்கள் மிகக் குறைவு. திபெத்தியக் குடும்பத்திலுள்ள ஒருவர் இருவர் சந்நியாசிகளாகி விடுகிறார்கள். பௌத்த சந்நியாசிகள் **லாமா**க்கள் எனப்படுவர். இவர்கள் பௌத்த மடங்களில் புத்தரது படங்களை வைத்துப் பூசிக்கின்றனர். மடங்களிலும் 'ஓம் மணி பத்மேகும்' என்ற மந்திரத்தை உச்சரிக்கின்றனர். தாமிரத்தால் நாழிபோல் செய்யப்பட்டுக் கைப் பிடியமைத்த, தரும ச க் க ர ம் ஒன்றைக் கையிற் கொண்டு சுற்றுகின்றனர். மலைகளிலும், வழிகளிலும், குகைகளிலும் இம் மந்திரத்தை எழுதி வைத்திருக்கின்றனர். சிற்சில இடங்களில் கற்களைக் குவித்து அக் குவியல் நடுவே உயரமானதொரு கல்லை நிறுத்தி அதில் செம் மண்ணைப்பூசி அதனருகில் பல வண்ணத் துணிகளைக் கட்டிவைப்பர். திபெத்தியர்கள் இளவேனிற் காலங்களில் விழாக் கொண்டாடுகின்றனர். அதுபோது பௌத்த லாமாக்கள் தங்களைப் பட்டாடைகளால் அலங்கரித்துக் கொண்டுவந்து மந்திரம் செபிப்பர். திபெத்தியர்கள் அழுக்கில் மூழ்கி இருப்பினும் அங்குள்ள லாமாக்கள் தூய்மையோடு காணப்படுகின்றனர். திபெத்திய ஆட்சிகள் அதிகாரங்களனைத்தும் லாமாக்கள் வ ச ம் தா ன் இருக்கின்றன. மடாதிபதியாக விளங்கும் தலைமை

லாமாவே அந்நாட்டின் சர்வாதிகாரியாவார். அரசியலைக் கவனிக்கப் பல அதிகாரிகளும் இருக்கின்றனர். அந்நாட்டு ஆட்சி பெரும்பாலும் அமைதியாகவே நடைபெறுகிறது.





எவரெஸ்டு வீரன், பனிப்புலி

சேர்ப்பா டென்சிங்கு நோர்க்கே, G. M.

# 9. டென்சிங்கு

**மலை நாடு**

கிழக்கு நேபாளத்திலுள்ள மூன்றுவது மாவட்டமான ஓகல் தூங்காவிலுள்ள சோலோகும்பாவைச் சேர்ந்த தாமி கிராமத்தில் 1914-ம் ஆண்டில் டென்சிங்கு பிறந்தார். அங்கு அவருக்குப் பயிர்த் தொழிலுக்கான கொஞ்சம் நிலமும் சொந்த வீடும் இருக்கிறது. அக்கிராமம் புது உலகில் காணப்படும் பற்பல அற்புத வசதிகளெல்லாம் இல்லாது உழவுத் தொழிலிலும் பழமைப்பண்பும் வாய்ந்த மலைநாட்டைச் சார்ந்ததாகும். அங்கு வாழ்பவர்கள் பெரும்பாலும் செர்ப்பாக்களே. அவர்கள் மலைநாட்டு வணிகர்களுக்குக் கூலிகளாகப் பணி புரிபவர்களாவார்கள். டென்சிங்கின் பாட்டனார், தகப்பனார் முதலியவர்களும் அமைதியான உழவுத் தொழிலைச் செய்ததோடு, திபெத்திற்கும் நேபாளத்திற்கும் வணிகம் நடத்தும் பூட்டிய வணிகர்களுக்குக் கூலிகளாகப் பணி புரிந்தவர்களே யாவார்கள்.

அங்குள்ள வணிகர்கள் தங்கள் வணிகப் பொருள்களைச் சிறு சிறு சுமைகளாகக் கட்டிச் சுமை தூக்கும் கூலியாட்களைக் கொண்டும், குதிரை, கழுதை, யாக் என்னும் மிருகங்களின் துணைகொண்டும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு எடுத்துச்செல்வர். பழங்கள், தானியங்கள், சர்க்கரை முதலிய உணவுப்பொருள்களையும், துணி, மண்ணெண்ணெய் போன்ற வேறு பொருள்களையும் நேபாளத்திலிருந்து திபெத்திற்குக் கொண்டுபோய் விற்றுவிட்டு, அங்கிருந்து உப்பு, ஆட்டு முடி, மற்றும் மலைப் பகுதியில் கிடைக்கும் வேறு

பொருள்களையும் வாங்கிவருகின்றனர். தாமிக்கருகில் 19000 அடி உயரத்திலுள்ள நங்கபாலாக் கணவாயின் வழியாகப் பெரும்பாலும் கூலிகள் முதுகில் மூட்டைகளைச் சுமந்து செல்கின்றனர். இங்ஙனம் முதுகில் மூட்டையைச் சுமந்துகொண்ட கூலிகள் அதற்கு ஆதரவாக ஒரு நாடாவை நெற்றியின்மீது கட்டிக் கொள்ளுகின்றனர்.

## இளமைப் பருவம்

டென்சிங்கின் இளமைப் பருவமும் இத்தகைய கூலி வாழ்க்கையில் தான் தொடங்கிற்று. அவருக்குச் சிறுவயதில் எழுதப் படிக்கத் தெரியாது. அவரது ஊரிலோ அதற்குப் பக்கத்திலோ மருந்துக்குக் கூடப் பள்ளிக் கூடங்கள் கிடையாது. ஆனாலும் அவர் எப்படியாவது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வமுடையவராய் இருந்தார். சிறந்த சுறுசுறுப்பும் சுதந்தர மனப்பான்மையும் கொண்ட டென்சிங்கு, இத்தகைய அடிமைக் கூலியாக இருந்து வாழ்வதை விரும்பவில்லை. பற்பல சமயங்களில் ஊரிலிருந்து கரடி, புலி முதலியவைகளை வேட்டையாடப் புறப்படும் குழுக்களில் சேர்ந்து, வேட்டையாடப் போய்விடுவார். இவர் தம் பெற்றோர்களுக்கு அடங்காது பிடிவாதம் செய்யக் கூடியவராக இருந்தாலும் தாய் தந்தையரிடத்து மிக்க மதிப்பும், மரியாதையும் கொண்டவராயிருந்தார்.

## ஓடிவிட்டார்

நேபாளத்திலிருந்த செர்ப்பாக்களில் பலர் வறுமை காரணமாகத் தம் தாய்நாட்டைவிட்டு இந்திய நாட்டுப் பகுதிகளான டார்ஜிலிங் முதலிய இடங்களில் சென்று

**இளைய டாப்ஜை** என்ற செர்ப்பாவும் வசித்துவருகிறார். டென்சிங்கின் தாய், தந்தையர்கள், தமது தாய் நாடாகிய நேபாளத்தில், எவரெஸ்டு மலைப் பகுதிகளின் அருகி லுள்ள தமது சொந்த ஊராகிய தாமியிலே இருக்கின் றனர். இவரது ஒரே தங்கை புத்த சந்நியாசி ஒருவரை மணந்துகொண்டு எவரெஸ்டுக்குப் பதினான்கு மைல் தூரத்திலுள்ள இராங்பக் பள்ளத்தாக்கில் வாழ்கிறார்.

**உழைப்பு மிக்க டென்சிங்கு**

டென்சிங்கு மலையேறும் வேலை இல்லாத காலங் களிலும் ஓய்ந்திருப்பது கிடையாது. பூட்டிய வியாபாரி களுக்குக் குதிரை, யாக் முதலிய சுமை தூக்கும் மிருகங் களைச் செலுத்தும் 'ஜாக்கி'யாகச் செல்லுவார். இவர் **செர்ப்பா, நேப்பாளி, யோல்மா, இந்துஸ்தானி, போஸ்து, சித்ராலி, திபெத்து. சிக்கிமெஸ், ஆங்கிலம்** ஆகிய மொழி களில் நன்கு பேசுவார். இவர் புத்த மதத்தினர். கூர்த்த மதியும், திடமானதும், பொருத்தமானதுமான உடற் கட்டுடையவர். இவரது உயரம் ஐந்தடி எட்டங்குலம். எப்போதும் அழகிய வெண்பற்களோடு கூடிய புன்னகை யுடையவர். அமைதியான சுறுசுறுப்பும், மனஉறுதியும் உடையவர். அவரது கருப்பு மயிர் காதுகளில் பாதியை மறைத்துக் கொண்டு பிடரி வரை தாழ்ந்திருக்கும். இவரிடம் தீய பழக்கங்களான மது அருந்துவதும் புகை பிடிப்பதும் கிடையாது. ஆனால் காப்பியை விரும்பிக் குடிப்பார். அவரது மூக்கு சற்று சப்பையானது. தோற்றம் போட்டோவுக்கு மிகவும் பொருத்தமானது. டென்சிங்கு நாய் வளர்ப்பதில் மிக்க விருப்பமுடையவர். இவர் **இத்தாலியப் பேராசிரியர் டக்கியுடன்** 'லாசா. என்ற இடத்திற்குச் சென்றபோது அங்கிருந்து

'காங்கர்ட்' என்ற தமக்குப் பிடித்தமான திபெத்திய நாயைக் கொண்டுவந்து அன்புடன் வளர்க்கிறார்.

டென்சிங்கு என்றால் அறிவுடையவர் என்றும், புலி என்றும் பொருள்படும் என்று கூறுகின்றனர். இவர் பரந்த அறிவு படைத்தவர். சமையல் செய்வதில் சமர்த்தர். கடுமையான இடங்களிலும் மிகச்சிறந்த முறையில் சுவையுள்ள உணவைத் தயாரிக்கும் வன்மையுடையவர். இந்த எவரெஸ்டு வெற்றி அவரை எந்த வித மாறுபாட்டுக்கும் உட்படுத்தி விட முடியாது. இவர் மிகச்சிறந்த நாட்டுப் பற்றுடையவர் என்பதை ஹன்ட்டு குழுவில் மலையேறும்போது நான்கு முகாம் செல்லும் வரை இந்திய மூவர்ணக்கொடியை மறைத்துக்கொண்டு சென்றதும், இமயத்து உச்சியில் அக் கொடியைப் பறக்க விட்டதும் மெய்ப்பிக்கின்றன. 1947-ல் அவருடன் மலையேறிய **டென்மான்** இவரது பண்புகளைக் கூறுவதோடு மேலும், 'நான் டென்சிங்கின் குடும்பச் செய்திகள் பலவற்றையும் அறிவேன். டென்சிங்கு என்னிடம் தமது பொருளாதார நிலையைப்பற்றிக் கூறியபோது அது மனிதனை மயங்கவைக்கும் அளவு வறுமை நிறைந்திருந்தது. நான் டென்சிங்கிடம், 'நாம் எவரெஸ்டை அடைவோமா?' என்று கேட்டபோது அவர் சாதாரணமாகவும், அமைதியான புன்சிரிப்புடனும் 'நாம் முயன்று பார்க்கலாம்' என்று கூறினார். எனது பயணத்தில் மூட்டை தூக்கும் மிருகங்களுக்கும், கூலிகட்கும் உணவு உடை முதலியவற்றிற்கும், பணத்தைச் செலவு செய்த போது வீண்செலவு செய்யாமல் தனது பணத்தைப் போலவே மிகச்சிக்கனமாகச் செலவு செய்தார். நாங்கள் அபாயகரமான நிலையில் நூற்றுக்கணக்கான மைல்கள்

பிரயாணம் செய்தோம். நினைப்பதற்கரிய கொடிய தட்ப வெப்ப நிலைகளைச் சந்தித்தோம். டென்சிங்காவது, எங்களுடன் வந்த வேறொரு செர்ப்பாவாவது திருப்தி யில்லாத ஒரு சொல்லையும் சொல்லவில்லை.

திபெத்தில் நாங்கள் ஒரு காட்டாற்றைக் கடக்க நேர்ந்தபோது நானும் ஆங்டோவோ என்ற மற்றொரு செர்ப்பாவும் சிறிது வருத்தப்பட்டபோது டென்சிங்கு சிரித்துக்கொண்டே கயிற்றுப் பாலத்தில் எளிதாகக் கடந்து சென்றார். மலையேறிகளுடன் செல்லும் போது மற்றவர்களைக் காட்டிலும் மிகுதியான சுமையைச் சுமந்துகொண்டு விரைவாகச்சென்று தமக்குப் பின்வரும் வெள்ளை மனிதர்களின் வருகைக்காகக் காத்திருப்பார். நாங்கள் சென்றபோது திபெத்தின் அனுமதி கிடைக்கா மையினால் சிக்கிம், திபெத் வழியாக என்னை 23500 அடி உயரம்வரை அழைத்துச் சென்றார். **நான் அப் பொழுதே இவர் எப்போதாவது நிச்சயம் வெற்றி பெறு வார் என்பதையும், எவரெஸ்டு மலைமீது தான் முதலில் ஏறவேண்டுமென்ற பேராசையுடையவர் என்தையும் அறிந்து கொண்டேன்.** நந்ததேவியிலும் காமெட், நங்கபர்வதம், கேதார்நாத் முதலிய உயரமான மலைகளி லும் ஏறியிருக்கிறார். டென்சிங்கு ஒருவருக்குத்தான் டார்ஜிலிங்கியிருந்து லக்பா கணவாய் வழியாக எவரெஸ் டின் வடகால் பகுதிக்குச் செல்லவும், காட்மாண்டுவி லிருந்து மேல்கும்பு பனிக்குன்றின்வழியாக எவரெஸ்டின் தென்கால் பகுதிக்குச் செல்லவும் வழி தெரியும். அவருக்கு இமயமலையைப்பற்றித் தெரியாதது ஒன்றுமே கிடையாது. இறந்தவரிலும் பிழைத்திருப்பவர் களிலும், இமயமலைப் பகுதியில் மிகுதியான காலம்

இருந்தவரும் மிகுதியான உயரம் ஏறியவரும் இவரே. **தான் எவரெஸ்டு உச்சியை அடையவேண்டுமென்ற ஆசையை நிறைவேற்ற பத்தொன்பது ஆண்டுகளைச் செலவிட்ட, இவரது பெயரால் சிகரத்தை 'டென்சிங் சிகரம்' என்று கூறுவது முற்றிலும் பொருத்தமே.** இவ்வுண்மையை யாராலும் மறுக்க முடியாது. டென்சிங்கு முற்றிலும் விரும்பத்தக்க நற்குணமும், தைரியமும், உறுதியும் படைத்தவர். கர்வமற்றவர். டென்சிங்கை நினைக்கும்போது எவரெஸ்டுதான் கண்முன் வந்து நிற்கிறது. எந்தச் சரித்திரமும், சந்தேகமில்லாமல் இந்த செர்ப்பா, எவரெஸ்டு மலையேறிகள் அனைவரிலும் மிகச் சிறந்தவர், என்பதை ஒப்புக்கொள்ளும்' என்று கூறுகிறார். இத்தகைய சிறந்த வீரரது பெயரால் இமயமால் வரையின் மணிமுடியை அழகுபடுத்த வேண்டுவது இந்திய மக்களின் கடமையாகும்.

U8.27E
N53



# EVEREST

BY

VIDWAN V. SUBRAMANIAN

HEAD TAMIL PANDIT

MUNICIPAL HIGH SCHOOL, SALEM

**THE VENDHAN PUBLISHING HOUSE**

GUGAI, SALEM

COPY RIGHT 1954 PRICE RE. 0-14-0

R. RAMA & BROS., SALEM. PHONE 205 A.